ஜனவரி - 2014

ISSN 1800-1246

# அகவிழி

மனித மேம்பாட்டின் உயிர்ப்பு மிகு கல்விக்காய்...

விழி 11 பார்வை 113


- முரண்பாட்டு முகாமைத்துவம்
- சமயங்களின் ஒப்பியல் முறை சார்ந்த கற்பித்தல்
- மனித வாழ்க்கைக் காலத்தில் மிகவும் மகிழ்ச்சியான காலம் சிறுவர் காலமாகும்
- உளவியல் கற்பித்தல் துறைகளில் புதிய செல்நெறிகள்
- சிறந்த பெறுபேறு தரும் மாணவர் மையக் கல்வி
- கற்றல் கற்பித்தல் நுட்ப முறைகள்
- படைப்பாற்றல் கல்வி
- கிராமப்புற சிறார்களின் அடிப்படைக்கல்வியும் சிறுவர் உரிமையும்
- பாடசாலை மாணவரின் பண்புசார் விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகளும் நிலைபேறான மாற்றத்தை தோற்றுவிக்க அனைவருக்கும் விடப்படும் அறைகூவலும்


• சொ. அமிர்தலிங்கம் • சாந்தி சச்சிதானந்தம • அ. றியாஸ்
• பாலசுப்பிரமணியம் தனபாலன் • ச. ஆனந்தன்

www.viluthu.org

விலை: 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்பொழுது அமோக விற்பனையில்

100/- பெறுமதியான மாத சஞ்சிகையை ரூபா 75ற்கு வாங்கி பல்லாயிரம் ரூபா பெறுமதியான அறிவியல் விடயங்களைப் பெற்றுக்கொள்ள ஓர் அரியவாய்ப்பு

**இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் ஒரு பரிணாம புரட்சி**

25/= இலாபத்தில் ஜனவரி முதலாம் திகதி வெளிவரும் 'ஒளிஅரசி' சஞ்சிகையை வாங்கி கீழ்வரும் உடல், உளம், மனம், அறிவு, கல்வி, பொதுவிடயங்களை அழகாக, அளவாக, ஆனந்தமாக நுகரலாம்.


## பக்கங்களும் உள்ளடக்கங்களும்





05 – சிறப்புக்கட்டுரை – பெண்களும் பண்டிகைகளும்
06 – சிறப்பு கவிதை – என்பாதை, அகலிகை
07 – சிரிக்கலாம் வாங்க – புதிய ஜோக்ஸ்
08, 09 – இல்லறம் நல்லறமாக – ரொமான்ஸ் இரகசியம் 13
10, 11 – குழந்தை வளர்ச்சியில் பின்பற்றவேண்டியவைகள்
12, 13, 14 – நட்சத்திர இல்லத்தரசி – பல்கலைக்கழக பீடாதிபதி எம். ஐ. எஸ். சபீனா வழங்கும் அனுபவப் பகிர்வுகள்
15 – வரலாற்றில் பெண்மணி மோனிகா செலஸ் காட்டும் வாழ்க்கைப் பாடம்
16, 17, 18 – உறவுகள் சுகமானது – நெடுந்தொடர்
19 – அறிவியல் – இயற்கை அதிசயத்திற்கு ஆபத்து?
20 – குறுக்கெழுத்துப் போட்டி இல. 14
22, 23 – தொழில் வழிகாட்டி – O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட கட்டுரை
24, 25 – தன்னம்பிக்கை – யார் வெற்றி பெறுவார்கள்?
26 – அழகுக் குறிப்பு – அலுவலகத்திற்கு ஏற்ற ஆடை
27 – இயக்குனர் சிகரம் – கே. பாலசந்தர்
28, 29 – குறுங்கதை – சின்ன வீடு
30, 31 – இலக்கியதேன் – வெட்கத்தைவிட்டுவிடு
32, 33 – திகில் தொடர் – இருட்டில் வைத்தகுறி
34, 35 – உலக உலா எப்போலாவுக்கு எதிராக கியூபா மருத்துவர்களின் போர்
36 – விளையாட்டு அறிவுப் போட்டி
38, 39 – சுயதொழில் – சிப்பிக்குள் பூக்கும் வருமானம்
40, 41 – நீங்கள் நலமா? பெண்களுக்கான மருத்துவ ஆலோசனை
42 – சிறப்புக் கவிதை அம்மா, விடிவு கிடைக்குமா, என்றும் மழலை
43 – சமூகசேவை – கருணை உள்ளம் ஒரு பார்வை
44, 45 – சிறுகதை – பிரச்சினை
46 – அழகுக்குறிப்பு – பெண்களும் மூக்குத்தியும்
47 – கண்டதும் கேட்டதும் – நாகரிக மனிதர்கள்
48, 49 – கட்டுரை – மாமியார், மருமகன் உறவு
50, 51 – விந்தை உலக விடயங்கள்
52, 53 – ஜனவரி மாதம் உங்களுக்கு எப்படி?
54, 55 – அம்முவின் கேள்வி பதில்
56 – 'பிசாசு' சினிமா விமர்சனம்
57 – நட்சத்திர ஜோக்ஸ் துப்பாக்கியுடன் நடந்த திருமணம்
59 – பொது அறிவு – உங்களுக்கு தெரியுமா?
60, 61 – கடல் கொள்ளையர்கள் வரலாற்றுத் தொடர்
62 – டுவிட்டரில் கிடைத்த முத்துக்கள்
63 – தையல்கலைப் பயிற்சி – பாடசாலை சீருடை
64 – ஆன்மிகம் வித்தைக்காரனும் வியாபாரியும்
65 – இம்மாத மங்கை – சமூகத் தலைவி
66 – சுவைக்க சமைப்பது எப்படி?
67 – உண்மைச் சம்பவம் சிந்திக்க வேண்டிய திருமணம்
68 – வாசகர் உள்ளங்கள்
70 – புராணக்கதை மழலைகள் அறிய வேண்டியவை
72, 73 – தரம் 5, 4 பல்திறன் அறிவுப் போட்டி – 05
74 – மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி



**பல சிறப்புக்களை தன்னகத்தே உள்ளடக்கிய 'ஒளிஅரசி' சஞ்சிகையை மாதம் ஒன்று வாங்கி எங்கள் வீட்டில் வைப்பதால் எங்கள் குடும்பம் கௌரவம் பெறுகின்றது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்...**

இப்படிக்கு
2014 ஆம் ஆண்டுக்குரிய நட்சத்திர இல்லத்தரசிகள்.

**இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்**

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு:
077 6569617 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு:
078 8864730 / 0787 273035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவிழி
ISSN 1800-1246

# உள்ளே......


| | | |
|---|---|---|
| 1. | முரண்பாட்டு முகாமைத்துவம் | 4 |
| 2. | சமயங்களின் ஒப்பியல் முறை சார்ந்த கற்பித்தல் | 9 |
| 3. | மனித வாழ்க்கைக் காலத்தில் மிகவும் மகிழ்ச்சியான காலம் சிறுவர் காலமாகும் | 14 |
| 4. | உளவியல் கற்பித்தல் துறைகளில் புதிய செல்நெறிகள் | 16 |
| 5. | சிறந்த பெறுபேறு தரும் மாணவர் மையக் கல்வி | 17 |
| 6. | கற்றல் கற்பித்தல் நுட்ப முறைகள் | 20 |
| 7. | படைப்பாற்றல் கல்வி | 25 |
| 8. | கிராமப்புற சிறார்களின் அடிப்படைக்கல்வியும் சிறுவர் உரிமையும் | 31 |
| 9. | பாடசாலை மாணவரின் பண்புசார் விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகளும் நிலைபேறான மாற்றத்தை தோற்றுவிக்க அனைவருக்கும் விடப்படும் அறைகூவலும் | 35 |


AHAVILI
3, Torrington Avenue
Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com

அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர்
ச. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்

நிறைவேற்றுப் பணிப்பாளர்(விழுது)

ஆசிரியர் குழு
க. சண்முகலிங்கம்
பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் தை. தனராஜ்
ஓய்வுநிலை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

பா. தனபாலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இணைப்பாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

லெனின் மதிவானம்
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி அமைச்சு

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு கல்வி வலயம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் துரை மனோகரன்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர், கல்வி முகாமைத்துவம்

## ஆசிரியரிடமிருந்து...............

மலர்ந்திருக்கின்ற புத்தாண்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய ஆட்சியில் நூறு நாள் வேலைத்திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்படுகிறது. புதிய கல்வியமைச்சர் நடைமுறையிலுள்ள பரீட்சைகள் பற்றியும் கல்வி அமைப்பு பற்றியும் மாற்றங்கள் பலவற்றை எதிர்காலத்தில் கொண்டு வரவிருப்பதாக கூறியிருக்கிறார். புதிய ஜனாதிபதி முன் பல சவால்கள் இருப்பதைப்போல புதிய கல்வி அமைச்சர் முன்னும் பல சவால்கள் இருக்கின்றன.

நடைமுறைப்படுத்தப்படுகின்ற புதிய பொருளாதாரக் கொள்கைகளான தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் சூழலில் அறிவியல் பூர்வமான கல்வியியல் விளைவுகள் குறித்த ஒரு பரந்த, விரிந்த கருத்துப்பரிமாற்றத்தினை உருவாக்குதல், அதன் மூலமாக தரமான கல்வியை வழங்குதல். நடைமுறையில் இருக்கின்ற கல்வி அமைப்பிற்கு அப்பால் நாட்டின் தன்னிறைவான வளர்ச்சிக்கு உதவுகின்ற புதிய கல்விக்கோட்பாடுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை ஊக்குவித்தலும் மிக முக்கியமானவையாகும். மற்றும் நீடித்த நிலைத்த வளர்சிக்கு தேசமானது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளை நோக்கி திருப்பப்படும் அதே நேரத்தில் மக்களை அறிவியல் விழிப்புணர்வுடையவர்களாக மாற்ற வேண்டிய தேவையும் அறிவியல் கொள்கைகளை நடைமுறையில் தங்களுடைய சொந்த வாழ்விலும் சமூகப் பிரச்சினைகளிலும் பயன்படுத்துபவர்களாக, அறிவியல் மனப்பான்மையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

செயல்படுபவர்களாக உருவாக்க வேண்டியதும் இன்றைய தேவைப்பாடாகும்.

கல்வி ஒன்றினால் மட்டுமே நாட்டில் நிலவுகின்ற பசிக்கொடுமையையும் வறுமையையும், சுகாதாரக் குறைபாடுகளையும், எழுத்தறிவின்மையையும், மக்களிடையே இருக்கின்ற மூடப்பழக்கவழக்கங்களையும், கண்மூடித்தனமான நடைமுறைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் களையமுடியும்.. நிலைத்த நீடித்த வளர்ச்சி ஒன்றே மாற்றத்திற்கான அவசியமாகும்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களே இன்றைய வாழ்க்கையின் இயக்குசக்தியாக இருக்கின்றன. இந்த நேரத்தில் வளர்ச்சிக்கான திட்டங்களில், செயல்பாடுகளில் மிக ஆழமான விஞ்ஞான தொழிநுட்ப பூர்வமான தலையீடுகளின் அவசியம் அதிகரித்திருக்கிறது. ஒரு அறிவியல் சார்ந்த சமூகத்தில் இயல்பாகவே சிக்கலுக்கான தீர்வுகளை எளிதாகக் கண்டறிதல், ஆழமாகச் சிந்தித்தல், இணைந்து செயல்படுதல், தொழில்நுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்துதல், தொடர்ந்து கற்றல் ஆகிய பண்புகளைக் கொண்டவர்களாக மக்கள் திகழமுடியும். ஆக கல்வியை, குறிப்பாக நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப அறிவுசார்பொருளாதார கல்வியை முழுமையாகக் கொண்டு செல்வதன் மூலமே நீடித்த நிலைத்த வளர்ச்சி என்ற இலக்கை எட்ட முடியும்.

கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் விமர்சனப்பூர்வமான கருத்துகளை வெளிக்கொண்டுவருதல், அதே நேரத்தில் அவர்களை மாகாண அளவிலும் தேசிய அளவிலுமாக அத்துறையில் நிபுணத்துவம் பெறச்செய்தல். கல்வியியல் கோட்பாடுகளை, விதிமுறைகளை விளக்க ஆசிரியர்கள் சுயமாகக் கண்டுபிடித்து பயன்படுத்தும் அவர்களது வகுப்பறை சார்ந்து பயன்படுத்தும் புதிய வழிமுறைகளையும் எளிய, குறைந்த செலவிலான அல்லது செலவற்ற கற்றல் கற்பித்தல் கருவிகளையும் வெளிக்கொண்டு வருதல், ஊக்குவித்தல். விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் ஆய்வுகளை ஊக்குவித்தல், நிலைத்தகு வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு, விஞ்ஞானம் மற்றும் கணிதத்தினை நன்கு கற்றல் கற்பித்தல், பாரம்பரியமான கற்பித்தல் முறைகளிலிருந்து வேறுபட்டு ஆசிரியர்கள் பின்பற்றக்கூடிய அறிமுகப்படுத்தக்கூடிய கதை கூறுதல், விளையாட்டு முறை, புதிர்கள், வினாடிவினா, களப்பயணம், தனியாள் ஆய்வு போன்ற முறைகளால் ஏற்படும் கற்றல் விளைவுகளை ஒப்பிட்டு ஆய்வுகள் செய்தல் என பல்வேறு தளங்களில் இன்றைய கல்விச்சமூகம் இயங்க வேண்டியிருக்கிறது.

**புதிய ஆண்டில் புதிய கல்விக்கொள்கைகளில் நாம் முக்கியமாக எதிர்பார்ப்பது.....**

புதிய விஞ்ஞான தொழிநுட்ப கல்வியை மேம்படுத்துதல், கல்வியில் பல்லூடகம், தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் எளிய அறிவியல் பரிசோதனைகள், கற்பித்தலில் ஆசிரியர்களின் ஈடுபாடும் முயற்சிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்கள் பயன்படுத்திய புதிய, எளிய கற்றல் கற்பித்தல் கருவிகளால் நிகழ்ந்த கற்றல் அடைவை முன், பின் தேர்வுகளால் அளவீடு செய்தல். விஞ்ஞானம் மற்றும் கணிதம் கற்பித்தலில் புதுமைகளைப் பயன்படுத்துதல், ஆசிரியர்களுக்கான தரமான பயிற்சி, ஆசிரியர்கள் வகுப்பறைகளில் பயன்படுத்திய புதுமையான கற்பித்தல் முறை, அணுகுமுறை, செயல்திட்டங்கள் குறித்த ஆய்வுகள், மாணவர்களின் தனியாள் வேற்றுமைகளுக்கேற்ப, மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட புதிய கற்பித்தல் முறைகள், கருவிகள் குறித்த ஆய்வுகள், பேண்தகுவளர்ச்சிக்காக பாரம்பரிய அறிவினையும் பழக்கவழக்கங்களையும் பயன்படுத்துதல் தொடர்பான ஆய்வுகள், சமூகத்திற்கான அறிவியல், சமூகத்தில் நிலவுகின்ற பல்வேறு செயல்பாடுகளில் உள்ள அறிவியல் அணுகுமுறைகள், பிற்போக்கு மூடநம்பிக்கைகள், நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் மக்களின் வாழ்வில் இயல்பாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த ஆய்வுகள் வெளிக்கொணரப்படவேண்டும் என்பதே ஆகும். அகவிழியும் இம்மாற்றங்களை வேண்டி தொடர்ந்து பயணிக்கும்.

நன்றி

ச. இந்திரகுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டு முகாமைத்துவம்

சொ. அமிர்தலிங்கம்

மக்களிடையே ஏதோ ஒரு விதத்தில் இருக்கும் ஒருமைப்பாடானது சீர்குலையும்போது முரண்பாடுகள் தோன்றுகின்றன. இன்றைய உலகிலே ஒருமைப்பாட்டிலும் பார்க்க முரண்பாடுகளே மலிந்து காணப்படுகின்றன. இந்த முரண்பாடுகளை தனிமனிதனின் உள்ளேயும் புறத்தேயும் அவதானிக்க முடிகிறது. மனதொன்று நினைக்க செயல் ஒன்றாகிறது. எமது மனப்பாங்கில் திடீர் என எழுச்சிபெறும் இயல்பு, மாற்றம், உத்வேகம், திருப்தியற்ற நிலை என்பன எமது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. எனவே இம்முரண்பாடுகள் தனிமனிதனின் அகத்தேயும், புறத்தேயும் ஏற்படுகின்றன. ஆயினும் இம்முரண்பாட்டிலும் மனிதன் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவேண்டியவனாக உள்ளான். முரண்பாடுகள் இன்றேல் உயர்ச்சியில்லை. முரண்பாட்டினை நீக்கமுற்படும்போது வெற்றி உண்டாகும்.

மனித இனத்தின் வளர்ச்சியில் முரண்பாடுகள் மிக முக்கிய இடம்பெறுகின்றன. இம் முரண்பாடுகள் சமூகத்தில் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு வழி கோலாக அமைந்து பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இம்மாற்றங்கள் நேர்முகமாகவோ, எதிர்மறையாகவோ சமூகத்தைப் பாதித்துள்ளன. கால் மாக்ஸ் (1860- 1883) என்னும் அறிஞர் அதிகாரத்தை முன்வைத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகளை விளக்கியுள்ளார். ஆரம்பத்திலே சமூகமானது பொதுவுடமை சமூகமாகவே இருந்தது. மனித வர்க்கத்தில் வேறுபாடின்றி எல்லோரும் சமனாகவே மதிக்கப்பட்டனர். அந்தக் காலத்தில் பேத உணர்வுகள் முரண்பாடுகள் தோன்றவில்லை. பின்னர் மக்கள் தொகை அதிகரிக்க, தேவைகள் அதிகரிக்க, தேவைகள் பூர்த்தி செய்யமுடியாது பற்றாக்குறை ஏற்பட, சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியது. இக்கால கட்டத்திலே தான் முரண்பாடுகள் தோன்றின. நிலச்சுவாந்தர் முறை, செல்வம் படைத்தோர், வறியோர், முதலாளி, தொழிலாளி, ஆண்டான், அடிமை, உள்ளோர், இல்லாதோர் ஆகிய வர்க்க பேதங்கள் ஏற்பட்டு முரண்பாடுகள் காலப்போக்கில் வலுவடைந்தன. இம்முரண்பாடுகளின் காரணமாக புரட்சிகள், யுத்தங்கள் வெடித்தன. அதிகாரம் படைத்தோர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அடக்கியாள முற்பட்டனர். இதனால் காலப்போக்கில் விழிப்புணர்வு ஏற்பட்டு புரட்சிகரமான அமைப்புகள் ஏற்பட வழிவகுத்தது. முரண்பாட்டில் மிகமுக்கியமானது அதிகாரச் சமமின்மையாகும். இது முரண்பாட்டுப் பிரச்சினைக்கு ஆணிவேராகும். இலங்கையில் தற்போது காணப்படும் யுத்தமானது சிறுபான்மை, பெரும்பான்மை இனங்களிடையே அதிகாரத்தை மையமாகக் கொண்டு உருவானது எனலாம். முரண்பாட்டுக் குழுக்களிடையே அதிகாரத்தைச் சமன்செய்யும் போது பல பிரச்சினைகளைத் தீர்க்க வழி கோலுகிறது.

அடுத்து தனிப்பட்ட முரண்பாடுகளுக்கும் மனிதன் ஆளாகின்றான். இம்முரண்பாடுகள் குடும்பத்தினுள், பாடசாலைகளில், வேலைத்தலத்தில் ஏற்படுகின்றன. குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளிடையேயும், பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்களிடையேயும், வேலைத் தலத்தில் தொழில் தருனருக்கும் தொழிலாளருக்கு மிடையேயும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

மேலும், பொதுப்படையான முரண்பாடுகளும் காணப்படுகின்றன. இவை சமூகம் சார்ந்தவையாக உள்ளன. சாதி, சமயம், இனம், நாடு, பால், வர்க்கம் என்பவற்றிடையே தோன்றுகின்றன. இன்னும் கூறுவதானால் சமூகத்தின் அடிப்படைத் தேவைகளுக்காகவும் முரண்பாடுகள் தோன்றுகின்றன. பொருளாதார வளங்களான வறுமை, செல்வம், ஊழியம் அல்லது உழைப்பு என்பன சார்ந்ததாகவும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

சுருங்கக்கூறின் ஒரு சமூகமானது செலவுக்கேற்ப விளைவைப் பெறாதபோதும், ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தில் குறைகாணும்போதும், மாற்றத்திற்குட்படுத்த முற்படும்போதும் முரண்பாடுகள் தோன்றுகின்றன. எனவே இம் முரண்பாட்டை சீர்செய்ய முகாமைத்துவத்தை நாடவேண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிடுகிறது. எனவே முகாமைத்துவம் என்னும்போது முரண்பாடுகளை நீக்கிச் சரிவர நிர்வகிக்கும் ஒரு முறையாகும். ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டு, ஒருமைப்பாடு நிலைநாட்டப்பட்டு, மாற்றங்கள் மூலம் முகாமைத்துவப் படுத்தவேண்டும். முரண்பாட்டு முகாமைத்துவம் மூலம் முரண்பாடுகளை நீக்கியோ, தீர்த்தோ விடைகாணவேண்டும்.

எனவே, முரண்பாட்டு முகாமைத்துவத்தின் முதலாவது நடவடிக்கை முரண்பாட்டை கண்டறிதலாகும். முரண்பாட்டின் காரணத்தை ஆராயவேண்டும். முரண்பாட்டுகள் எந்த வகையைச் சார்ந்தது எனப் பார்க்கவேண்டும். சில முரண்பாடுகள் கடுமையானவை. சில முரண்பாடுகள் இலகுவில் தீர்க்கப்படக்கூடியவை. இதற்காக முரண் பாட்டுக்குரிய காரணங்களை கண்டறிவதற்கு பாதிக்கப்பட்டோரிடமிருந்து முரண்பாடுகளின் வகையையும், தன்மையையும் அறியவேண்டும். இதற்காக முரண்பட்டோரிடம் கேள்விக்கொத்தொன்றை வழங்கி அதன்மூலம் விடைகளைப்பெற்று முரண்பாட்டுத் தன்மையை கண்டறியவேண்டும். இவ்வாறு காரணங்களைக் கண்டுபிடித்தபின் தந்திரோபாய முகாமைத்துவத்தைக் கையாள வேண்டும். முரண்பாட்டுக்காரரிடையே ஒரு இணைக்கப்பாட்டை ஏற்படுத்த ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் தனது மதிநுட்பத் திறமையால், ஏற்ற தந்திரோபாய முறையினால் இணக்கத்திற்குக் கொண்டு வர முற்படுவார். எனவே பேச்சுவார்த்தைச் சூழலை உருவாக்கி, பேச்சுவார்த்தையையும் நடாத்துவார். இப்பேச்சு வார்த்தையில் இரு குழுக்களிடையேயும் ஒரு இணக்கப்பாட்டைக் கொண்டுவருவதற்கு முற்படுவார். இணக்கப்பாடு ஏற்பட்டவுடன் அதை அமுல் நடத்த முற்படுவார்.

இப்படியாக முரண்பாட்டு முகாமைத்துவத்தில் பின்வரும் தந்திரோபாய முறைகளைக் கையாளமுடியும். ஒத்துழைத்தல், உடன்படுதல், இணங்கிப்போதல், போன்ற முறைகளைக் கையாள முற்படவேண்டும். அப்படி ஒத்துப்போகாவிடின் அல்லது முரண்பாடுகளை தீர்க்கமுடியாவிடின் தவிர்த்துவிட வேண்டும். எனவே தவிர்க்கும்போது முரண்பாடுகள் முரண்பாடுகளாக இடைவெளி கூடியதாக விடப்படுமே யொழிய தீர்க்கப்படமாட்டாது. முரண்பாடுகளில் தலையிட்டு நிவர்த்திகாண முற்படுவோர் பின்வருமாறு செயலாற்ற வேண்டும்.

## ஒத்துழைப்பு

இதன்மூலம் இரண்டு முரண்பட்ட குழுக்களையும் அழைத்து அவர்களிடையே சமரச தீர்ப்பாக ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் நிலைநாட்ட முற்படவேண்டும். ஒரு குழுவின் தேவையானது மற்றைய குழுவின் தேவைப்பாடுகளுடன் ஒத்துப்போகும்போது ஒத்துழைப்பை ஏற்படுத்தலாம். இப்படி தேவையில் ஓரளவு ஏற்கக்கூடிய தேவைகள் இரண்டு குழக்களிடையேயும் இருக்குமாயின் அவர்களை ஒத்துழைக்க வைக்கமுடியும். ஒரு குழுவைப் போலவே மற்றக்குழுவும் இலக்குகள் அடைவதில் ஏறக்குறைய ஒரே மாதிரியான முயற்சிகளை மேற்கொள்கின்றன. இதற்கு முக்கிய காரணம் தேவைகள் இரண்டு குழுக்களுக்கும் ஒரே மாதிரியானவையாக இருக்கின்றன. ஒத்துழைப்பின் மூலம் வெற்றியை நிலைநாட்ட முடியும். மேலும் எமது ஈடுபாட்டை அதிகரித்து வழி தவறிச் செல்லாமலும் தடுக்கிறது. ஒருகுழுவின் இயக்கத்தை வைத்து அடுத்த குழுவும் இயங்க முற்படுகின்றது. இதன்மூலம் வெற்றி ஏற்படினும் நேர விரயம் ஏற்பட இடமளிக்கின்றது. எதற்கும் இரண்டு குழுக்களின் செயற்பாட்டிலும் நம்பகத்தன்மையிலும் இக்குழுக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

## உடன்பாடு

இந்த விடயமானது இரு குழுக்களுக்கிடையில் விட்டுக்கொடுத்து செயலாற்ற வழியமைக்கின்றது. எனவே இப்படி விட்டுக்கொடுக்கும்போது சில விடயங்களில் தோல்வியையும், சில விடயங்களில் வெற்றியையும் நாட முடியும். இவ்வுடன்பாடுகள் நிரந்தர தன்மையற்றதாகவும், சந்தர்ப்பங்களுக்கேற்ப குறுகிய கால தற்காலிக தன்மையானதாகவும் ஏற்பட இடமுண்டு. இந்த உடன்பாடுகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் ஏனைய தலையீடுகள் ஏற்பட இடமுண்டு. எனவே தற்காலிக முடிவுகளை இது ஏற்படுத்துவதுடன் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துகின்றது. ஒரு குழு இன்னொரு குழுமீது உடன்பாட்டுக் காலத்தில் அடக்கியாளவோ, அதிகாரத் துஷ்ப்பிரயோகம் செய்யவோ முடியாது. எனவே இங்கு நேர முகாமைத்துவம் ஓரளவுக்கு கடைப்பிடிக்க முடிகின்றது. எனவே குறுகிய கால நோக்குகள் இங்கு சரியாகப் பயன்படுத்தக்கூடியதாக இருந்தும் நீண்டகாலத்திற்குரிய நோக்கங்களை அனுபவிக்க முடியாது. உடன்பாடு இருப்பினும் இரு குழுக்களும் தம்மிடையே நம்பகத் தன்மையைப் பேணுவதில் சிரமப்படுவர். இதனால் குறுகிய காலத்திற்கு இந்த உடன்பாடு சரிவரப் பயன்படுத்தப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணக்கம்

இந்த நிலையில் குழுக்களுக்கிடையே கருத்து முறைப்பாட்டில் ஒரு குழுவானது தனது கருத்து தவறாகக் கணிக்கப்பட்டுள்ளது என்று உணரும்போது இந்த முறையை நாடும் இதில் ஒரு குழுவின் தேவைகள் உயர்ந்து காணப்படும்போது மற்றைய குழுவின் தேவைகள் குறைந்து காணப்பட்டால் உயர்ந்த தேவைகளைக் கொண்ட குழுவுக்கு குறைந்த தேவையுள்ள குழு இணங்கிச் செயற்பட முற்படுகின்றது. இதில் வெற்றி தோல்வி என்பன திட்டவட்டமாக வெளிக்காட்டப்படுகின்றன. குழுக்களின் சொந்தக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் இதில் காணப்படமாட்டாது. ஒரு குழு இன்னொரு குழு மீது ஆதிக்கம் செலுத்தும் தன்மையும், நம்பிகையற்ற நிலையும், எதிர்காலத்தில் தமது செல்வாக்கை ஏற்படுத்த முனையும் தன்மையும் காணப்படும். எனவே இரண்டு குழுக்களும் தத்தம் செயற்பாடுகளை இயக்கும் விதத்தில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தலாம். முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக பல தெரிவுகளை தெரிந்து சரியானவற்றை இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவர முனைய வேண்டும்.

இப்படியாக குழுக்களுக்கிடையே முரண்பாடுகளைக் களைய முற்படும்போது பேச்சுவார்த்தை சீராக அமைய வேண்டும். குழுவில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளையும், உணர்வுகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும். எனவே குறைகளைத் தூண்டிப் பிடிக்காது நிறைவைக் காண முற்படவேண்டும். பலவீனங்களை பலவீனங்களாகவே கொள்ளாது, அவற்றில் பலத்தைப் பயன்படுத்தவேண்டும் குழுக்களுக்கிடையே ஏற்றுக் கொள்ளக்கூடிய பலவிடயங்களை ஒன்று சேர்க்க வழிவகுக்கும். எனவே முக்கியமாக முரண்பாட்டுக்குரிய பிரச்சினைகளை நன்கு அடையாளங் கண்டு அவற்றிற்கு நிவர்த்திசெய்வதற்கு பேச்சுவார்த்தையைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

### முரண்பாடுகள் ஏற்பட பல காரணங்களுண்டு

1. **தேவைகள்:** தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் முரண்பாடுகள் ஏற்படலாம். எனவே தேவைகளைக் கவனத்தில் எடுக்கவேண்டும். தேவைகளை முடிந்தவரை பூர்த்தி செய்யவேண்டும்.
2. **உணர்வுகள்:** பிரச்சினைகளின் காரணிகள், தாக்கங்கள், விளைவுகள் என்பவற்றைப் பொறுத்து உணர்வுகள் வேறுபடுகின்றன. எனவே இந்த உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.
3. **அதிகாரப் பிரயோகம்:** ஒருவர் மற்றவர் மீது அல்லது ஒரு குழு இன்னொரு குழு மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி செயலாற்ற முற்படும்போது முரண்பாடு ஏற்படும். நியாயமற்ற முறையிலே தங்கள் ஆதிக்கத்தை இன்னொரு குழு மீது திணிக்க முற்படும்போது முரண்பாடு தோன்றும். எனவே விட்டுக்கொடுத்துச் செயலாற்ற வேண்டும்.
4. **பலத்தைப் பிரயோகப்படுத்தல்:** ஒரு குழு இன்னொரு குழு மீது தனது பலத்தைப் பிரயோகிக்கும்போது இது ஏற்படும். பெரும்பான்மை சிறுபான்மை, சாதிவெறி, சமயவெறி, இனவெறி, பால்நிலை வேறுபாடு போன்றவைகள் சில.
5. **புரிந்துணர்வின்மை:** பிரச்சினையைப் புரியாத தன்மை அல்லது பிரச்சினையை வளர்ப்பதன்மூலம் ஆதிக்கத்தை ஏற்படுத்தும் தன்மை, கால மாற்றத்திற்கேற்ப விட்டுக்கொடுத்து செயலாற்ற முடியாமை என்பனவும் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றன.

முரண்பாட்டு முகாமைத்துவத்தில் பேச்சுவார்த்தைதான் சிறந்த தேர்வு முறையாகும். எனவே இரு குழுக்களையும் பேச்சு வார்த்தைமூலம் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவந்து பிரச்சினைகளை தீர்க்க முடியும். அவர்களது பிரச்சினைகளை அடையாளம் கண்டதும் அவர்களிடமிருந்தே தீர்வு யோசனைகளைப் பெற்று பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும். குழுக்களின் தலைவர்கள் தமது தேவைகள் விருப்புக்களை முன்வைப்பார்கள். பேச்சுவார்தைமூலம் பெற்ற முடிவான தீர்மானம் ஆவணமாக்கப்படும். இந்த முடிவுகள் கால வரையறையுடன் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும்போது முரண்பாட்டு முகாமைத்துவம் செயற்படும். முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்யும்போது பேச்சுவார்த்தையின் தீமானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். எனவே நடைமுறைப்படுத்தும் போது சில குறைகள் எற்படின் மீள் பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியும். பேச்சுவார்த்தையின்போது தன்னிச்சையான கலந்துரையாடலில் (Brain Storming) ஈடுபடலாம். தன்னிச்சையான கலந்துரையாடல் என்பது திட்டமிடல், தீர்மானம் எடுத்தல் போன்ற செயல்முறைகளில் ஈடுபடும்போது மாற்றுவழிகளை அபிவிருத்தி செய்யத் தூண்டுவதாக அமைக்கப்பட்ட ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்முறையாகும். அலெக்ஸ் ஒஸ்போர்ன் என்பவரால் இத்தொழில்நுடபம் 1950ல் விருத்திசெய்யப்பட்டது. ஒருகருத்தை முன்மொழிந்தபின் உரிய குழு அதனை விவாதித்து மதிப்பீடு செய்யும் சுதந்திரமாக எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவும் உடனடியாக விவாதித்து முடிவுகளை தெரிவுசெய்து இறுதி முடிவெடுக்க இது உதவுகிறது. குறுகிய கால எல்லையுள் கருத்துக்கள் பல உருவாவதனால் கலந்துரையாடல் குறுகிய நேரத்துள் முடிவெடுக்க வழி செய்கின்றது. இக்கருத்துரையாடலில் தெரிவிக்கபடும் கருத்துக்கள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களாக செயலுருப் பெறுகின்றன. வெவ்வேறுபட்ட குழுக்கள், நபர்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுவதால் கருத்துக் களிடையே சமத்துவம் காணப்படும். சிறந்த கருத்துக்கள் தெரிவு செய்யப்படும்.

**தன்னிச்சையான கலந்துரையாடலின் நோக்கங்கள்**

எந்த ஒரு விடயத்தையும் சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

அங்கத்தவர்கள் ஒழுங்குமுறையாக கருத்துக்களை எடுத்துக்கூற இடமளிக்கவேண்டும்.

ஒரு நேரத்தில் ஒரு கருத்துமாத்திரம் தெரிவிக்க வேண்டும்.

கருத்துக்களைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்த வேண்டும்.

சகல கருத்துக்களையும் ஆராய வேண்டும்.

பேச்சுச் சுதந்திரம் பேணப்படல் வேண்டும்

சகலருக்கும் சுயமாக கருத்து தெரிவிக்க சந்தர்ப்பமளிக்கவேண்டும்

கலந்துரையாடல் திறந்த மனத்துடன் நடைபெற வேண்டும்

இறுதிமுடிவினை செயற்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும்.

**தன்னிச்சையான கலந்துரையாடலின் நன்மைகள்**

எதேச்சதிகார முடிவுக்கு இடமில்லை

தனியான ஒருவரில் தங்கியிருக்கத் தேவையில்லை.

கருத்துக்களைச் சிறந்த முறையில் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கின்றது.

குழு அங்கத்தவர்கள் பங்குபற்றுதலை ஊக்கு விக்கின்றது.

போட்டித் தன்மையான குழுவில் தனிநபர் பாதுகாக்கப்படுகின்றார்

குறுகிய கால எல்லைக்குள் வெளியீட்டினை உச்சப்படுத்த உதவுகிறது.

கலந்துரையாடல் நல்லதோர் சூழலை உருவாக்குகிறது

அனுபவிக்கதக்கதாகவும் ஊக்குவிப்பதாகவும் அமைகிறது.

கலந்துரையாடி முடிவெடுப்பதில் பெறுமதியான கருத்துக்கள் ஏற்கப்படுகின்றன.

இப்படியாக தன்னிச்சையான கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டிற்கு, உடன் பாட்டிற்கு வரமுடியும். மேலும் ஏற்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு இணக்கப்பாடு, உடன்பாடு சரிவர நடைபெறுகிறதா? எனவும் கண்காணிக்க வேண்டும். பேச்சுவார்த்தைகளில் முடிவெடுத்து தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். நடைமுறைப்படுத்தும்போது கண்காணிப்புக்கு முக்கிய இடம் அளிக்கப்படவேண்டும். கண்காணிப்பின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள் சரியாக நடைபெறுவதை உறுதிசெய்யலாம். ஏதும் பிழையான வழியில் செயற்படமுற்பட்டால் உடனே மீளாய்வு செய்து சரியான வழிக்கு இட்டுச் செல்ல வழிமுறை ஏற்படுத்தப்படவேண்டும்.

எனவே முரண்பாட்டில் சரிவர நாம் தேவைகளை அடையாளம் கண்டு புரிந்துகொண்டு செயற்படுத்தும்போது அங்கு குறிப்பிட்ட குழுக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் அவர்களுடைய உறவும் நெருக்கம் பெறும். இதன்மூலம் வெற்றியடைய வாய்ப்பு ஏற்படும். முரண்பாடுகள் இருப்பதனாற்றான் செயற்பாடுகள் போட்டி, சவால்கள் மத்தியில் வெற்றியடைகின்றன.

ஒரு நிறுவனத்தினுள் முரண்பாடுகள் ஏற்படும்போது முகாமையாளர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பின்வருமாறு:

நிறுவனத்தினுள் ஏற்படும் முரண்பாடுகளைக் கண்டறியவேண்டும்.

முரண்பாடுகளின் விளைவுகளை(Impact)மதிப்பீடு (Assess) செய்யவேண்டும்.

வாக்குவாதங்கள்,(Arguments) கடிதத்தொடர்புகள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.

பிரச்சினையில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பிரச்சினையை பிரித்தெடுத்து பிறிதொருவரிடம் நோக்கை அடிப்படையாகக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுபவரிடம் கையளிக்க வேண்டும்.

பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவரிடமிருந்து எழுத்துமூல சாட்சியங்களை பெற வேண்டும்.

முன்மதிப்பீடு செய்து எடுக்கவேண்டிய நடவடிக்கையை எடுங்கள்.

இப்டியாகச் செய்வதன்மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்கலாம். பிரச்சினையைத் தீர்க்கா விடின் முரண்பாடு வலுவடைந்து நிறுவனத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்தும். முரண்பாட்டுக்குரியவர்கள் முன்னர் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்தனர். உறவு பின்னர் விரிவடைந்து பகைவராக்கும் நிலை எற்படுபட்டுள்ளது. இது மிகக் கஷ்டமான சூழ்நிலையை நிறுவனத்தினுள் உருவாக்கும். முரண்பாட்டுக்காரர்கள் தமது பணம், நேரம், அனுபவம், முயற்சி என்பவற்றை தேவையற்ற நடவடிக்கைளில் ஈடுபடுத்தி தமக்கு நட்டத்தையே ஏற்படுத்துவர். முரண்பாடுகள் தீர்க்கப்படாவிடின் அவர்கள் நீதிமன்றம் சென்று சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதனால் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் என இழுபடும். இந்த வழக்கு இறுதியில் அவர்களுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்தும் தீர்வை நாடி நிற்கும்

எனவே இப்படியான விடயங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லாது தீர்த்து வைக்கக்கூடிய சந்தர்ப்பம் நழுவ விடப்படுகிறது. இன்று இந்த முரண்பாடுகளைத் தீர்க்க தியானத்தில் (Meditation) ஈடுபடலாம். இதில் ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து செயலாற்றினால் சமாதானம் ஏற்பட வழியுண்டு. அப்படியும் தீர்க்கமுடியாது போனால் மத்தியஸ்தம் (Arbitration) மூலம் தீர்க்க முற்படலாம். இதன்மூலம் மத்தியஸ்தர் ஒருவரை நியமித்து முரண்பாட்டை அலசி ஆராய்ந்து கருத்துக்களைப் பெற்றுத் தீர்வை ஏற்படுத்தலாம்.

எதற்கும் முரண்பாட்டு முகாமைத்துவத்தில் அடையாளங் காணல், அலசி ஆராய்தல், மதிப்பிடுதல், நடைமுறைப்படுத்தல், மீளாய்வு என்பன மிக முக்கிய அம்சங்களாகும்.

## திறம்படக் கற்றல் (Mastery Learning)

திறம்படக் கற்றல் என்பது கல்வித் துறையில் பல காலங்களாக வழங்கிவருகின்ற ஒரு முறைதான். திறம்படக் கற்றல் (Mastery Learning ) என்பது கற்பித்தலைப் பற்றிய ஒரு கோட்பாடு - Mastery learning is a philosophy abaout teaching. தகுந்த முறையில் அதே நேரத்தில் ஏற்புடைய சரியான வழிகளைப்பின்பற்றி கற்பித்தால் அனைத்து மாணவர்களும் ஆசிரியர் போதிக்கும் பாடங்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதே இக்கொள்கையின் முதன்மையான கூற்றாகும்.

திறம்படக் கற்றலின் வெற்றி மாணவர்கள் எந்த அளவுக்குக் கற்றலில் ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்பதிலும், எந்த அளவுக்குத் தேவையான பொழுது' கற்றல் சிக்கலை எதிர்நோக்குகின்ற காலத்தில்' பிரச்னைகளைக் களைய உதவப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகின்றது என்று கல்வியாளர்கள் கருதுகின்றனர்.

திறம்படக் கற்றலில் ஆசிரியரின் கற்பித்தல் அணுகுமுறை, பேச்சுமுறை, கட்டளை முறை,விளக்கும் பாங்கு, கற்பிக்கும் பாங்கு, கற்றலில் சிக்கலை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு உடனுக்குடன் வழங்கும் உதவி, திறம்படக் கற்றலுக்குத்தேவையான கால அவகாசம், ஆசிரியரின் தெளிவான கற்பித்தல் நோக்கம்,கற்பித்தல் விளைவு முறை (feed back) குறைநீக்கல் முறை (corrective procedures) போன்றவை மாணவர்களின் அடைவுநிலை வேறுபாட்டிற்கு முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன. இவற்றுள் உன்னதமான கற்றல் நடைபெற "கற்பித்தல் விளைவு அறிதல்" (feed back), குறைநீக்கல் முறையும் (corrective procedures ) முக்கிய பங்குவகிக்கின்றன.

கடந்த இருபது ஆண்டுகளில் திறம்படக் கற்றல் முறையைப் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெள்ளெனத் தெரிவது யாதெனில்,ஒரு பள்ளியில் நல்லகற்றல் சூழல் இருந்தால், கற்றலில் தனிமனித வேறுபாடு அர்த்தமற்றதாகிறது அதாவது பூஜ்யத்தை நோக்கிச் செல்கின்றது என்றும், பொருத்தமில்லாத சூழலில் அதிகப் பெரும்பான்மையான வேறுபாடு தோன்றுகின்றது என்பதுமே ஆகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங்களின் ஒப்பியல் முறை சார்ந்த கற்பித்தல்

## (Teaching of Comparative Religion)

சாந்தி சச்சிதானந்தம்

அறிமுகம்


நாம் வாழும் பிரபஞ்சத்தின் கருமூலம், நோக்கம், அதன் தன்மை ஆகியவற்றைப் பற்றிக் கொண்டுள்ள நம்பிக்கைகளை, குறிப்பாக அது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்றினால் உருவாக்கப்பட்டது என்கின்ற அடிப்படையில் உருப்பெறுமாயின், அதனை சமயம் என வரையறுக்கலாம். ஒவ்வொரு சமயமும் அதற்கேயுரிய சடங்குகள் சம்பிரதாயங்களையும் மனிதர்களின் நடத்தைகளுக்கான ஒழுக்க விதிகளையும் உள்ளடக்குகின்றன. ஒரு சமயத்தின் நம்பிக்கைகளையும் அதன் நடைமுறைகளையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றவர்கள் அச்சமயத்திற்குரிய குழுக்களாகவும் நபர்களாகவும் கருதப்படுகின்றனர். இதனை நாம் ஒரு கருத்தளவில் கூறிக்கொண்டாலும், உலகின் நடைமுறை சற்று வேறுபாடானதாகும். "இந்த நம்பிக்கைகள்தாம் எனக்கு ஏற்புடையதாயிருக்கின்றன எனவே அந்த சமயத்தைச் சார்ந்து நிற்கப் போகின்றேன்" எனக்கூறி ஒரு சமயத்தைத் தழுவுபவர்கள் மிகக் குறைவாகும். ஒவ்வொரு குழந்தையும் தான் பிறக்கும் குடும்பத்தின் சமயத்தையே தனது சமயமாக வரித்துக் கொள்ள நேரிடுகின்றது. இந்துக் குடும்பத்தில் பிறந்த குழந்தை இந்துவாக வளர்கின்றது. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறக்கும் குழந்தை கிறிஸ்தவராக வளர்கின்றது. இஸ்லாமியக் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளை இஸ்லாமியராக வளர்கின்றது. எனவே, ஒருவர் ஏதாவது குறித்த சமயத்தைச் சேர்ந்தவராக இருப்பதில் குறிப்பிடத்தக்க விடயம் ஒன்றுமேயில்லை எனலாம். அவரை நாம் அதற்காகப் பாராட்டவோ அல்லது குற்றஞ்சாட்டவோ இயலாதாகும். இதன் அடிப்படையில், "எமது சமயம்தான் அதி சிறந்த சமயம்" என பலரும் மார் தட்டிக் கொள்வது பயனற்ற நடவடிக்கை என்பதைக் காணலாம். இது மக்களிடையே வெறும் பிரிவினைவாதங்களையே தோற்றுவிக்க உதவுகின்றது.

சமய நம்பிக்கைகளை ஆழமாக நோக்கினால் அவை ஒவ்வொன்றும் தாம் சார்ந்த பிராந்தியங்களில் நிலவிய ஏனைய சமய தத்துவங்களின் பாதிப்பு உடையவையாக இருப்பதைக் காணலாம். அந்த வகையில் பார்த்தால் கலப்படமில்லாத சமயம் என்று ஒரு சமயமும் கிடையாது. ஒவ்வொரு சமயமும் ஏதாவதொரு வேற்று சமயம் அல்லது சமயங்களிலிருந்து ஏராளமான கருத்துக்களையும் சடங்குகளையும் கடன்பெற்றிருக்கின்றது. சமயங்களைப் பின்பற்றுதலின் முறைகள் இவ்வாறிருக்க, எமது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் சமய பாடங்களின் பாடாந்தரம் அனேகமாக "எமது சமயந்தான் அதி சிறந்த சமயம்" என்கின்ற ரீதியில் அமைந்திருப்பதைக் காணலாம். மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வி தொடக்கம் இடை நிலைக்கல்வி முடிவடையும்வரை தாம் பின்பற்றும் அந்த ஒரேயொரு சமயத்தைப் பற்றித்தான் கற்கின்றனர். இது அவர்களின் உள்ளத்தில் உலகைப் பற்றியதொரு குறுகிய கண்ணோட்டத்தினையும் ஏனைய சமயங்கள் குறித்த சகிப்புத் தன்மை அற்ற இயல்பினையும் வளர்க்கின்றன. இதன் காரணமாகவே, இன்று ஒப்பியல் முறையிலான கற்பித்தல் நடவடிக்கையினை சமயபாடங்களுக்கு பரிந்துரைப்பது அதிகரித்துக்கொண்டுவரும் போக்காக மாறிவிட்டது.

ஒப்பியல் முறையிலான சமயபாடக் கற்பித்தலானது மாணவர்களின் உள்ளத்தில் கலாசாரங்களின் பன்முகத்தன்மைக்கு நன்றி பாராட்டும் உணர்வினை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், 'அது' இருந்ததனால்தானே 'இது' இப்படி உருவாகியது? 'அது' இருந்திருக்காவிட்டால் 'இது' இல்லாமல் போயிருக்கும் என்கின்ற புரிதலை மனித மனங்களில் இது ஆழ விதைக்கின்றது. அது மட்டுமன்றி, சமயங்களை குருட்டுப் பார்வையுடன் நோக்கி சொன்ன தெல்லாம் சரி என்று முடிவெடுக்காது, வரலாற்றின் சமூகப் பொருளாதார சக்திகள் எவ்வாறு அவற்றின் வடிவத்தைமாற்றியமைத்திருக்கின்றன என்னும் அறிவு பூர்வமான விளக்கத்தினை அவர்களுக்குக் கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதாரணமாக, ஒவ்வொரு மதங்களின் பாரம்பரியங்களும் அவை தோன்றிய சமூகத்தின் உற்பத்தி உறவுகளினால் நிர்ணயிக்கப்பட்ட விதங்கள், சமய நெறிகளுக்குள் ஆண் பெண் உறவுகள் தீர்மானிக்கப்பட்ட முறையின் காரணங்கள் போன்ற பல விளக்கங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம். சுருங்கக் கூறில், இப்பிரபஞ்சத்தின் உயிர்களனைத்தும் எவ்வாறு தாம் உயிர் வாழ்தலில் ஒன்றுடனொன்று தொடர்பு கொண்டன என்பதை மனதார உணர்ந்த ஒரு முதிர்ச்சியடைந்த சமூகத்தினை உருவாக்குவதில் ஒப்பியல் முறையிலான சமயக்கல்வி பெரும் பங்கு வகிக்கின்றது. இக்கல்வி முறையின் ஆழ அகலங்களைத் தொட்டுச் காட்டுவதே இங்கு இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சமயங்களின் வகைப்படுத்தல்

பூகோள நிலைமைகள் சார்ந்தே சமயங்கள் அனேகமாக தரம் பிரிக்கப்படுகின்றன. முன்பு கூறியதுபோல ஒவ்வொரு பிராந்தியத்தினையும் சார்ந்த சமயங்களும் ஒன்றின் மீது ஒன்று அதிக செல்வாக்குச் செலுத்திமையால் அவை அடிப்படையில் ஒரேவித தத்துவங்களைக்கொண்டதாகக் காணப்பட்டதே இவ்வகைப்படுத்தலுக்குக் காரணமாகும். இதன்படி, மத்திய கிழக்கு நாடுகளைச் சோந்தவை, கிழக்காசியாவைச் சேர்ந்தவை, தென்னாசியாவைச் சோந்தவை,, கிரேக்க உரோமன் பாரம்பரியத்தைச் சேர்ந்தவை, ஆபிரிக்காவைச் சேர்ந்தவை, அமெரிக்காவைச் சேர்ந்தவை என பொதுவில் பிரிக்கப்படுகின்றன. இவற்றில் சில பொதுமைப்படுத்தப்பட்ட உதாரணங்களை நாம் பார்க்கலாம்.

### மத்திய கிழக்கு பிராந்தியம்

மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த முக்கியமான சமய நெறிகளில் யூதர் சமயம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவை அடங்கும். இவை மூன்றும் ஒரு தெய்வக் கோட்பாடு கொண்டன. தமது நம்பிக்கைகளையும் அவற்றின் தத்துவங்களையும் ஒரு புத்தகத்தின் வாயிலாகப் பெறுகின்றன. கிறிஸ்தவர்களுக்கு பைபிள் எனில், யூதர்களுக்கு தல்முட் என்னும் புத்தகமும் இஸ்லாமியர்களுக்கு குர் ஆன் உம் உண்டு. மூன்று சமயங்களும் ஏபிரகாமைத் தமது புனித வரலாற்றின் ஆரம்பமாகக் கருதுகின்றன. இறப்பிற்குப் பின்னர் சொர்க்கம் நரகம் என இரு லோகங்களுக்குச் செல்ல முடியும் என இவை நம்புகின்றன. கிறிஸ்தவ சமயம் யூத சமயத்திலிருந்து தனது ஆரம்பங்களைக்கொண்டாலும் அதில் அனேக கிரேக்க உரோமன் செல்வாக்கு படிந்திருப்பதைக் காணலாம். உரோம சாம்ராஜ்ய காலத்தில் இது சமய உருப்பெற்று பரந்து செறிந்ததுதான் இதற்குக் காரணமாகும். இஸ்லாமானது, கிறிஸ்தவ சமயம் தோன்றியதன் பின்னர் ஏழாம் நூற்றாண்டில் தோன்றியதனால் அதனுள் கிறிஸ்தவ சமயத்தினதும் யூத சமயத்தினதும் பல அம்சங்கள் இருப்பதனைக் காணலாம்.

### தென்னாசியப் பிராந்தியம்

தென்னாசியப் பிராந்தியத்தினுள் நவீன இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம், சீக்கிய சமயம் ஆகியன பிரதானமான சமயங்களாகும். இவற்றில் முதல் மூன்று மதங்களும் வேத காலத்திற்குப் (ஆரம்ப கால இந்து சமயம் என்பர்) பிற்பட்ட காலத்தில் உருவாகியவையாகும். சீக்கிய மதமோ இஸ்லாம் இந்தியாவிற்கு வருகை தந்த காலப்பகுதியின் பின்னர் உருவாகிய மதமாகும். இந்து பௌத்தம் சமணம் ஆகிய மதங்களின் மையக் கோட்பாடுகளை கன்மம், தர்மம் என வகைப்படுத்தலாம். கன்மம் என்பது சகல செயல்களையும் குறிக்கும். இவ்வுலகின் நடப்புக்கள் யாவற்றுக்குமான மூலகாரணத்தினையும் அதன் விளைவினையும் மனிதர்களின் கன்மம் அதாவது செயல்களிலிருந்து விளக்கப்படுவதே இத்தத்துவமாகும். கன்மமானது ஒருவரின் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றிலிருந்து பிறப்பதாகும் என புத்தர் போதிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

தர்மமானது, நீதியான அல்லது ஒழுக்கமான அல்லது சரியான நடவடிக்கையைக் (right action) குறிக்கும். இந்த சரியான நடவடிக்கையின் மூலமே கன்மத்தினாலான நச்சு வட்டத்தினை உடைத்து ஒவ்வொரு ஆன்மாவும் விடுதலை காணலாம் என்று இச்சமயங்கள் நம்புகின்றன. யோகாசனம், தியானம் ஆகியவை இந்த சமயங்களின் பாரம்பரியங்களாகும். மறுபிறவியிலும் இவை நம்புகின்றன. சமணசமயமானது தீவிர அகிம்சா நெறியினைப் பின்பற்றும் சமயமாகும். இதன் செல்வாக்கின் காரணமாகவே பௌத்த சமயமும் உயிர்களைக்கொல்லாமை என்கின்ற தத்துவத்தினைப் போதித்தது.

சீக்கிய சமயமானது இஸ்லாத்தின் பல கோட்பாடுகளைத் தழுவிய சமயமாகும். 1500களில் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் குரு நானக் என்பவரால் இது தோற்றுவிக்கப்பட்டது. மர்தானா என்னும் ஒரு முஸ்லிம் கவியினைச் சந்தித்த பிராம்மணரான குரு நானக் அவருடைய கருத்துக்களில் மனம் பறிகொடுத்து அவருடன் இணைந்து தியானம் போன்ற ஆன்மீக காரியங்களில் ஈடுபடத் தொடங்கினார். மர்தானாவின் இஸ்லாமிய கருத்துக்களின் பாதிப்பு காரணமாக சீக்கிய மதம் சகோதரத்துவத்தினை வலியுறுத்தி சாதி வேற்றுமையை நிராகரித்தது. அது ஒன்றே கடவுள் என்று நம்பிக்கை கொண்டு சிலை வழிபாட்டினையும் நிராகரித்தது. குரு நானக், "குரு சாகிப் கிரந்தம்" என்கின்ற புத்தகத்தினை இச்சமயத்தின் அடிப்படைத் தத்துவமாக உருவாக்கினார். இவ்வாறு இஸ்லாத்தின் பல அம்சங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் இச்சமயம், கடவுளுடன் ஒன்றித்து பிறவியிலிருந்து விடுதலையடைவதையே முடிவாக நம்புகின்றது. இது இந்து சமயத்தின் ஒரு அம்சமாகும்.

## கிழக்காசியப் பிராந்தியம்

கிழக்காசியப் பிராந்தியத்தில் உருவாகிய சமயங்கள் அனைத்துமே டாவோ (Tao) என்னும் தத்துவத்தின் அடிப்படையில் எழுந்தவையாகும். டாவோ, கன்பியூசியஸ் சமயம், ஷின்டோ, டெங் சாங்டோ, சொன்டோக்யோ என்பன போன்று இவை பலப்பலவாகும். டாவோ என்றால் பிரபஞ்சத்தின் போக்கு அல்லது அதனை இயக்கும் சக்தி எனப் பொருள்படும். இச்சக்தி பிரபஞ்சத்தினை எதிரும் புதிருமான போக்குகளின் சமநிலையைப் பேணுகின்றது என நம்பப்படுகின்றது. 'யின்' 'யாங்' என அழைக்கப்படும் இப்போக்குகள் இப்பிரபஞ்சத்திலுள்ள சகல உயிரினங்களிலும் உள்ளதாக நம்பப்படுகின்றது. டாவோ சமயத்தின் அடிப்படையிலேயே கன்பியூசியஸின் சமயமும் உள்ளதாயினும். கன்பியூசியஸின் தத்துவங்கள் படிநிலையுடைய ஏற்றத்தாழ்வுள்ள சமூகத்தினை நிலை நிறுத்துவதாயும் அதிகாரக் கட்டமைப்புக்களுக்கு வழி சமைப்பதாயும் இருப்பதைக் காணலாம். டாவோ சமயம் கன்பியூசியன் சடங்குகளுக்கும் குடும்ப ஆதிக்க நடைமுறைகளுக்கும் எதிராகத் தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறுவோரும் உண்டு.

பௌத்த சமயம் கிழக்காசியாவில் நுழையும்போதே அது டாவோ சமயத்துடன் கலந்து பிரபலமாக நாம் அறியும் ஸென் (Zen Buddhism) பௌத்த சமயமாக மாறியது. ஸென் சமயமானது இயற்கையைப் போற்றுவதும், நன்று தீது என பாகுபாடு காட்டாது சகலவற்றையும் ஏற்றுக்கொள்வதும், கிரந்தங்களிலும் சமயப் புத்தகங்களிலும் நம்பிக்கை கொள்ளாததும், மற்றும் மனிதர் வாழும் அந்தக் கணம் மட்டும்தான் உண்மை என்று நம்புகின்றதுமான சமயமாகும். இன்று சினாவில் ஒரே நேரத்தில் கன்பியூசியன் சமயத்தையும் டாவோ சமயத்தையும் பௌத்த சமயத்தையும் பின்பற்றுபவர்களே மிக அதிகமாகும்.

## சமயங்களின் பன்முகத்தன்மை

மேலே கூறிய உதாரணங்களுடன் அதே போன்றே ஆபிரிக்கா அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆதிக்குடிகள் பின்பற்றிய சமய நெறிகளையும் எடுத்து ஆராயலாம். அடேயப்பா, எத்தனை வேறுபாடுகள், எத்தனை மாதிரியான தத்துவங்கள்! இவையெல்லாம் மனித சிந்தனைகளின் புத்தாக்க இயல்பினையும் அதன் ஆழ நோக்கினையுமே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. வெவ்வேறு சமய தத்துவங்களை உருவாக்கியதுடன் நிற்காமல், ஒவ்வொரு சமயத்துக்குள்ளும் கூட வெவ்வேறு உட்பிரிவுகளும் மதப்பிரிவுகளும் இருப்பதை நாம் காணலாம். இப்பிரிவுகள் இல்லாத சமயமே கிடையாது. இவை மேலும் மனிதர்களின் சிந்தனைத் திறத்தினை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இவ்வகையான உட்பிரிவுகள் காலந்தோறும் தோன்றியிருக்கின்றன, அவற்றில் பல ஏனைய பிரிவுகளுடனான போட்டியில் தோல்வியடைந்து அருகி மறைந்துமிருக்கின்றன. உதாரணமாக, துருக்கி போன்ற இஸ்லாமிய நாடுகளில் 15 16ம் நூற்றாண்டுகளில் ஆடல் பாடல் கலைகள் மூலமே அல்லாவைத் (கடவுளை) தரிசிக்கலாம் என நம்புகின்ற ஒரு உட்பிரிவும் இயங்கி வந்திருப்பதை வரலாறுகள் காட்டுகின்றன. இப்பிரிவினைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சோந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக ஆடலரங்குகளை நடத்தி வந்திருக்கின்றனர். இப்பிரிவு இப்போது அழிந்து விட்டது. இன்றும்கூட சகல மதங்களிலும் ஏதோவொரு முறையில் உட்பிரிவுகள் தோன்றிக்கொண்டிருப்பதை நாம் காணலாம்.

அடுத்து, ஒரே சமயம் வெவ்வேறு உலகின் பாகங்களிலும் வெவ்வேறு முறையில் அனுசரிக்கப்படுவதையும் நாம் காணலாம். இந்தியாவில் அனுசரிக்கப்படும் இந்து சமயத்திற்கும் இந்தோனேஷியாவின் பாலித் தீவுகளில் அனுசரிக்கப்படும் இந்து சமயத்திற்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதே போன்றே, ஐயாயிரம் ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பு அனுசரிக்கப்பட்ட இந்து சமயத் திற்கும் இப்போது இந்தியாவில் அனுசரிக்கப்படும் இந்து சமயத்திற்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஏன், கடந்த அரை நூற்றாண்டுகளில் பின்பற்றப்பட்டது போலவே இப்பொழுதும் நாம் எமது சமயங்களைப் பின்பற்றுவதில்லை என்பதே உண்மையாகும். இவ்வாறு சமூகப் பொருளாதாரக் காரணிகள் மாறுதலடைய மனிதர்களின் சடங்கு சம்பிரதாயங்களும் மாற்றமடைவதைக் காணலாம்.

சமயங்கள் பற்றிய வரலாறுகள் மேலுமொரு உண்மையை எமக்கு உணர்த்துகின்றன. ஒரே பிராந்தியத்தினைச் சோந்தவை பொது இயல்புகளைக் கொண்டிருப்பதே அதுவாகும். ஒரு பிராந்தியத்தில் அல்லது பிரதேசத்தில் சமூகங்கள் மத்தியில் வழக்கில் காணப்படும் பொது நம்பிக்கைகள் வெவ்வேறு சமயங்களாகப் பரிணமிக்கின்றன; அவற்றின் பரிணாம வளர்ச்சியினூடு மீண்டும் ஒன்றின் மீதொன்று செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன. அதனால்தான் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் 'அது' இருந்திருக்காவிடில் 'இது' இருக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டது. ஓவ்வொரு சமயமும் உலகின் எப் பாகத்தில் எக்காலத்தில் தோன்றியதோ அப்பாகத்துக்கேற்ற பண்பாட்டுச் சிந்தனைகளுடன், அக்காலத்திற்கேற்ற பாரம்பரியங்களுடன் உருவாக்கப்படுகின்றது என்பதுதான் உண்மையாகும். இதில் உண்மை எது பொய் எது என்று யார் தான் கூற வல்லர்? சொர்க்கமும் நரகமும் இருக்கின்றன என ஒரு தொகுதி சமயங்கள் நம்புகின்ற அதே வேளை, பல பிறவி எடுத்த அனுபவங்களினூடாக உடலிலிருந்து விடுதலையாகும் ஆன்மா இறைவனுடன் ஒன்றிக்கின்றது என இன்னொரு தொகுதி சமயங்கள் நம்புகின்றன. இதில் எதுதான் உண்மை?

சமய தத்துவங்களின் இத்தன்மையை நாம் மனதார ஏற்றுக்கொள்வோமாயின் "எமது சமயம்தான் ஆண்டவனால் வழங்கப்பட்ட உண்மையான சமயம்", "எமது சமயம் தான் சுத்தமான சமயம்", "எமது சமயம்தான் பழமை வாய்ந்த சமயம்" என்பது போன்ற கூற்றுக்களை வெளியிடமாட்டோம். அதே போன்று, சிறிது மாற்றுச் சிந்தனையுடன் தனது சமயத்தினை அணுகுபவரைத் தடை செய்தோ அல்லது அவரைக் கல்லால் அடித்து சித்திரவதை செய்ய மாட்டோம். மனிதர்கள் இவ்வுலகினை விளங்கிக் கொள்ள முயற்சிக்கும் சிந்தனைகளின் தொகுப்பே சமய நெறிகளாகும். அவற்றிற்கும் கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்கின்ற கருப்பொருளுக்கும் ஒரு தொடர்பும் இல்லையாகும். கடவுள் இருக்கின்றார் என நம்பினால் அவரைத் தொழவும், அவர் இல்லை என நம்பினால் அவரைத் தொழாமல் இருக்கவும் மனிதர்களுக்கு இயலும். அதனைச் சொல்லிக் கொடுப்பதற்கு சமய நெறிகள் நமக்குத் தேவையில்லையாகும்.

### சமய நெறிகள் பிரயோகிக்கும் சமூக, பொருளாதார, அரசியல் அதிகாரங்கள்

சமயங்கள் மனிதர் ஒவ்வொருவருக்கும் ஒரு சுய அடையாளத்தினைக் கொடுக்கின்றன. இந்த அடையாளம் மனிதர்களின் பால்ய வயதிலிருந்தே கொடுக்கப்படுவதால் அது இன அடையாளத்தினைப் போலவே நம்மையெல்லாம் மிகவும் உணர்ச்சி வயப்பட வைக்கும் அடையாளமாகும். ஒரு சமயத்தினைப் பின்பற்றுபவர்களை 'நாம்' என அடையாளப்படுத்தும் இது அச்சமயத்தினைச் சேராதவர்களை 'பிறர்' என அடையாளப்படுத்தவும் செய்கின்றது. இந்த 'நாம்' 'பிறர்' என்னும் பிரிவினைகளே மனித சமூகங்கள் மத்தியில் பிரிவினைகளையும் குரோதங்களையும் தோற்றுவிக்கின்றன. ஒரு சமயத்தினைப்பற்றி ஏதாவது எதிர்மறையான விமாசனங்கள் கொடுக்கப்பட்டால் அவற்றை பொதுவாக மக்கள் தமக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களாகத்தான் கருதுவர். இதனால் அனேகமாக வளங்களுக்கும் வாய்ப்புக்களுக்கும் இயல்பாகவே இருக்கும் போட்டிகள் சமயங்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இன்று இலங்கையிலும் பொதுபல சேனா முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் வெறுப்புப் பிரசாரமானது அடிப்படையில் நோக்கினால் முஸ்லிம் சமூகத்தினரின் வியாபார ஆளுமையை அறுக்கும் முயற்சியாகும். ஆளும் வர்க்கங்களும் வரலாறு நெடுகலுமே இதைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

தமது அதிகாரத்தினை நிலைநாட்டும் கருவியாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். 'எமது சமயம் அச்சுறுத்தப்படுகின்றது' என சொன்ன அக்கணமே மக்கள் மனதில் விதைக்கப்படும் பய உணர்ச்சியானது அவர்களை எந்தப் பாதகச் செயலையும் செய்யத் தூண்டும். மனித வரலாற்றில் இதுவரை நடத்தப்பட்ட யுத்தங்களில் 90 வீதமானவை சமயப் போர்களே. சமயங்கள் சமாதானத்தைப் போதிக்கின்றன என நாம் பொதுவாகக் கேட்கும் வார்த்தைகளில் உண்மையில்லை என்பதை வரலாற்றினைப் படித்த கணமே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

சமய தத்துவங்களானவை, உலகத்தினை விளக்குகின்றன, மக்களுக்கு என்ன நடக்கப் போகின்றது எனவும் கூறுகின்றன என்பதனால் அவை மக்கள் மீது கொண்டிருக்கும் கட்டுப்பாடு மிக அதிகமாகும். தனது சமயத்திற்கு விசுவாசமாக இல்லாத மனிதரை நாம் காண்பது அரிது. இதனால்தான் எங்கும் மதத் தலைவர்கள் சமூகத்தின் மிகச் செல்வாக்குப் பொருந்தியவர்களாகவும் அதிகாரம் மிக்கவர்களாகவும் இருக்கின்றார்கள். அதிகாரம் எப்பொழுதும் தன்னைப் பெருப்பிக்கவே முயலுமேயொழிய யாரும் இருக்கும் அதிகாரம் போதும் என வாளாவிருந்ததில்லை. அது போலவே ஒவ்வொரு சமய நிறுவனமும் தனது செல்வாக்கினை அதிகரிக்கவே முயற்சி செய்கின்றது. இதன் காரணமாக சமூகத்தின் அதிகார வர்க்கத்தினருடன் அது கைகோர்த்துக்கொள்வது தவிர்க்க முடியாதாகின்றது. அரசு, செல்வந்த வர்க்கம், ஆண் வர்க்கம் ஆகியனவே எச்சமூகத்திலும் அரசியல், பொருளாதார சமூக அதிகாரங்களுடன் திகழ்வதனால், அரசுடன் இணைந்தும், செல்வந்தர்களின் ஆதரவுடனும், ஆண்களின் நெறிப்படுத்துதலுடனும் இவை செயற்படுகின்றன. இதன் காரணமாக, சமய தத்துவங்களும் காலப்போக்கில் இம்மூன்று காரணிகளுக்கும் சாதகமான தத்துவங்களாகவே உருமாறுகின்றன. உதாரணமாக, சகல சமய தத்துவங்களுமே ஆண்களுக்கு சாதகமாக அவர்களின் செல்வாக்கினையும் அதிகாரத்தினையும் சமூகத்தில் தக்க வைப்பதுமான தத்துவங்களாக இருப்பதை நாம் காணலாம். அவை பெண்கள் மீதே சகல விதமான கெடுபிடிகளையும் இடுகின்றன. சகல மதத்தலைவர்களும் ஆண்களாகவே இருப்பதைக் காணலாம். அதே போன்று செல்வந்தர்களின் கொடுப்பனவுகளில் இந்நிறுவனங்கள் தங்கி நிற்பதனால் அவ்வர்க்கம் ஏழை எளியவர்கள் மீது பிரயோகிக்கும் அடக்கு முறைகள் சுரண்டல் முறைகள் எவற்றுக்கும் எதிராக சமயங்கள் போராடியது கிடையாதாகும். அவ்வாறு சமயங்கள் செய்திருப்பின் நாம் தொழிற்சங்கங்களை உருவாக்க வேண்டியதில்லையே. வறியவர்களுக்காக கடவுள் இருக்கின்றார் என அவை கூறியதுடன் விடயத்தை முடித்துக்கொண்டன. முன்னொருகாலத்தில் சமய நிறுவனங்கள் ஆயுதப் படைகளையும் வைத்திருந்தன. ஆயின் நவீன யுகத்தில் அரசானது சகல அதிகாரமும் பொருந்திய ஆயுததாரியாக பரிணாம வளர்ச்சி கண்டுள்ள காரணத்தினால்தான் நேரடியாக ஆயுதங்களைக் கையாளாது ஆயுததாரியான அரசுக்கு ஆதரவாக சமயங்கள் நிற்பதைக் காணலாம். இலங்கையில் நடந்த யுத்தத்தின்போது புத்த பிக்குகளின் சங்கத்தினர் இலங்கையின் இராணுவத்திற்கும் அதன் தலைவரான ஜனாதிபதிக்கும் மும்மணிகளின் ஆசீர்வாதத்தினைக் கோரும் பல சமயச் சடங்குகளை நடத்தியதை நாம் பார்த்தோம்.

### சமயங்களின் ஒப்பியல் முறையிலான கல்வி முறையின் முக்கியத்துவம்

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட பல வாதங்களையும் இன்னும் பலவற்றையும் உட்படுத்தியதாகவே ஒப்பியல் முறையிலான கல்வி அமைகின்றது. இதைக் கற்பிப்பது எதிர்காலத்தில் சமாதானமாக வாழப் பழகுகின்ற ஒரு முதிர்ச்சியுள்ள சமூகத்தினை உருவாக்குவதற்கு நாம் செய்யும் அளப்பரிய கடமையாகும். 'இது சமயத்தினைக் குற்றஞ் சொல்லுதல்' என்னும் உணர்ச்சி வயப்பட்ட கோபங்களுக்கு அப்பால் சென்று மிகவும் யதார்த்தமான முறையில் இவ்விடயம் அணுகப்படுதல் அவசியமாகும். ஆம் மாற்றத்தைக் கொண்டு வருபவர்களுக்கும் அசாத்தியமான தைரியமும் துணிச்சலும் தேவையாகும். இது தொடர்பான விவாதத்தினையும் கலந்துரையாடலினையும் அகவிழி ஆரம்பித்து வைத்தல் நன்று.

இக்கட்டுரை தொடர்பில் கலவியாளர்களும் கல்விக் கொள்கை வகுப்போரும் சமய நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துவோரும் தமது விவாதங்களை முன்வைப்பதன் மூலம் சமயங்களின் ஒப்பியல் முறையிலான கல்வி முறையொன்றை எதிர்காலத்தில் கல்விக்கொள்கை வகுப்போருக்கு முன்மொழிவுகளை வைக்கமுடியும் என நம்புகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனித வாழ்க்கைக் காலத்தில் மிகவும் மகிழ்ச்சியான காலம் சிறுவர் காலமாகும்

பாலசுப்பிரமணியம் தனபாலன்

சிறார்களின் மனதினில் பிரச்சினைகள் இல்லை, பேதங்கள் இல்லை, இருக்கும் எந்தச் சூழலிலும் தனது சிறு உலகத்தை அமைத்துக்கொண்டு அதில் மகிழ்ச்சியாகக் கற்று வாழ்வதற்குப் பழகிக்கொள்கின்றார்கள்.

பெரியோர்கள் காணும் முரண்பாடுகள், பிரிவினைகள், சிறுவர்களின் உலகத்தில் இல்லை. அதனால் அவர்கள் பாதிப்படைவதுமில்லை எனவே சிறுவர்கள் மகிழ்ச்சிகரமாகக் கற்கும் சிறுவர் நேய சூழலை வீட்டிலும் பாடசாலையிலும் அமைக்க வேண்டும்.

ஆசிரியர்களே உங்களை அறியுங்கள், மாணவர்களை இனம்காண அவர்களிடம் செல்லுங்கள், அவர்களுடன் வாழுங்கள், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள், அதன் பின் அவர்களுக்கு சிறுவர் நேய அடிப்படையில் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழி காட்டுங்கள்.

» ஆசிரியர்களே உங்களின் இயல்புகள் எவை?

» உங்களிடம் கற்கும் மாணவர்களின் இயல்புகள் எவை?

» உங்கள் பாடசாலை அதிபரின் இயல்புகள் எவை?

» உங்கள் பாடசாலை சக ஆசிரியரின் இயல்புகள் எவை?

பிள்ளைகளிடம் பல ஆர்வங்கள் உண்டு. அவை பிள்ளைக்கு பிள்ளை வேறுபடுகின்றன. குடும்பப் பின்னணி, வீட்டுச்சூழல், சமூகச்சூழல் என்பன இவற்றைத் தீர்மானிக்கின்றன. பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து அவற்றை விருத்தி செய்வதே பிள்ளைநேய அணுகுமுறையின் ஆறு பரிமாணங்களும் மகிழ்ச்சி கரமானகற்றலுக்குமான நோக்கங்களாகவுள்ளன.

**சிறுவர்நேய மகிழ்ச்சிகரமான வகுப்பறையில் இருக்க வேண்டியவை**

பொருத்தமான வகுப்பறைக் கவிவுநிலை, காற்றோட்டம், வெளிச்சம், இடவசதி, மணல் மூலை, புத்தக மூலை, உபகரண மூலை, ஒப்பனை மூலை, நீர்ச்சட்டி, செயற்பாட்டு மேசை, பிள்ளைகளும் எழுதக்கூடிய உயரத்தில் பச்சைப் பலகை, பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும் காட்சிப்பலகை, முதலுதவிப்பெட்டி, செயற்பாட்டுக்குத் தேவையான களி, மண், மணல், விதைகள், மூலப் பொருட்கள், கற்பித்தல் சாதனங்கள், தர உள்ளீடுகள், பொருட்களைப் பாதுகாப்பாக வைக்க அலுமாரி, பிள்ளைகளின் பயனுள்ள அனுபவங்களைப் பெற விளையாட்டு முற்றம் மைதானம், மூலிகைத் தோட்டம், பறவைக் கூடம், நீர்த் தடாகம்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

1. பிள்ளைகள் தனியாகவும் குழுவாகவும் விளையாடிக் கற்றல்
2. செயற்பாடுகள் மூலம் கற்றல், ஆசிரியர் பிள்ளைகளுள் ஒருவராதல்.
3. பாடுதல், ஆடுதல், அபிநயித்தல், நாடகமாடுதல், பாத்திரமேற்று நடித்தல், தாளலயம், பாவனை செய்தல், ஒப்பனை செய்தல், இசைவும் அசைவும்.
4. கேட்டல், பேசுதல், கலந்துரையாடல், வாசித்தல், ஆக்குதல், எழுதுதல், கோலம் போடுதல், சித்திரம் வரைதல், வர்ணம் தீட்டுதல்.
5. வெட்டுதல், ஒட்டுதல், உருவம் அமைத்தல், புத்தாக்கம் செய்தல்.
6. அவதானித்தல், உற்றுநோக்குதல், தகவல் திரட்டல், விஞ்ஞானபூர்வ பரிசோதனை செய்தல், சுற்றாடல் சார் செயற்பாடுகளில் ஈடுபடல்.
7. கணித எண்ணக்கருக்களை ஒன்றிணைந்த வகையில் வெளிப்படுத்தல்.
8. பாடப்புத்தகங்களுடன் பல்வேறு விதமான துணை நூல்களை வாசித்தல், பயன்படுத்தல்.
9. வெளிக்கள சுற்றாடல் சுற்றுலாக்களுக்குச் செல்லல்
10. இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடல், கலை நிகழ்வுகளில் பங்கு கொள்ளல்.
11. பிள்ளை பிள்ளை மூலம் கற்றல்.

**நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளை வளப்படுத்தல்**

1. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயன் முறைகளில் ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.media



**பிள்ளைகளிடம் பல ஆர்வங்கள் உண்டு. அவை பிள்ளைக்கு பிள்ளை வேறுபடுகின்றன. குடும்பப் பின்னணி, வீட்டுச்சூழல், சமூகச்சூழல் என்பன இவற்றைத் தீடமானிக் கின்றன. பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிக் கொணஉந்து அவற்றை விருத்தி செய்வதே பிள்ளைநேய அணுகுமுறையின் ஆறு பரிமாணங்களும் மகிழ்ச்சி கரமான கற்றலுக்குமான நோக்கங்களாகவுள்ளன.**

2. குழுச் செயற்பாடுகள், விளையாட்டுக்களில் பங்கு பெற வைத்தல்
3. குதூகலமாகக் களிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை அளித்தல் சுற்றுலா, நாடகம் நடித்தல், போட்டி, வேடிக்கை வினோத, கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல். கதை கூறல்.
4. ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் (பட்டம் கட்டுதல், மணல் வீடு கட்டுதல், தேர் செய்தல்)
5. இரசனையூட்டும் நிகழ்ச்சிகளைப் பார்வையிடச்செய்தல் (துரைப்படம், நாடகம், நாட்டுக் கூத்து, இசை நிகழ்ச்சிகள், ஆடல் பாடல்)
6. பூந்தோட்டம், வீட்டுத்தோட்டம், செல்லப்பிராணிகளில் ஈடுபடுத்தல்
7. சமயஞ்சார் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், ஆலயங்களுக்கு தல யாத்திரை செய்தல்
8. விருப்பமான சுவாரஸ்யமான பொழுது போக்குகளில் ஈடுபடுத்தல் (முத்திரை சேகரித்தல், படங்கள் சேகரித்தல், கதைப்புத்தகம் வாசித்தல், இசைக்கருவிகளை மீட்டல், பாடுதல், ஓவியம் வரைதல், வர்ணம் தீட்டுதல்.
9. மகிழ்ச்சிகரமான சூழலில் வாழ வைத்தல், விருந்துப சாரங்கள், பண்டிகைகளில் கலந்து கொள்ளச்செய்தல்.
10. வெளிக்கள ஆய்வுகள், களக்கற்கைகளில் ஈடுபடுத்தல். சமவயதுக் குழுவினருடன், ஆசிரியர்களுடன் மனம் திறந்து கதைக்க வாய்ப்பளித்தல்
11. பாதுகாப்புணர்வு பற்றிய நம்பிக்கைகளை ஏற்படுத்தல், பெற்றோர், ஆசிரியர், சக மாணவர், சமூகத்தவர்களின் அன்பையும், ஆதரவையும் உறுதிப்படுத்தல்.
12. இயல்பான ஆற்றல்களை வெளிப்படுத்த சந்தர்ப்பமளித்தல், துன்பமான செய்திகளை செவிமடுக்க, பார்வையிடுதலைத் தவிர்த்தல்.

**சிறுவர் நேய மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான அழகியல்**

ஒரு பிள்ளையின் சுயமான வெளிப்பாட்டை ஊக்குவித்தல் பிள்ளையின் உள்ளார்ந்த ஆக்க சக்திகளை உயிர்ப்பிப்பதற்குக் காரணமாகும். இதற்கு பின்வரும் அழகியல் சார்ந்த வெளிப்பாடுகள் துணை செய்கின்றன.

» உடல், அங்க அசைவு மூலமாக பிள்ளையினுடைய வெளிப்பாடு நர்த்தன அசைவு எனப்படும்.

» சப்தத்தையும், நாதத்தையும் கொண்டு பிள்ளை செய்யும் சுய வெளிப்பாடு இசை எனப்படும்

» கீறல், கிறுக்கல், நிறங்களினால் பிள்ளை செய்யும் சுய வெளிப்பாடு ஓவியம் எனப்படும்

» பல வகைப்பட்ட அபிநயப் பண்பு களைக்கொண்டு பிள்ளை செய்யும் சுய வெளிப்பாடு நடிப்பு எனப்படும்.

» பல்வகைப்பட்ட திண்மப் பொருட்களாகிய களிமண், குரும்பட்டி, மண் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தும் ஆக்கம் சிற்பம் எனப்படும்.

குறிப்பிட்ட அழகியல் விடயங்களை ஆரம்பக்கல்விப் பிள்ளை பெற்றுள்ள உளப்பண்புகளை விரிவடைவதை குறிக்கோளாகக்கொண்டு பின்வரும் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்த வேண்டும். பாடி ஆடி மகிழ்தல், கேட்டு இனம் காணல், இடத்தைப் பயன்படுத்தல், குரல் பயிற்சி செய்தல், தாளலயத்துடன் பாடி ஆடல், அபிநயத்துடன் ஆடல், மெய்ப்பாட்டுணர்வை வெளிப்படுத்தல், இரசித்து மகிழ்தல், ஆக்கங்களில் ஈடுபடல், இசைவும் அசைவும், தொடர்பு படுத்தல், தொழில் நுட்ப தேர்ச்சி பெறல்.

மேற்குறிப்பிட்ட அம்சங்களை ஆரம்பக்கல்வி ஆசிரியர் கருத்திற் கொண்டு அழகியல் சார்ந்த இசை, நடன, நாடக சிற்ப சித்திர கலைகளை அறிந்து அனுபவித்து நயப்பதற்குச் சந்தர்ப்பமளித்து பிள்ளைகளின் ஆற்றலை மேம்படுத்தும் போது கற்றல் வினைத்திறனாகின்றது. ஆரம்பக்கல்வி கற்கும் பிள்ளைகள் பயமின்றி, பலவந்தமின்றி, பாரபட்சமின்றி கற்கும் சூழலை ஆசிரியர்கள் மேற் கொள்ள வேண்டும். சிறுவர் உரிமை களைப் பேணி, முரண்பாடுகளைக் களைந்து சிறுவர்கள் மிகவும் விரும்பும் இடமாகப் பாடசாலை சகல வளங் களையும் உடையதாக இருக்க வேண்டும். அதிபர், ஆசிரியர்களின் மனிதத்துவ அணுகுமுறைகள் இதற்கு வழிவகுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் கற்பித்தல் துறைகளில் புதிய செல்நெறிகள்

**கருத்தாக்க கற்றல் அணுகுமுறைகள்**

1. ஆசிரியர் கேள்விகளையும் பிரச்சினைகளையும் முன்வைத்தல். மாணவர்களே சுயமாக விடை காண வழிகாட்டுதல்.
2. மாணவர்களே கேள்விகளை உருவாக்குதல்.
3. குழுவாகச் செயல்படுதல். சகாக்களைத் துணையாகக் கொள்ளுதல்.
4. முன் அனுபவம், முன் அறிவோடு புதிய கருத்துகளை உருவாக்குதல்.
5. உயர்நிலை சிந்தனைத் திறனைப் பயன்படுத்துதல்.

**புரிந்து கொள்ளுதலை எவ்வாறு கற்பிக்கலாம்?**

விளக்கம் அளித்தல், பயிற்சி செய்வித்தல், தேர்வு நடத்துதல் மட்டும் புரிந்து கொள்ளுதலைக் கற்பிக்கும் அணுகு முறை அல்ல. புரிந்து கொள்ளுதலைக் கற்பிக்க தேவைப்படும் ஆறு முதன்மைக் கூறுகள்:-

1. சிந்தனைத் திறனை மையமாகக் கொண்ட ஒரு நீண்ட கால கற்றல் முறையை உருவாக்குதல்.
2. ஆண்டு முழுவதும் மதிப்பீடு செய்யும் முறையை அமுல்படுத்துதல்.
3. வளமான சான்றுகளுடன் கற்றலை ஆதரித்தல்.
4. நடைபெறும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கவனத்தில் கொள்ளுதல்.
5. பயிலும் துறையில் மாணவர்களை முழு ஈடுபாடடையச் செய்தல்.
6. கருத்துப் பெயர்ப்புகளுக்காகக் கற்பித்தல்.

**பரிந்துரைகள் :-**

1. பள்ளியிலும் பள்ளிக்குப் புறத்தேயும் தம் சகாக்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பை வழங்குதல்.
2. ஆசிரியர் மேற்கொள்ளும் செய்முறையை மேம்படுத்த தலைமையாசிரியரின் ஆலோசனையையும் ஆதரவையும் பெறுதல்.
3. ஆசிரியர் கையாளும் புதிய அணுகுமுறைகளைப் பற்றித் தலைமையாசிரியரைத் தவிர்த்துப் பிறர் கருத்துகூறுதல்.
4. ஆதரவு பெறுவதற்கும் புதிய கருத்துகளை உருவாக்குவதற்கும் ஆசிரியர்கள் சமூகத்தின் அங்கமாக இருத்தல்.
5. நடைபெறும் மாற்றங்களுக்கு ஏற்ப கற்பித்தல் அணுகுமுறைகளைப் பரிசோதனை செய்துபார்க்க வாய்ப்பு வழங்குதல்.
6. இவ்வாறு செய்தால் ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தைப் பற்றிய புதிய கருத்துகள் உருவாகலாம். அவருடைய பங்களிப்பில் மாற்றம் ஏற்படலாம்.
7. பங்களிப்பிலும் செயல்பாடுகளிலும் ஏற்படும் மாற்றங்களில் ஆசிரியர்கள் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள போதுமான அவகாசம் அளித்தல்.
8. ஆசிரியர் பணித்த மேம்பாட்டைக் கற்றலின் மையப் பகுதியாக நெறிபடுத்துதல்.
9. பணித்திற மேம்பாடு நீண்ட கால அடிப்படையில் செயலாக்கம் பெற அரசும் மக்களும் ஆதரவு வழங்குதல்.

ஆசிரியர்கள், சமுதாயத்திடமிருந்து பல்வகையான சவால்களையும் எதிர்ப்பார்ப்புகளையும் எதிர்நோக்குகிறார்கள். ஆசிரியர் பயிற்சியில் அறிந்த அணுகுமுறைகளுக்கு மாறாக புதிய முறையில் கற்பிக்க அவர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். உயர்நிலை சிந்தனைத் திறனை கற்பித்தலில் இணைத்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேர்வுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கும் அதே வேளையில் கருத்தாக்க முறையைப் பயன்படுத்திப் புரிந்து கொள்ளுதலைக் கற்பிக்க கட்டாயப்படுத்துகிறார்கள். இந்தக் கட்டுப்பாடுகளையும் சவால்களையும் ஆசிரியர்கள் சந்தித்தே ஆகவேண்டும். ஆசிரியர்கள் தொழிலுக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் நிறைவாகப் பெற வேண்டும். சாதாரண அறிவையும் ஆற்றலையும் பெற்ற ஒருவராக அல்லாமல் சிறப்புத்தன்மை (வாண்மை) வாய்ந்த ஒருவராக அவர்கள் திகழ வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த பெறுபேறு தரும் மாணவர் மையக் கல்வி

அ. றியாஸ்



பிள்ளையை முதன்மையாகக் கொண்டு அவர்களது தேவைகள், விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்றவாறு கற்றலுக்கு இட்டுச் செல்கின்ற மாணவ மையக் கற்றலை அடிப்படையாகக் கொண்டதே பிள்ளை நேயக் கல்வி அணுகுமுறையாகும்.

இதன் அடிப்படையில் கல்வியில் தரவிருத்தி, மேம்பாடு என்பவற்றை ஏற்படுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட சாதனங்களின் ஒன்று பிள்ளை நேயப் பாடசாலையாகும்.

இவ்வுலகில் பிறக்கும் சகல பிள்ளைகளும் இயற்கையாகவே கற்றலுக்குரிய சக்தியுடனேயே பிறக்கின்றன. தாய் தந்தையிடமிருந்து பிள்ளைக்குக் கிடைப்பது சதையாலான உடல், உருவம் மட்டுமல்ல மனித பரம்பரையினால் படிப்படியாக முன்னேற்றிக் கொண்ட பல்வேறு அறிவு, திறன்களும், உயிரியல் உரிமையாக பிள்ளைக்கு உரித்தாகின்றது என்கிறார்.

ஜீன் பியாஜே இதன்படி தமது பெற்றோரை விட பிள்ளைகள் தமது புத்தியின் திறமையை மேலும் விருத்தி செய்யக் கூடிய நிலையிலேயே உள்ளனர்.

பிள்ளையின் மூளையானது தனது சூழலை மிக நுணுக்கமாக ஆராய்ந்து அதனைப் பயனுள்ளவாறு ஒன்றுதிரட்டக்கூடிய நிலையில் உள்ளதெனக் கூறுகிறார் நோபர்ட் பிஷர் (The childs Brain is programmed to scan the environment for patterns of meaning) முன்பள்ளிப் பருவத்துக்கு முன்னேயே பிள்ளை மொழியை கையாளுவதற்கான அநேக செயற்பாடுகளை கற்றுக் கொள்வது தன்னிடம் சுயமாகவே உள்ள இந்த உயிரியலான கற்றல் சக்தியைப் பயன்படுத்தியேயாகும்.

இதற்காக அவனிடம் எழுகின்ற ஐயப்பாடுகள், தேடல்கள் அவதானிப்புகளுக்கான ஆற்றல், சக்தி அவனிடம் இயற்கையாகவே உள்ளது. அறிவு அனுபவங்கள் போன்றன தன்னிடம் வரும் வரை காத்திராமல் தானாகவே அனுபவங்களுடன் தேடிச் செல்கின்றான். இதன்போது ஏற்படுகின்ற தவறுகளையும் குறைகளையும் பட்டறிவு மூலம் திருத்திக் கொள்கின்றான்.

எனவே, இயற்கையான இந்தக் கற்றல் செயற்பாட்டினை மேலும் வலுப்படுத்த முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான சூழலை கற்றல் சந்தர்ப்பங்களின் அமைத்துக் கொடுப்பதுவே பிள்ளை நேயக் கல்வி அணுகுமுறை அல்லது பிள்ளை நேயப் பாடசாலைகள் எனப்படுகின்றன. இங்கு மாணவர்களின் முதன்மைத்துவத்திற்கும் அவர்களது தனித்துவத்திற்கும் போதியளவு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

பரந்தளவிலான கல்வி நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு சமநிலையான ஆளுமைப் பண்புகள் அங்கு வளர்க்கப் படுகின்றன. பிள்ளை நேயக் கல்வி என்பது கல்வித் துறையை பொறுத்த மட்டில், புதியதொரு விடயமல்ல. பிள்ளை நேயக் கல்வி, பிள்ளை நேயப் பாடசாலை ஆகிய எண்ணக்கரு வளர்ச்சியில் பல்வேறு கல்வியியலாளர்களின் சிந்தனைகள் உதவியுள்ளன.

சிறுவர் கல்வியில் குழந்தைப் பூங்கா முறையை முன்வைத்த பிரடரிக் புரோபல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை உளவியல் சார்ந்த கல்வியினை முன்வைத்த மொனரி சோறி அம்மை யாளர் ஆகியோரின் கல்விச் சிந்தனைகள் இங்கு நினைவு கூரப்பட வேண்டியவை. பிரடரிக் புறொபல் கற்றல் மகிழ்ச்சியானதாக அமைய வேண்டுமென்றும் குழந்தைப் பூங்காவை அவை நிரம்பியதாகவும் அமைத்துக் காட்டினார். மொறை சோரி அம்மையார் பாடசாலைச் சூழலானது வீட்டுச் சூழல் போல் பாதுகாப்பு சார்ந்ததாகவும், ஓய்வைக் கழித்திட இயற்கையோடு இணைத்து விளையாட, உணவு உட்கொள்ள கழிப்பிடத் தேவைகளை நிறைவேற்றிட பாதுகாப்பான தனித்தனி இடம் கொண்ட வகுப்பறை இருக்க வேண்டுமென புதுச் சிந்தனைகளை முன்வைத்தனர்.

மேலே குறிப்பிட்ட கல்வி உளவியலாளர்களின் அணுகுமுறைகளின் அடிப்படையில் நோக்கும் போது இவ் அணுகுமுறைகள் பிள்ளை நேயக் கல்வியில் ஏன் அவசியப்படுகிறது. எனும் விளைவில் விடை காணும் போது மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனங்களை முதன்மையாகக் கொண்ட பல சாதனங்களினூடாக சகல பிள்ளைகளினதும் கற்றலுக்கான சம உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதே போலவே அவர்கள் ஒவ்வொருவரினதும் இயல்பூக்கங்கள் பரம்பரை மரபு முதிசங்களை அடிப்படையாகக் கொண்டதாக பல்வகைமைகளை அவர்களுக்கு பெற்றுத் தரக்கூடிய உச்சபயனை அடைவதற்குரிய வாய்ப்பினை வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலை முறைமைத் தொகுதிக்கே உரித்தாக்கப்பட்ட போதிலும் இப்பொறுப்புக்களை உரியவாறு நெறிப்படுத்தி நிறைவேற்ற அவை தவறிவிட்டமையைக் குறிப்பிடலாம். இதைத்தான் ஆய்வுகளும் கூறுகின்றன.

சமூக வேற்றுமைகளைக் குறைப்பதற்குக் காரணமாக அமைய வேண்டிய இந்நாட்டின் கல்வி மூலமாகவே வேற்றுமையும், போட்டி நிலைமையும் சமுதாயத்தில் அதிகரித்துள்ளன. மானிடநேயம், நல்லொழுக்கம் சூழலைப் பேணலாகிய விழுமியங்கள் அருகிப் போய் கூட்டு வாழ்க்கை, சமாதானம் போன்றவை சங்கத்தைவிட்டு விலகிச் சென்றுள்ளன.

கட்டாயக் கல்வியை திறன்படக் கற்கக் கூடிய வாய்ப்புகளை வழங்கக் கூடியதாக வகுப்பறைகள் இருக்க வேண்டும். ஆனால் வகுப்பறையானது, தனது கடமைகளை, பொறுப்புகளை முறையாக நிறைவேற்றவில்லை. இதனால் பிள்ளை நேய அணுகு முறைகள் அவசியப்படுகின்றன.

பரந்த கல்வி நோக்கங்களை நிராகரித்து பரீட்சைப் பெறுபேறுகளை மட்டுமே ஒரே நோக்காகக் கொண்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைக் கூட ஐந்தாம் தர புலமைப் பரீட்சை, க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்கப் பல பாடசாலைகள் தவறியுள்ளன என்பதே உண்மையாகும்.

ஆசிரியர் மையமாக விளங்குகின்ற பாடசாலைகளையும், வகுப்பறைகளையும் பிள்ளை நேயப் பாடசாலைகளாக, வகுப்பறைகளாக மாற்றியமைப்பதைவிட வேறு மாற்று வழிகள் கிடையாது. இதுவே இன்று எதிர்பார்க்கப்படும் சிறப்புக் குறிக்கோளாகும்.

இதன் அடிப்படையில் இனி பிள்ளை நேயப் பாடசா லைகளின் கல்விக்கான பிள்ளைநேய அணுகுமுறைகள் எவ்வாறு அமைய வேண்டுமென நோக்கும் போது,

கற்கும் மாணவர்களின் தனிப்பட்ட ஊட்டத்திற்கும் மற்றும் சமூக ஊட்டத்திற்கும் உரித்தான சூழலை வழங்கும் அடையாளமாக பாடசாலை எப்போதும் விளங்க வேண்டும்.

மாணவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் அவர்களின் மன எழுச்சிகளுக்கு உத்தரவாதமளிக்கும், உளவியல் ரீதியான வளர்ச்சிக்கு அதிகாரமளிக்கும் மையமாக பாடசாலை அமைவதன் ஊடாகத்தான் பாடசாலையின் உறுதிப்பாட்டைப் பேண முடியும்.

ஆசிரியர்கள் வினைத்திறன் மிக்கதொரு வகுப்பறைச் சூழலை உருவாக்குகின்ற காரணிகளாகத் திகழ வேண்டும். ஏனெனில் வகுப்பறைச் சூழலின் முன்னோடிகள் ஆசிரியர்கள்தான்.

மாணவர்களின் கற்றல் இயற்கையாக நடைபெறல் வேண்டும். அதற்குச் சகலரும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கல்வியில் சமவாய்ப்புக் கிடைக்க வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு வளரல் வேண்டும். இது இன்றியமையாததொன்றாகும்.

மாணவர் மையம் (Child Centered) மாணவர் உரிமைகள் மையம்(Child rights centered) ஆகியன பற்றி கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கற்றல் கற்பித்தல் ஜனநாயக மயப்படுத்தப்பட்டதாய் இருத்தல் வேண்டும். இதனால் மீதிறன் குறைந்த மாணவனும் நன்மை அடைகின்றான். கற்றல் கற்பித்தலில் உபகரணப் பயன்பாட்டிற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவமளித்தல் வேண்டும். இது வினைத் திறனை அதிகரிக்க உதவுகின்றது.

தகவல் தொழில் நுட்ப அறிவு, பொது அறிவு என்பன வழங்கப்பட வேண்டும். இதனால் உலக மயமாக்கல் பற்றிய எண்ணக்கரு வளர்ச்சியடைகின்றது.

மெல்லக் கற்கும் மாணவர்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும். ஏனெனில் ஆசிரியர்கள் ஆளுமைத் திறன் விருத்தியின் பங்காளிகள் இவர்களே. பிள்ளை நேயப் பாடசாலை எவ்வாறு அமைய வேண்டும். அது ஏன் அவசியப்படுகின்றது. பிள்ளை நேயக் கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என்ற எண்ணக் கருத்துக்களை தெளிவுபடுத்தும் போதுதான் இலங்கையின் கல்வி முன்னேற்றத்தில் பாரிய மேம்பாட்டை ஏற்படுத்தலாம்

தேசிய கல்விக் கொள்கையின் வெற்றிக்கு வினைத்திறன் மிக்க வகுப்பறைக் கற்பித்தல் முறை இன்றியமையாதது!


கல்வியின் ஆரம்பப் பாசறை வகுப்பறையாகும். இங்கு மாணவருடைய உள்ளத்தில் விதைக்கப்படும் கல்வி வித்துக்கள் தான் எதிர்காலத்தில் தளிர்விட்டு விருட்சமாகின்றன. நாட்டின் எதிர்கால சந்ததியைச் கல்வி யறிவுள்ள சிறந்த பிரஜையாக உருவாக்குவதற்கு வினைத்திறன் மிக்க வகுப்பறைக் கல்வி இன்றியமையாதது என்பதில் அதன் தாற்பரியத்தை உணர்ந்த சகலரும் உடன்படுவர்.

ஒரு வகுப்பறையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பல உள்ளன. அவற்றில் ஆசிரியரின் வகிபங்கு பிரதானமானது. ஆசிரியர்கள் தொழில் வாண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் மாத்திரமே சிறந்த வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ள முடியும். நினைத்தவர்களெல்லாம் கற்பிக்கலாம் என்ற காலம் மலையேறிவிட்டது.

தற்போதைய நவீன கல்விக் கொள்கைகளினதும் அதன் செயற்திட்டங்களினதும் முன்னெடுப்புக்கு நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களே தேவைப்படுகின்றனர். இன்றேல் கல்வியின் பிரதான எதிர்பார்ப்புக்களான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தி என்பவற்றினை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த முடியாதுபோகும்.

ஆசிரியர்கள் தொழில் ரீதியான அறிவை எப்பொழுதும் விருத்தி செய்பவர்களாகத் திகழ வேண்டும். கிளிப்பிள்ளை போன்று ஒப்புவித்தல் முறையின் மூலம் இந்த நவீன கலைத் திட்டத்தை மாணவர்களிடத்தில் சமர்ப்பிக்க முடியாது. வகுப்பறைக் கற்பித்தலின்போது ஆசிரியர் மையக் கற்பித்தல் முறை மாற்றப்பட வேண்டுமெனும் கருத்து நவீன கல்வியிலாளர்களிடத்தில் தற்போது மேலிட்டுள்ளது. மாணவர் மையக் கல்வி முறைமையே வெற்றிகரமானது என கற்பித்தல் குறித்த கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நவீன கற்பித்தல் முறைமைகளும் இன்றைய ஆசி ரியர்களும்!கற்பித்தல் முறைகள் குறித்து ஓர் ஆசிரியர் அறிந்திருப்பது இன்றைய காலத்தின் தேவையாகும். கற்பித்தலின்



தரத்தை மேம்படுத்தல், கற்பித்தலின் விளைவாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வினைத்திறன் மிக்க கற்பித்தலை வகுப்பறையில் முன்னெடுத்தல் போன்றவற்றுக்கு நவீன வகுப்பறைக் கற்பித்தல் முறைமைகள் குறித்த அறிவு மிகவும் இன்றியமையாதது.

அதேபோன்றுஇ மறுபுறத்தில் ஒரு ஆசிரியர் இந்த கற்பித்தல் குறித்த அறிவினை விருத்தி செய்து கொள்ளாமல் தொடர்ந்தும் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடுவது மாணவர்களிடத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். மாணவர்களின் பாடசாலை இடைவிலகலை துரிதப்படுத்தும் ஒரு காரணியாகவும் இந்த வினைத்திறனற்ற வகுப்பறைக் கற்பித்தல் காணப்படுவதாக மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது. திறமையற்ற மாணவர்களின் வகுப்பேற்றத்துக்கும் இத்தகைய கற்பித்தல் குறித்த தெளிவு இல்லாத ஆசிரியர்கள் வழியமைக்கிறார்கள். அத்துடன், மாணவர்களின் பெறுபேறுகளின் வீழ்ச்சி நிலைக்கும் இத்தகைய ஆசிரியர்களே பெருமளவில் பொறுப்புச் சொல்ல வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்றல் கற்பித்தல் நுட்ப முறைகள்

ஆசிரியர் தொழில் மகத்தானது. சீரிய சமூக உருவாக்கத்தின் அச்சாணியாக இச்சேவை காணப்படுகிறது என்பது மாத்திரமன்றி அனைத்துத் துறைகளுக்குமான மூல வழிகாட்டியாகவும் இந்தத் தொழிலே விளங்குகின்றது. இந்தத் தொழிலை எந்தளவுக்கு வினைத்திறனுள்ள முறையில் ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதில் தான் அந்த சேவையின் புனிதத் தன்மை தங்கியுள்ளது.

வகுப்பறையில் ஆசிரியரின் பிரதான பங்கு கற்பித்தலாகும். இதன்சிறப்பான செயற்பாட்டில் தான் பாடசாலையின் முன்னேற்றம் தங்கியுள்ளது. வகுப்பறையில் எப்படிவேண்டுமானாலும் கற்பிக்கலாம் எனும் நிலைமை தற்பொழுது ஓரளவுக்கு மாறிவுள்ளது. ஒரு பாடத்தை எந்த வழிமுறையில் முன்வைத்தால் அதன் உச்சப்பயன் பாட்டைப் பெறலாம் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் திட்டமிட வேண்டியுள்ளனர். இந்த கற்பித்தல் முறைமைகள் குறித்த ஆரம்ப கட்ட திட்டமிடலுக்குத் தேவையான சில கற்பித்தல் அமைப்புக்களை இங்கே விளங்கிக் கொள்வோம். கற்பித்தலின் பரிணாமம்! ஆரம்பத்தில் ஒரு தலைமுறையினர் தாம் பெற்ற அறிவையும் அனுபவங்களையும் ஆற்றல்களையும் அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் செயற்பாடே கற்றல் கற்பித்தல் செயன் முறையாக விளங்கியது. இந்த முறை தான் இன்றுள்ள பாரிய கற்றல் கற்பித்தல் நுட்ப முறைமைகளின் வளர்ச்சிக்கு வித்தாகியது எனலாம்.

மனிதன் முதன் முதலாக கையாண்ட கற்பித்தல் முறை பின்பற்றிச் செய்தல் முறை என கல்வியியலாளர்கள் அனுமானிக்கின்றனர். குடும்பத்தில் உள்ள தாய், தந்தை அல்லது வயதில் மூத்தவர்களில் யாரேனும் ஒருவர் ஏதாவதொரு விடயமொன்றினைச் செய்வதைக் கண்ட பிள்ளைகள் அவற்றைப் பின்பற்றிச் செயலாற்றி இருக்கக் கூடும் என கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறாக தந்தையுடன் வேட்டைக்குச் சென்ற சிறுவன் பின்னர் சிறந்ததொரு வேட்டைக்காரனாக மாறியிருப்பான். தந்தையை விட நுட்பங்களை இவன் பயன்படுத்தியிருப்பான். இவ்வாறாக அன்றிருந்த பழைய முறைகள் காலப்போக்கில் ஏற்பட்ட சனத்தொகை அதிகரிப்பு, அறிவு விருத்தி மற்றும் நுண்ணறிவு விருத்தி போன்ற காரணங்களினால் புதிய கற்றல் கற்பித்தல் முறைகளாக பரிணமித்தன.பண்டைய பாரம்பரியங்களுடன் கூடிய பெரும்பாலான நாடுகளைச் சேர்ந்த மக்கள் குரு குலத்திலேயே தமது கல்வியை ஆரம்பித்தனர். மாணவர்களை தம்மைச் சுற்றி அமரச்செய்யும் குரு தாம் கற்றவற்றை தமது மாணவர்களுக்கு கற்பித்தார். எழுத்துக் கலையின் விருத்தியுடன் குரு தாம் கற்றவற்றை ஏடுகளில் எழுத முற்பட்டார். பின்னர் அவ்வேடுகளை வாசித்து விளக்கினார். கால வோட்டத்தில் கற்போரின் தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப அதனை ஈடுசெய்யும் வகையில் கற்பித்தல் நுட்ப முறைகளின் தேவையும் அதிகரித்தது. இதனை ஈடுசெய்யும் பொருட்டு விரிவுரை முறை கையாளப்பட்டது. பின்னர் கல்வி விருத்தி, உளவியல் சார்பான கொள்கைகளின் வளர்ச்சி கல்வி நுட்ப முறைகள் மற்றும் கல்வி தொடர்பான ஜனநாயக முறையிலான எண்ணக்கருக்கள் போன்ற காரணிகளின் தாக்கத்தினால் பல கற்றல் கற்பித்தல் நுட்ப முறைகள் உருவாகின.

கற்பித்தல் நுட்ப முறைகளை பின்வருமாறு சுருக்கமாக பாகுபடுத்தலாம்.

**01. தனியாள் கற்பித்தல் முறைகள்**

1. விரிவுரை முறை
2. வினவுதல் முறை
3. கலந்துரையாடல் முறை
4. செய்து காட்டல் முறை
5. கூறுதல் முறை
6. சிந்தனையைக் கிளறும் முறை
7. நாடகமாக நடித்தல் முறை
8. நுண்முறைக் கற்பித்தல் முறை
9. பூங்கா முறை
10. மொன்ரிசூரி முறை
11. விளையாட்டு முறை
12. டோல்ட்ரன் திட்டம்

**(02) குழுவாகக் கற்பிக்கும் முறை**

1. அணிமுறைக் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(03) தனியாள் கற்கும் முறைகள்**

1. படிமுறைத் திட்டமிட்ட கற்கும் முறை
2. கண்டுபிடித்துக் கற்கும் முறை
3. பிரச்சினைத் தீர்த்தல் முறை
4. போல அமைத்துக் கற்கும் முறை

**(04) கூட்டாகக் கற்கும் முறைகள்**

1. குழுவாகக் கற்கும் முறை
2. பிரச்சினை தீர்த்தல் முறை
3. செயற்திட்ட முறை
4. கண்டுபிடித்துக் கற்கும் முறை

மேற்படி கற்கும் முறைகளுள் கண்டுபிடித்துக் கற்கும் முறை பிரச்சினை தீர்த்தல் முறை, செயற்திட்ட முறை மற்றும் போல அமைத்துக் கற்கும் முறை போன்றன தனியாகவும் குழுவாகவும் கற்கும் முறைகளாகும்.

## வகுப்பறைக் கற்பித்தலில் புதிய முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்!

பாடத்தின் தன்மை மற்றும் மாணவர்களின் தரம் என்பவற்றிற்கேற்ப கற்பித்தல் முறைகளும் மாற்றமடையும். விஞ்ஞான கூடத்தில் பரிசோதனையின் மூலம் கற்பிக்கப்பட வேண்டிய விடயத்தினை விரிவுரை முறையைப் பயன்படுத்திக் கற்பிக்க முடியாது. வகுப்பறைக் கற்பித்தலை ஆரம்பிக்கும் முன்னர் ஓர் ஆசிரியர் கட்டாயம் குறித்த பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

அந்தத் திட்டமிடலின் ஆரம்ப கட்டப் பணி கற்பித்தல் வழிமுறையைத் தெரிவு செய்வதாகும். இந்த கற்பித்தல் நுட்பங்களின் அறிமுகம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்தே இங்கு நான் குறிப்பிட முனைந்துள்ளேன். பெரும் பாலான ஆசிரியர்கள் கற்பித்தலை திட்டமிடும்போது தமது இலகு கருதியே கற்பித்தல் முறையைத் தெரிவுசெய்கின்றனர். பாடத்தின் தன்மை, பாடவேளை, பௌதீக வளங்கள், மாணவர்களின் தன்மை என்பவற்றைப் பற்றி கற்பித்தல் முறையைத் தெரிவு செய்யும் ஆசிரியர் கள் கருத்தில் கொள்வது குறைவு.

தேசிய ரீதியில் கல்வி முன்னேற்றத்தை எட்டுவதற்காக தனியான அமைச்சு செயற்படுகின்றது. கல்வி மேம்பாட்டுக் காக காலத்துக்குக் காலம் பல்வேறு திட்டங்கள் வகுக்கப் படுகின்றன. இதற்கென வரவு செலவுத் திட்டத்தில் பல கோடி ரூபா நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆசிரியர் நியமனம், ஆசிரியர் தொழில் விருத்தி, பாடநூல், சீருடை என்பவற்றின் இலவச விநியோகம், பாடசாலைகளுக்கான பௌதீக வளங்களை வழங்குதல் என கல்வி மேம்பாட்டுக்காக அமைச்சு நிதி ஒதுக்கும் துறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இத்தனையும் கல்வியின் மேம்பாட்டுக்காவே மேற்கொள்ளப்படுகின்றன என்றால் அதனை மறுப்பதற்கில்லை.

நாட்டுப் பிரஜைகளின் கல்வி மேம்பாட்டுக்காக மேற்குறிப்பிட்ட அத்தனை நடவடிக்கைகளும் நடைபெற்ற போதும் வகுப்பறைக் கற்பித்தல் வினைத்திறன் மிக்கதாக இல்லையெனின் அதனை என்னவென்று கூறுவது!

அழகான முறையில் கடிதமொன்றை எழுதி, உரிய முறையில் அதனைக் கவரிலிட்டு, அதற்கு முத்திரையும் ஒட்டி பின்னர் அது உரியவரைப் போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணத்துடன் தபாலிடாமல் பொடுபோக்காக இருந்து விடும் ஒருவரின் நடவடிக்கையை என்னவென்று சொல்வது!

கல்வி மேம்பாட்டிற்கான அனைத்து நடவடிக்கைகளும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு, வகுப்பறைக் கற்பித் தல் வினைத்திறனுள்ள முறையில் நடைபெறாதிருந்தால் அது எவ்வளவு கைசேதத்துக்குரிய விடயம் ! பாரிய பல திட்டங்களையெல்லாம் பல கோடி ரூபா செலவு செய்து வகுத்து, அவற்றைப் படிமுறை படிமுறையாகச் செயற்படுத்தியும் வந்து, இறுதியில் அவற்றின் இலக்கை அடையச் செய்யும் வழியில் கைநழுவி விடுவதை அனுமதிக்க முடியுமா! இந்தச் செயற்பாடு கடிதத்தைத் தபாலிடாதவனுடைய செயற்பாட்டைப் போன்றதல்லவா!

எனவே, நாட்டின் தேசிய கல்விக் கொள்கையின் வெற்றிக்கு வகுப்பறைக் கற்பித்தலை வினைத்திறன் மிக்கதாக அமைத்துக்கொள்வது மிகவும் இன்றியமையாத தொன்றல்லவா

## ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களை புரிந்து கொள்ளுதல் அவசியம்

பாடசாலைகள் தரமான கல்வியை வழங்கும் நோக்குடன் அன்றுதொட்டு இன்று வரையிலும் பல்வேறு காலகட்டங்களில் மாணவரின் நலன் கருதி அரசு கல்வியமைச்சின் ஊடாக பலவாறான செயற்றிட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இச்செயல் திட்டங்கள் யாவும் இந்நாட்டுப் பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

எந்தவிதமான தங்குதடையின்றி சீரான சீர்கல்வியை இடையறாது தொடரவும் அதற்கான ஊக்குவிப்பாக அவர்களுக்கான நூல்களும், சீருடை மற்றும் உணவு போன்றனவும் வழங்கப்பட்டு வருகின்றமை நாமறிந்த விடயம்தான்.

அதுமட்டுமா என்ன? மாணவர்களுக்கு எவ்வாறு கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்கிற பல்வேறு நுணுக்கங்கள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள், உளவியற் கருத்துக்கள் போன்றவற்றையும் ஆசிரியருக்கு பயிற்றுவித்து அதன் ஊடாக சிறந்த கல்வியையும், சீர்மிகு ஒழுக்க விழுமியங்களுடன் கூடியதான நாட்டிற்குகந்த பண்பாளனாகவும் மாற்றி நாளைய உலகின் தலைசிறந்த தலைவர்களையும், நாட்டுப்பற்றாளர்களையும், இன்னும் பல நோக்குகளையும் அடைந்து கொள்வதற்காக பாடசாலைக் கல்வி நடைமுறை தரம் ஒன்றிலிருந்து ஆரம்பித்து உயர்தரம் வரையிலும் வியாபித்து செல்கின்றது.

ஆனால் இவ்வாறான நடவடிக்கைகள் அனைத்தும் வயதின் அடிப்படையிலும், உளரீதியான மனோ எழுச்சிகளின் அடிப்படையிலும் காலத்திற்கு காலம் அறிஞர்கள் பலரின் ஒத்துழைப்புடனும் காலத்திற்கேற்றவாறும் பாடங்களும், பாடத்திட்டங்களும், பிள்ளைகளின் நடத்தை வாத ஆய்வுகளின் பேறாகவும், நவீன உலகின் போக்குக்கு ஏற்பவும் கல்வித்துறை பாரிய பங்களிப்பினை ஆற்றி வருகிறது.

கோடான கோடி ரூபாய்களை செலவு செய்து மாணவர்களின் புரிந்துணர்வினைக் கைக்கொண்டு வெற்றி நடைபோடும் பாடசாலைக் கலைத்திட்டத்தின் உயிர் நாடியாக மாணவர்கள் திகழ்கிறார்கள். மாணவர்கள் இல்லை என்றால் எதற்குப் பாடசாலைகள்? என்கிற வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் தரம் ஒன்றில் சேருகின்ற பிள்ளைகளை சரியான முறையில் கற்பிக்கின்ற ஆசிரியர் அறிந்து கொண்டால் கற்றலுக்கான வழித்துணை அனைத்துமே சரியாக அமைந்துவிடும்.

முதற்கோணம் முற்றும் கோணம் என்பார் மூத்தோர்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ன! இதுவும் நாம் தரப்போகிற விடயத்திற்கு ஒத்துழைக்கும் என நம்புகிறேன். சரி விடயத்திற்கு வருவோம். இன்று பாடசாலைகளில் தரம் ஒன்றில் பிள்ளையை சேர்ப்பதற்கு போட்டியோ போட்டி, ஆறு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பித்தும் சிலவேளை தாம் எதிர்பார்த்த பாடசாலையில் தனது பிள்ளைக்கு இடம் கிடைக்கவில்லை என்கிற ஆதங்கம் ஒருபுறம் பெற்றோருக்கு சில பாடசாலைகளில் பிள்ளைகளே சேரவில்லை என்கிற நச்சரிப்புக்கள் சில பாடசாலைகளின் அதிபர்களுக்கு, வகுப்பில் 40 க்கும் மேற்பட்ட மாணவர்கள் என்ன செய்வது என்றே தெரியவில்லை என்கிற பிரச்சினை பெரிய பாடசாலைகளில். இவ்வாறு தரம் 1 இல் மாணவர்களை சேர்க்கின்ற நிலையில், அல்லலல்படுகின்ற நிலையில் கல்வியமைச்சும் புதிய புதிய சுற்று நிருபங்கள் தரம் 1 இல் பிள்ளைகளை சேர்ப்பதில் இழுபறி இவற்றையும் தாண்டி பிள்ளை ஏதோர் பாடசாலையில் சேர்ந்த நிம்மதியில் பெற்றோர் இருந்து விடுகின்றனர்.

இனிமேல்தான் ஆரம்பிக்கிறது மாணவர்களின் தொழிற்பாடுகள். உண்மையில் பிள்ளை தரம் ஒன்றில் பாடசாலைக்கு வருமுன்னராக பெற்றோரையும் தன் சுற்றுத்தாரையும், குறிப்பிட்ட உறவினரையும் பார்த்துப் பழகிய பிள்ளைக்கு பாடசாலைச் சூழல் பாரியதோர் பிரச்சினையை தோற்றுவிக்கலாம். அப்போதுதான் தரம் ஒன்று கற்பிக்கின்ற ஆசிரியர் சரியான முறையில் மாணவர்களை இனங்கண்டு அவர்களை அறிந்து கொள்வதன் ஊடாக பாடசாலைக்கும், வீட்டுக்கும் இடையிலான தொடர்பை சிறந்த முறையில் பேணி மாணவர்களினது, கற்றலுக்கு தயாராகும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உதவும் இச்செயற்பாட்டை கட்டாயம் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் செய்தேயாக வேண்டிய நிலைக்கு உட்படுகின்றனர்.

ஆதலால்தான் இதனை முறையாக செய்ய வேண்டும் என்பதற்காகவும் கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கல்வி மறுசீரமைப்பினைத் தொடர்ந்து, பின்னூட்டல் வேலைத் திட்டங்களினூடாகவும் கண்டறியப்பட்ட பல்வேறு விடயங்களையும் கருத்திற்கொண்டு தேசிய கல்வி நிறுவகம் கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து முதலாம் தரத்தில் பாடசாலைகள் பிரவேசிக்கின்ற பிள்ளைகளை அறிந்து கொள்ளும் நோக்குடன் பிள்ளைகளை அறிந்து கெள்வோம் எனும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இந்நடைமுறையானது பிள்ளைகளினது மன மகிழ்ச்சியைத் தொடராக வைத்திருந்து பாடசாலையும், வீடும் ஒரேயமைப்புடனே காணப்படுகிறது என்கிற உள்ளார்ந்த நிலையை இப்பாலக பிஞ்சுள்ளங்களில் படிப் படியாக உரமேற்றுவதற்குரிய வேலைத்திட்டங்களைத் தயாரித்து அதுனூடாக கற்றலை ஒரு யுக்தியாக மேற்கொள்ளும் நோக்காவே இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறது. அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களை தேசிய கல்வி நிறுவகத்தின், ஆரம்பக் கல்வி, விசேட கல்விப்பிரிவு, பாடவிதான அபிவிருத்தி நிலையம் என்பன இணைந்து கல்வி வெயியீட்டுத் திணைக்களத்தின் உதவிகொண்டு இதனையொரு கையேடாக பாடசாலைகளுக்கு வழங்கியும் உள்ளன.

இதனில் காணப்படுகின்ற 16 வேலைத்திட்டங்கள் உண்மையாகவே பிள்ளைகளை அறிந்து கொள்வதற்கான வேலைத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டி இரசனை மிக்க தாக்கும் நோக்குடன் பின்வரும் குறிக்கோள்களையும் அடையும் நோக்குக்கு அமைய இவைகள் திட்டமிடப்பட்டுள்ளன எனலாம். அவைகளாவன:

தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளைகளிடத்தில் பாடசாலை தொடர்பான விருப்பை ஏற்படுத்த தரம் 1 இல் சேர்கின்ற மாணவர்களுக்கிடையிலான நட்பினை உருவாக்கிக் கொள்ள.

மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையிலான நட்பினை ஏற்படுத்தவும்.

இப்பருவ பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர் இனங் காணவும்.

முறைசார்ந்த கல்விப் புலமான பாடசாலைக்கு வருகின்றமை யினால் அவர்களின் உளரீதியான ஆற்றல்களை எதிர்காலக் கல்விச் செயன்முறைக்கு வித்திடவும், இதுபோன்றவற்றுடன், பிள்ளையை அறிந்து கொள்ளவும், பெற்றோருக்கு மாணவர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மாணவர்கள் மகிழ்ச்சியாக பாடசாலைக்கு வரவும், சக வகுப்பு மாணவர்களுடன் பங்கெடுத்து விளையாடவும், பாடசாலையைப் பற்றிய நடைமுறைகளை ஓரளவாவது கற்றுக் கொள்ளவும் வேண்டிய நிலையில்தான் பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களுக்கான ஏடு தொடக்க விழா என்று தரம் இரண்டு வகுப்பு (பெரிய வகுப்பு) மாணவர்களால் வரவேற்கப்படுவதும் இவைகளை முன்னிட்டேயாகும்.

இவைகள் காரணமாக பாடசாலையின் மாணவர்களிடம் எந்தவிதமான முரண்பாடுகளும் அற்ற நிலையில் மகிழ்ச்சியான சூழலில் ஒரு ஜனநாயகப் பண்புகளின் அடிப்படையில் சிநேகபூர்வமான முறையில் கல்வியைத் தொடரக்கூடியவாறான நிலையிலும் தரமான கல்விச் சூழலை ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வகைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் ஊடாக வழங்கப்படுகின்ற 16 செயற்பாடுகளையும் இறுதியாக பிள்ளைகளை இனங்காணும் நியதிகளாக 28 உள்ளார்ந்த ஆற்றல்களும் ஒழுங்கு முறையாக செயற்படுத்தப்படுகின்ற போது நாமும், நாடும், பெற்றோரும் எதிர்பார்க்கின்ற ஒரு திடமான, உறுதியான சமூதாயத்தின் உறுப்பினரை உறுதிசெய்கின்ற அத்திவாரத்தை இடுகிறோம் என்ற நிலை ஆரம்பப் படி களிலேயே இடப்படுவதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்துதல் அவசியமாகும்.

இதன் மூலமாக விளையாட்டு வீடு, சுதந்திரமான செயற்பாடுகள், குழு விளையாட்டு 1,2, ஆடல் பால், அபிநயம், கதையில் வரும் பாத்திரங்களை பாவனை செய்தலும், பல்வேறு ஒலிகளை எழுப்புதலும், பாத்திரங்களைப் பாவனை செய்தலும் ஒலிகளை எழுப்புதலும் (குருவிகள் கிராமம்), விளையாட்டு முற்றம், வெட்டுதல் குறித்த எல்லையினுள் நிறந்தீட்டுதல், ஆக்கச் செயற்பாடுக்ள 1,2, கதை சித்திரம் வரைதல், ஊர்வலம், எண்ணுதல், பொருள்களை எண்ணுதல் எண் விளக்கம் 1,2 போன்ற 16 செயற்றிட்டப் பயிற்சிகள் வழங்கப்பட்டு அதனது குறிக்கோள், வளங்கள், முன் ஆயத்தம், செயலொழுங்கு, இன்காணக்கூடிய உள்ளார்ந்த ஆற்றல்களை போன்றனவும் ஆசிரியரால் மாணவர்களிடமிருந்து பெறத்தக்க முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதனை வேறுவிதமானவாறு, சூழலுக்கேற்றவிதமாகவும் மாற்றியமைக்கின்ற சுதந்திரத் தன்மையும் ஆசிரியருக்கு உண்டு. எனவே இவ்வேலைத்திட்டத்தை பிள்ளைகளிடம் திணிக்காது, ஒரு பரீட்சையாக மேற்கொள்ளாது கருதி செயற்பட வேண்டிய பொறுப்பும் ஆசிரியரிடம் காணப்படுதல் வேண்டும். இருப்பினும் எதிர்பார்க்கும் அனைத்து பிள்ளைகளும் இவ்வாறு இயங்காமலும் விடலாம். ஆதலால்தான் குறைபாடுகளை அல்லது விசேட தேவையுள்ளவர்களை இனங்காணவும் இந்தச் சந்தர்ப்பங்கள் உதவுகின்றன. இதனையும் கருத்திற்கொண்டு குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதன் ஊடாக பாடசாலையை பிள்ளைகள் விரும்புகின்ற ஓர் இடமாக மாற்றி, வெற்றிகரமான கற்றல் கற்பித்தல் செயல்முறையை உருவாக்குவதற்கு இதுபோன்ற வேலைத்திட்டங்கள் துணை யாக கொள்ளப்படுகின்றன எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால்தான் கால்ரோஜஸ் (tpar QpogyPrs) என்கிற அறிஞர் இவ்வாறு கூறுகிறார். அதாவது ஆசிரியர் சிறப்பான உறவை வளர்த்து, கூடுதலான அனுபவத்தின் மூலம் கற்றலை மேற்கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இதனை மாணவர்கள் விரும்பி ஏற்பார்கள். இங்கு மாணவர்களுக்கு எல்லாச் சுதந்திரங்களும் வழங்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் மிக நெருங்கிய சுமுகமான மானுடத் தொடர்பை விருத்தி செய்ய இதுபோன்ற கற்றல் கற்பித்தல் முறைகள் பயனுடையதாக அமைகின்றது என்று கூறுகின்றார்.

அந்தவகையில் பார்க்கின்றபோது தற்காலத்தில் பிள்ளைநேயப் பாடசாலைகள் என்ற பெயரில் வலயத்திற்கு வலயம் பல பாடசாலைகள் காணப்படுகின்றன. அங்கெல்லாம் பிள்ளைகளை நேயமுடன் கவனிக்கப்படல் வேண்டும் என்பதற்காக பிள்ளைகளின் அறிவுத்தாகம் ஈடுசெய்வதற்காக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டு பாடசாலைகள் அபிவிருத்தியை நோக்கி நடைபயின்று வருகின்றன. ஆனால் இவ்வாறான பாடசாலைகளிலும் சரி, பிள்ளைநேயப் பாடசாலை அல்லாத பாடசாலையானாலும் சரி பிள்ளை நேயங்கள் சரியான முறையில் பின்பற்றப் படுகின்றதா? என்பது ஒருபுறம் இருக்க பாடசாலைகளுடன் சேர்ந்து வீடுகளிலும் மகிழ்ச்சிகரமான சூழலில் கற்கின்ற பிள்ளை நேயப் பண்புகளை கொண்டதாக மாற்றம் பெறவேண்டும். அப்போதுதான் நாம் அனைவரும் எதிர்பார்க்கின்ற கல்வியை மாணவர்களிடமிருந்து எதிர்ப்பார்க்க முடியும்.

இன்று மனித நேயமோ? பிள்ளைநேயமோ? பற்றி சிந்திக்கவும், சுதந்திரமான கல்வியை பெறவும், பிள்ளைகள் விளையாடவும் முடியாதவாறு அனைத்து தரத்தாரும் பிள்ளையை எவ்வேளையிலும் படி, படி என்று கவ்வியைத் திணிக்கின்ற ஒரு நிலையில் முன்பள்ளியே தொடங்குகிறது டியூசன் கல்வி. இதனால்தான் இயல்பான முறையில் தரம் 5 மாணாக்கர் வெற்றியடைய வேண்டிய புலமைப் பரீட்சைக்காக பல்லாயிரம் ரூபாய்களை செலவு செய்து பிள்ளையும் கற்று சித்தியடைந்தால் கிடைப்பது ஊரில் இன்னாரின் பிள்ளையும் பாஸ் பண்ணியுள்ளாராம். அவ்வளவுதான் பிள்ளையின் பெற்றோருக்கு கிடைக்கும் மதிப்பு.

ஆனால் பிள்ளையின் உளரீதியான பாதிப்பை யார்தான் கண்டு கொண்டார்கள்? என்கிற பிரச்சினைகளிலிருந்து விடுபட ஏதுவாக இதுபோன்ற செயற்பாடுகள் நடைபெறுவதிலிருந்து தப்பிக்க சரியான சந்தர்ப்பங்கள் வந்து இடையூறுகளாக நிற்கின்றன. இதன் காரணமாக தற்காலத்தில் அதிகமான பாடசாலைகளில் மாணவர்களுக்கு பரீட்சை மையமான கற்றல் கற்பித்தலே ஆரம்பித்திலிருந்து நடைபெற்று வருகின்றன. உண்மையிலேயே எந்தவிதமான அபிவிருத்தியும் நிலையான அபிவிருத்தியாக அமையாது. அது எதுவரையில் என்றால் மாணவர்கள் சிறந்த பண்புள்ளவர்களாக ஆக்கப்படுகின்ற வரையில்தான், உண்மையான அபிவிருத்தி கல்வியில் ஏற்பட்டுள்ளது என்பதைக் காட்டும். ஆதலால்தான் பரீட்சைப் பேறுகளினது வளர்ச்சியுடன் நல்ல பண்பாளர்களையும் இணைத்தே உருவாக்குதல் ஆசிரியரினதும் கடமையாகக் கொள்ளப்படுகின்றது. அதற்கு ஆரம்பக்கல்வியில் இது போன்ற பிள்ளைகளை அறிதல் செயற்பாடு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

எனவே எதிர்காலச் சிற்பிகளை உருவாக்க விளையும் பாடசாலைகள் அங்கு உலாவரும் பிள்ளைச் செல்வங்களை கல்வியோடு இயைந்ததாக காணப்படுவதற்கு ஏற்ற சூழலை பாடசாலையின் பொறுப்பாளர்களான அதிபர்களும், ஆசிரியர்களும் வழங்கும் அதேவேளையில் ஆசிரியர்கள் தமது பாடங்களை கற்பிப்பதற்கு அரசினால் வழங்கப்படுகின்ற வழிகாட்டி அறிவுரைப்பு நூல்களை சரியான முறையில் வாசித்தறிந்து, மாணவர் மையக் கற்றலுக்குகந்தவாறு அதனை மாற்றியமைத்து செயற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் ஆசிரியருக்கு உள்ளது என்கிற விடயத்தையும் கவனத்திற் கொண்டு பிள்ளைகளை இனங்கண்டு, இடர்பாடுகளை விளக்கி, பிள்ளையிடம் குறைபாடுகளை விடுத்து திறமைகளை வெளிப்படுத்தி, வகுப்பறையானது அனைத்துப் பிள்ளைகளும் கற்பதற்கான இடமாக மாற்றம் பெற ஆசிரியர் வழிகாட்டவும், அதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படுதல் வேண்டும்.

ஆகவேதான் பிள்ளைகள் தரம் ஒன்றுக்கு சேர்ந்துள்ள இக்கால கட்டத்தில் இவர்களுக்கான இதுபோன்ற பயிற்சிகள் மூலமாக பிள்ளைகளை அறிந்து கொள்ளும் வேலைத்திட்டங்கள் மாணவரின் உள எழுச்சிக்கு புத்துயிர் அளிக்கின்ற விடயத்தை பெற்றோரும் அறிந்திருப்பதன் அவசியப்பாடுகள் காரணமாகவே இதனை விரிவாக ஆராய்ந்துள்ளேன். இவைகள் வலுவிழந்து போகாதிருக்க அனைவரும் பாடசாலைக் கல்வியின்பால் கவனத்தை செலுத்தி நாளைய நற்பிரஜைகளை தோற்றுவிக்க உறு துணையாக அமைந்திடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# படைப்பாற்றல் கல்வி

**கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் பற்றியதான இக்கட்டுரைத் தொகுப்பு தமிழக கல்விச் சூழல் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டாலும் எமது கல்விச்சூழலுக்கும் பொருந்துவதாய் அமைகிறது.**

சில நாட்களுக்கு முன் நண்பர் ஒருவர் என்னை சந்திக்க வந்தார். நலம் பாராட்டலுக்குப் பின் எங்கள் உரையாடல் கல்வியை நோக்கித் திரும்பியது. இன்றைய கல்விமுறையின் போக்குகள், வளர்ந்து வரும் உலகில் வெடித்துச் சிதறும் அறிவு ஜீவிப் போக்குப் பற்றியதாக உரையாடல் தொடர்ந்தது. உரையாடலில் நடுவே நண்பர் சில மாதங்களுக்கு முன் கண்ணுற்ற தொலைக்காட்சி கல்வி ஒளிபரப்பு பற்றி தனக்கு ஏற்பட்ட ஐயத்தினை வினவினார்.

மாநில ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான அந்நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தது எட்டாம் வகுப்பு அறிவியல் பாடம் கற்பித்தல். காற்று என்ற பாடப்பகுதியை ஆசிரியர் அறிமுகம் செய்தார்.

வளிமண்டலம் என்பது புவியின் மேற்பரப்பில் தடித்த கூடுபோல் சூழ்ந்துள்ள காற்று ஆகும். காற்று பல வாயுக்கள் கலந்துள்ள ஒரு கலவை ஆகும். நாம் வளி மண்டலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காற்றின் இயைபு மற்றும் அதன் வெப்பநிலை ஆகியவை வளி மண்டலத்தின் மேலே செல்லச் செல்ல உயரத்திற்கு ஏற்ப மாறுபடும். வளிமண்டலம் நான்கு முக்கிய அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: 1. டிரோ போசுபியர், 2. டிரேட்டோசுபியர், 3. மீசோசுபியர் மற்றும் 4. தெர்மோசுபியர் எனப்படும்.

டிரோபோசுபியர் எனப்படும் அடுக்கில் நாம் வாழ்கிறோம். இது புவியில் மேற்பரப்பிலிருந்து 10 கி.மீ. உயரம் வரை விரிந்திருக்கும். இதுவே வளிமண்டலத்தின் அடர்த்தி மிகுந்த அடுக்காகும். இந்த அடுக்கில் உயரம் அதிகரிக்க அதிகரிக்க வெப்பநிலை குறைகிறது. ஒவ்வொரு கி.மீ. உயரத்திற்கும் வெப்பநிலையில் 6X செல்சியசு குறைவு ஏற்படுகிறது.

டிரேட்டோசுபியர் என்பது வளிமண்டலத்தின் இரண்டாவது அடுக்கு ஆகும். இது புவியின் மேற்பரப்பிலிருந்து 10 கி.மீட்டருக்கும் - 50 கி.மீட்டருக்கும் இடைப்பட்ட உயரத்தில் உள்ளது. மூன்றாவது அடுக்காகிய மீசோசு பியர் 50 - 80 கி.மீட்டர் வரை விரிந்துள்ளது. இங்கே வெப்பநிலையானது கீழே உள்ள மற்ற அடுக்குகளைக் காட்டிலும் குறைவாகக் காணப்படுகிறது. தெர்மோசுபியர் 80 கி.மீட்டருக்கும் மேலே காணப்படுகிறது. இது ஒரு சூடான காற்றுப்பகுதியாகும்.

ஆசிரியர் பாட அறிமுகத்தைத் தொடர்ந்து மாணவர்களை பாடப் புத்தகத்தில் உள்ள காற்று என்ற பாடப் பகுதியை வாசிக்குமாறு பணித்தார். ஆசிரியர் வழிக் காட்டுதலுடன் மாணவர்கள் பாடத்தினை வாசிக்க முற்பட்டனர். மாணவர்கள் தங்களுக்குப் புரியாத சொற்களை அடிக்கோடிடுமாறு ஆசிரியர் வழிகாட்டினார். தொடர்ந்து மாணவர்கள் ஆசிரியரின் கட்டளைப்படி மனவரைபடம் வரைய முற்பட்டனர். மனவரைபடம் வரைந்த பின்னர் மாணவர்கள் தங்கள் மன வரைபடத்தினை வகுப்பறையில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தனர். தொடர்ந்து ஆசிரியர் தனது மனவரைபடத்தை மாணவர்களுக்குக் காட்டி விளக்கினார்.

ஆசிரியரின் மனவரைபடம் இவ்வாறாக அமைந்திருந்தது. ஒரு காளை மாட்டின் படம் வரையப்பட்டிருந்தது. அம்மாடு காற்று என்பதாக உருவகம் செய்யப்பட்டிருந்தது. வளிமண்டல அடுக்குகளாகக் கூறப்பட்ட டிரோபோசுபியர், டிரேட்டோசுபியர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசோசுபியர் மற்றும் தெர்மோசுபியர் என்பவை அந்த காளை மாட்டின் கால்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தன.

நண்பர் என்னிடம் வினவிய கேள்விகள் இவைதான். வளிமண்டலத்தின் நான்கு அடுக்குகளாகக் கூறப்படுபவை மனவரைபடம் என ஆசிரியர் காட்டிய படத்தில் காற்றினைத் தாங்கும் தூண்களாக உருவகப்படுத்தப்பட்டிருந்ததே அது ஏன்? காற்று என்ற பொருளை ஆசிரியர் தெளிவாகவே அறிமுகம் செய்தார். தொடர்ந்து மாணவர்கள் புத்தகத்தின் மூலம் வாசித்து வளிமண்டல அடுக்குகள் பற்றி புரிந்து கொண்டனர். பின்னர் இந்த மனவரைபடம் எதற்கு? தவறான அர்த்தமற்ற புரிதல்களை ஏற்படுத்தும் இத்தகைய படங்கள் மூலம் விளக்கங்கள் எதற்கு? நண்பரிடம் எழுந்த கேள்விகளைப் போன்றே நம்முள்ளும் இத்தகைய கேள்விகள் எழுகின்றன.

தொடக்க நிலை வகுப்புகளில் செயல் வழிக் கற்றல் முறை அறிமுகம் செய்யப்பட்டதின் தொடர்ச்சியாக உயர் தொடக்க வகுப்புகளில் அதாவது 6,7,8 வகுப்புகளுக்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய கற்றல் முறைதான் படைப்பாற்றல் கல்வி என அழைக்கப்படும் செயல்வழிக் கற்றல் முறை(ALM). இப்புதிய கற்றல் - கற்பித்தல் அணுகுமுறையில் பாடம் பயிற்றுவிக்கப்பட்ட நிகழ்வுதான் மேலே கூறியது.

தொடக்க நிலை வகுப்புகளுக்கு செயல்வழிக் கற்றல்(ABL) முறையில் பயிற்றுவித்தல் நடைபெறும் நிலையில் உயர் தொடக்க வகுப்புகளில் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட ஒரு புதிய அணுகுமுறை தேவைப்பட்டது. அத்தேவையினை நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்பட்டதே படைப்பாற்றல் கல்வி எனப்படும் இந்த செயல்வழிக் கற்றல் முறை(ALM).

அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் ஒரு குழு ரிசி பள்ளத்தாக்கு பள்ளி(The School)க்கு சென்றுவந்தது. உயர்தொடக்க வகுப்புகளுக்கு பயிற்றுவிக்க ஏதுவான முறையில் அமைந்திருந்த அப்பள்ளியின் கற்றல் முறையை தமிழக பள்ளிகளில் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்தது. ரிசி பள்ளத்தாக்கு பள்ளி ஆசிரியர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டனர். 11 நாள்கள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. மே 2007-ல் நடைபெற்ற பட்டறை யில் 60 ஆசிரியப் பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர். பயிற்சி பட்டறை நிறைவடையும் நிலையில், ரிசி பள்ளத்தாக்கு பள்ளியில் செயல்படுத்தப்படும் கற்றல் முறைக்கு இணையானதொரு செயல்வழிக் கற்றல் முறை (Active Learning Methodology) உருவாக்கப்பட்டது. கற் பித்தல் என்ற வகுப்பறை செயல் கற்றல் என்ற நிலைக்கும் வகுப்பறை, கற்பிப்பவராகிய ஆசிரியரிடமிருந்து கற்போராகிய மாணவர்களிடம் கொண்டு செல்லப்படுவதாகவும் இம்முறை அமைந்திருக்கிறதாம்.

தமிழகத்தில் 12 மாவட்டங்களில் 120 பள்ளிகளில் இப்புதிய கற்றல் முறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. 60 ஆசிரியப் பயிற்றுநர்களும் முழு அளவில் செயல்பட்டு திட்டத்தின் வெற்றிக்காக உழைத்தனர். சூலை - 2007ல் நடைபெற்ற பட்டறை மூலம் ரிசி பள்ளத்தாக்கு பள்ளி ஆசிரியர்களும், ஆசிரியப் பயிற்றுநர்களும் இணைந்து இப்புதிய கற்றல் முறைக்கு ஏதுவான சட்டகங்களையும் பாடத்திட்டங்களையும் கால அட்டவணைகளையும் உருவாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 2000-க்கு அதிகமான மனித நாள்கள் இப்பணிக்காக செலவிடப் பட்டதாம். அக்டோபர் 2007-ல் தமிழக அரசு அரசாணை எண்: 260 நாள்: 12-10-2007 மூலம் படைப்பாற்றல் கல்வி எனப்படும் செயல்வழிக் கற்றல் முறையை நடைமுறைப்படுத்தியது.

தமிழக கல்வி வரலாற்றிலேயே ஏன் இந்திய, இல்லை உலகக் கல்வி வரலாற்றிலேயே உருப்பெற்ற 6 மாதங் களுக்குள்ளாக நடைமுறைக்கு வந்த கற்றல்-கற்பித்தல் முறை படைப்பாற்றல் கல்வி எனப்படும் செயல்வழிக் கற்றல் முறையாக மட்டுமே இருக்க முடியும். அரசுக்கு கூடுதல் செலவினங்கள் எதையும் ஏற்படுத்தாத ஒரு முறையாக இப்புதிய கற்றல் முறை அமைந்துவிட்டதாம். அரசாணையில் இந்த வரிகள் இடம் பெற்றிருக்கிறது. கூடுதல் செலவினங்கள் ஏற்படாத நிலையில் எதைச் செயல்படுத்தினாலும் அரசுகள் கண்டுகொள்ளாது போலும். அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கனவுத் திட்டங்களில் ஒன்றான படைப்பாற்றல் கல்வியின் நோக்கங்களாக பின்வருவனவற்றைக் கூறுகின்றனர்.

» மாணவர்களை கற்றலில் நேரடியாக தானே ஈடுபடச் செய்தல்.

» மாணவர்களின் தனித்தன்மை, முழு ஈடுபாடு, மனப்பான்மைகள், திறமைகள், ஆர்வங்கள், உரிமைகள் அனைத்திற்கும் மதிப்பளித்தல்.

» உருவாக்கும் ஆற்றலை உரிமைப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» பாடத்திட்டத்தை முறையாகப் பயன்படுத்துதல்.

» வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் கற்றல் செயல்களை முடித்தல், மனவரைபடம் மற்றும் தொகுத்தலை பயன்படுத்துதல்.

» ஒரு சனநாயக வகுப்பறையை உருவாக்குதல்.

» படைப்பாற்றல் கல்வி முறையின் மதிப்பை உணர்தல்.

» முறையான மதிப்பீடு, திருப்புதல் மற்றும் குறைதீர் கற்பித்தலை பயன்படுத்துதல்.

» சிறப்பான செயல்பாடுகளைச் செய்தல்.

» பாடத் தொடர்புள்ள கேள்விகள், சரியான கேள்விகள் கேட்கப்பட்டதா என உறுதி செய்தல்.

» நற்பயன் விளைவிக்க உரிய செயல்களைச் செய்தல்.

**படைப்பாற்றல் கல்வியின் கூறுகள்**

படைப்பாற்றல் கல்வி எனப்படும் செயல்வழிக் கற்றல் முறை புரிந்து கொள்ளுதல், தொகுத்துரைத்தல், வலுவூட்டுதல் ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டிருக்கிறது.

**1. புரிந்து கொள்ளுதல்:**

வாசித்தல் (Reading), மனவரைபடம்(Mindmap) என இரு படிநிலைகள் இதில் உள்ளடங்கியுள்ளது.

வாசித்தல் என்பது

1. தானே கற்றல் (Self Study)
2. இணைக் கற்றல் (Pair Study)
3. SQ4R முறை
4. படங்கள் (Diagram) வழிகற்றல்

என்ற வகைகளில் நடைபெறும்.

**2. தொகுத்துரைத்தல்:**

வாசித்துப் புரிந்து கொண்ட செய்தியை மனவரைபடமாக வரைந்துகொள்ளும் மாணவன், மனவரைபடத்தின் உதவியுடன் தான் படித்தவற்றை தொகுத்து எழுதுதல் வேண்டும்.

தொகுத்தல் என்பது பின்வரும் முறைகளில் அமையலாம்.

1. வார்த்தை வலை (Word web)
2. அட்டவணை (Tables).
3. குறிப்புகள் (Hints).
4. வரிசைமுறையில் எழுதுதல்.
5. படங்கள் வரைதல்.
6. உண்மைத் தகவல்கள்.
7. காலங்கள்.

**3. வலுவூட்டுதல்:**

எழுதுதல், விவாதித்தல் என்ற நிலைகளில் வலுவூட்டுதல் நடைபெறும். எழுதுதல் என்பது பாட வினாக்களுக்கு விடை எழுதுதல் என்ற வகையிலும், விவாதித்தல் என்பது ஐயங்களை விவாதித்து தெளிவு பெறுதல் என்பதாகவும் அமைந்திருக்கும்.

**படைப்பாற்றல் கல்வியின் ஆதாரக் கோட்பாடுகள்**

படைப்பாற்றல் கல்வி 5 ஆதாரக் கோட்பாடுகளை மையமாகக் கொண்டு செயல்படுகிறது.

1. வாசித்தல்
2. கோட்பாடுகளைக் கண்டறிதல்
3. மனவரைபடம் வரைதல்
4. தொகுத்தல்
5. திருப்பிப் பார்த்தல்

என்ற வகையில் இது அமைந்துள்ளது.

**படைப்பாற்றல் கல்வியை செயல்படுத்துதல்**

படைப்பாற்றல் கல்வி முறையில் நான்கு வகையான கற்றல் முறைகள் அமைந்துள்ளன. அவை

1. தானே கற்றல்
2. இணைக் கற்றல்
3. SQ4R முறை
4. படங்கள் வழி கற்றல்

தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு கற்றல் முறைகளும் 90 மணித்துளிகள் கால அளவில் நடைபெறும். ஒவ்வொரு கற்ற முறையும்

1. அறிமுகம்
2. வாசித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3. மனவரைபடம்

4. தொகுத்தல்

5. விவாதம்

6. வலுவூட்டுதல்

7. ஒப்படைப்புகள்

8. குறைதீர் கற்பித்தல்

9. எழுதுதல்

என்ற படிகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

**மனவரைபடம்**

படைப்பாற்றல் கல்வியில் பெரிதும் வலியுறுத்தப்படுவது மனவரைபடம் என்பதாகும். படைப்பாற்றல் கல்வி முறை மனவரைபடம் என்பதையே மையமாகக் கொண்டிருக்கிறது என்றால் அது மிகையில்லை. மாணவர்களின் மனத்தின் பதிவுகள் இவ்வரைபடத்தில் வெளிப்படுகிறதாம். பாடப் புத்தகத்தை வாசித்துப் புரிந்து கொண்ட மாணவன் தனது புரிதலை மனதில் நிறுத்த அதனை மனவரைபடமாக வரைய வேண்டும். மனவரைபடத்தை நினைவு கூறும் நிலையில் மாணவன் தேர்வுகளில் சிறப்பாக பதிலளிக்க முடியுமாம். மனவரைபடமின்றி கற்றல் என்பது இல்லை என்ற நிலை விரைவில் தமிழகத்தில் உருவாகும்.

**மனவரைபடம் என்றால் என்ன?**

» புதிய எண்ணங்களை, சிந்தனைகளை ஒருங்கமைக்கும் படைப்பாற்றலே மனவரைபடம்.

» தன் கற்பனைத் திறனுக்கேற்ப மையக் கருத்தையும் துணைக் கருத்துகளையும் வரைபடமாக விளக்கும் தெளிவான மிகச் சிறந்த கற்றல் நுணுக்கம்.

» முக்கிய கூற்றுகளையும் அன்றாட வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் படித்தல், அதனுடன் தொடர்புடைய கருத்துகளையும் சிந்தனைகளையும் நினைவாற்றலுக்கேற்ப வரைபடமாக விளக்கும் கற்றல் விளைவு.

» மனவரைபடம் புரிதலின் விளக்க அமைப்பு.

» மனவரைபடம் ஒரு விதமான வகைப்படுத்துதல் அல்லது வரிசைப்படுத்தல்.

» அறிவுத் திறனுக்கேற்ற சொற்களை இணைக்கும் ஒரு வலைப்பின்னலே மனவரைபடம்.

» மனவரைபடம் சொற்பொருள்களின் அமைப்பு அல்லது அறிவு சேகரிப்பு.

» தன் நினைவில் நின்ற கூற்றுகளை கருத்துகளை வெளிப்படுத்தும் பார்வையான மரம் போன்ற அமைப்பு.

» நினைவாற்றலை பிரதிபலிக்கும் மரம் போன்ற அமைப்பு.

» செறிவான கூரிய கருத்துகளை ஒன்றுக்குள் ஒன்று இணைக்கும் பாலம்.

» மனித மூளையின் ஒருங்கிணைந்த முழு செயல்பாட்டின் விளைவே மனவரைபடம்.

**மனவரைபடம் எவ்விதத்தில் நன்மை பயக்கும்?**

» மனித மூளையின் ஒருங்கிணைந்த முழு செயல்பாடாக சோர்வின்றி, சுறுசுறுப்புடன் மாணவன் கற்றலில் ஈடுபடச் செய்யும்.

» அதிகப்படியான கருத்துகளை குறைந்த நேரத்தில் ஒருங்கமைக்க உதவும்.

» குறைந்த முயற்சியில் ஒருங்கமைக்கவும் கற்கவும் உதவும்.

» சிந்தனைகளைத் தெளிவுபடுத்தும்.

» படைப்பாற்றலைத் தூண்டும்.

» நினைவாற்றலை ஒருங்கமைக்கும் அடித்தளமாக அமையும்.

» கற்பனைத் திறனை அதிகரிக்கும்.

» மனதில் தோன்றும் கேள்விகளையும், கருத்துகளையும் பாடத்துடன் தொடர்புபடுத்த ஏதுவாகும்.

» மனவரைபடம் வரைதலின் போது முழு ஈடுபாடு வருகிறது.

» மனவரைபடம் வரைதலின் போது மனமகிழ்ச்சி ஏற்படுகிறது.

» மனவரைபடம் படிக்கவும், மனதில் நிறுத்திக் கொள்வதற்கும் ஏதுவாகிறது.

» முதல் மனவரைபடம் ஆரம்பநிலையாக, வளரா நிலையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

இருப்பினும் பிறகு வரையப்போகும் மனவரை படத்திற்கு அடித்தளமாக அமைகிறது.

படைப்பாற்றல் கல்வி முறை என்பது ஒரு திட்டமிட்ட கற்றல் முறையாக முன்வைக்கப்படுகிறது. மாணவர்களும் ஆசிரியரும் ஒருங்கிணைந்து செயல்படக் கூடியதாக இது உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கற்றுக் கொண்டதை நினைவில் நிறுத்திக் கொள்ள மன வரைபடம் வரைதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உயர் தொடக்கப் பள்ளி மாணவன் இத்தகைய விதிகளுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட்டுக் கல்வி கற்றல் என்பது இயலுமா?

ஒருவன் தனது சூழ்நிலைகளை(சுற்றியுள்ள உலகத்தை) உற்று கவனிக்கும்போது, புரிந்துகொள்ளும் போது, மனச் செயலாக உள்வாங்கிக் கொள்ளும்போது மனப்படங்கள் உருவாகின்றன. ஒவ்வொரு தனிநபரும் அவரது தனிப்பட்ட கண்ணோட்டத்துடன் கூடிய தனி மாதிரியை உருவாக்கிக் கொள்கிறார். அவரைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய அறிவை இப்படித்தான் ஒவ்வொருவரும் பெறுகின்றனர். இதற்கு மாணவர்களும் விதிவிலக்கல்ல.

புரூனர் என்பவரின் கூற்றுப்படி அறிவாற்றல் வளர்ச்சி மூன்று நிலைகளில் நடைபெறுகிறது. ஒரு குழந்தை ஆப்பிள் பழம் என்பதை தொட்டுப் பார்த்து, கையில் எடுத்துப் பார்த்து, சுவைத்துப் பார்த்து அதனை அறிந்து கொள்கிறது. இது செயல்பாட்டு நிலை பின்பு அக்குழந்தை வளரும்போது ஆப்பிள் பழத்தின் படத்தையோ, மாதிரியையோ போலப் பார்த்தல் மூலம் உணர்வான். இது உருவ நிலை. இன்னும் வளர வளர ஆப்பிள் என்ற வார்த்தையொன்றே அவனுக்குப் பழத்தை நினைவுபடுத்தும். இது குறீயீட்டு நிலை.

படைப்பாற்றல் கல்வி எனப்படும் இப்புதிய கல்வி முறையில் இதுபோன்ற செயல்பாடுகளுக்கு இடமில்லை. உண்மையான படைப்பாற்றல் என்பது தொட்டு, சுவைத்து, உணர்ந்து கொள்வதன் மூலம் தானே நிகழமுடியும்?

படைப்பாற்றல் கல்வி முறை அடிப்படையிலேயே தவறாக உருவாக்கப்பட்டிருப்பது என்பது உறுதி. எப்பருவ வயது மாணவர்களுக்கு ஏற்றதான முறை என்பதில் இதை உருவாக்கியவர்கள் கவனம் செலுத்தவில்லை என்பது தெளிவு. படைப்பாற்றலின் கூறுகளாக கல்வியாளர்கள் பின்வருவனவற்றைப் பட்டியலிடுகின்றனர். அவை:

1. மொழிச் சரளம்
2. நெகிழும் தன்மை
3. தன்முதன்மை தற்பண்பு
4. விரிவாக்கம்

ஒவ்வொரு குழந்தையும் படைப்பாற்றல் நடத்தையை ஓரளவிற்குக் கொண்டிருக்கும். சில குழந்தைகள் சில குறிப்பிட்ட துறையில் (சான்றாக அறிவியல், கலை படைப்பு) சிறந்து விளங்கலாம். படைப்பாற்றல் சிந்தை உடைய மாணவர்களிடம் பின்வரும் இயல்புகள் காணப்படும்.

» தன் முதன்மைச் சிந்தனை வெளிப்பாடு, செயல் மற்றும் நடத்தை.

» பல நேரங்களில் நெருக்கடியான கேள்விகளைக் கேட்பது.

» தனது கருத்தை ஆணித்தரமாக விவாதிப்பது.

» தீர்வுகளுக்கு மாற்றுத் தீர்வுகளைச் சொல்வது.

» சுயகருத்து உயரிய நிலையில் அடைவைக் காட்டுதலில் மிகவும் ஆர்வமுடன் ஈடுபடுதல்.

» குழப்பங்களைத் தெளிவின்மையைப் பொறுத்துக் கொள்ளுதல்.

» ஆர்வமுடைமை, கட்டுப்பாடற்ற சுயதீர்ப்பு தன்னாட்சியை வெளிப்படுத்துதல்.

இப்பண்புகளை வளர்த்தெடுக்கும் வழிமுறைகள் எதுவும் செயல்வழிக் கற்றல் முறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

சிந்தனை வளர்ச்சி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி குறித்து பியோகே, குழந்தை மனிதனாக வளர்ந்து முன்னேறும் பருவத்தோடு ஒப்பிட்டுத் தம் கருத்துகளை நமக்கு கோடிட்டுக் காட்டுகிறார். வாழ்வின் பச்சிளம் பருவத்தில் (0 - 2 ஆண்டுகள்) குழந்தை தொடுதல் மூலமும் புலனுணர்தல் மூலமுமே கற்கிறது. சின்னக் குழந்தைகள் கையில் தங்கள் கவனத்தை ஈர்க்கும் பொருள்களைப் பிடித்துக் கொண்டும் வாயில் போட்டுக் கொள்வதையும் பார்த்திருக்கிறோம். இந்த நிலையை பியோஜே புலனியக்க நிலை என்று கூறுகிறார். குழந்தை வளர வளர (2 - 7 ஆண்டுகள்) ஆராயும் திறன் வளர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையை செயலுக்கு முந்தைய நிலை என்று கூறுகிறார். மூன்றாவது நிலையான புலனிடான செயல் நிலையில் (7 - 11 ஆண்டுகள்) குழந்தை தேவையானதைக் கற்றுக் கொண்டதன் விளைவாகத் தான் பார்க்கும் பொருள்களில் மாற்றங்களைக் காண விழைகிறது. அவனது கற்பனைத் திறன் அவனது அடுத்த நிலையான முறையான செயல் நிலைக்கு(11 ஆண்டுகள் முதல்) இழுத்துச் செல்கிறது. இந்த நிலையில் அவன் தர்க்க முறையிலான கருதுகோளை அமைத்து இடையுறவை ஏற்படுத்தவும் முடிவுகளைப் பெறவும் முயற்சிக்கலாம்.

உயர் தொடக்க நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பியோகேயின் கூற்றுப்படி புலனீடான செயல் நிலையைச் சார்ந்த குழந்தைகள். புதியனவற்றை அறிந்து கொள்ளத் துடிக்கும் பருவம் இது. தான் பார்க்கின்ற பொருள்களில், தான் கற்றுக் கொண்டிருப்பதை செயல்படுத்திப் பார்க்க விளைகின்ற பருவம் இது. இத்தகைய தன்மைகளைக் கருத்தில் கொண்டுதான் பள்ளி கலைத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்களின் மாற்றங்களைக் காண விரும்பும் ஆர்வத்தினைத் தூண்டுவதாக பாடங்கள் எழுதப்பட்டிருக்கும். பெரும்பாலும் புதிய செய்திகளை கருத்துகளை அறிமுகம் செய்வதாகவே பாடங்கள் இருக்கும். மாணவர்களின் சிந்தனைத் திறன் வளர்ச்சியடைய உதவுவதாக பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் இப்பாடங்களை முழுமையாக அறிந்து கொள்ளவேண்டுமாயின் ஆசிரியரின் விரிவான-எளிமையான விளக்கமும் வழிகாட்டுதலும் இன்றியமையாதது ஆகும். தற்போது நடைமுறையில் உள்ள படைப்பாற்றல் கல்வி முறையில் இதற்கான சாத்தியங்கள் இருப்பது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டிருப்பினும் நடைமுறையில் பயன் விளைப்பதாக இல்லை.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள படைப்பாற்றல் கல்வி முறை பற்றி ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் பின்வரும் ஐயங்களை எழுப்புகிறார்கள்.

» படைப்பாற்றல் கல்வி என்பது முறையான கற்றல் கற்பித்தல் முறைக்கு சிறந்த மாற்றாக இருக்க முடியுமா?

» 90 மணித்துளிகள் பாடவேளை என்பது நடைமுறைச் சாத்தியம் தானா? மாணவர்கள் ஒருமுகப்பட்டு அத்துணை நேரம் வகுப்பறையில் செயல்படுதல் இயலுமா?

» மனவரைபடம் என்ற ஒன்று மாணவர்களின் கற்பனை ஆற்றல் வளர்க்குமேயன்றி சிந்தனை ஆற்றலை வளர்க்குமா?

» தற்போதைய கல்வி முறையில் வளர்த்தெடுக்கப்படும் ஒரே ஒரு திறனான மனப்பாட ஆற்றலையும் மனவரைபடம் அழித்துவிடாதா?

» அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களுக்கு மட்டும் படைப்பாற்றல் கல்விமுறையை முன்னோட்டமாக செயல்படுத்திட அரசால் வழங்கப்பட்ட ஆணையைப் புறந்தள்ளி அனைத்து பாடங்களும் படைப் பாற்றல் கல்வி முறையில் நடத்தப்போவது எப்படி? அரசையும் தாண்டிய அதிகாரம் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்கு இருக்கிறதா?

» அறிவியல் பாடம் கற்பித்தலில் படங்கள், மாதிரிகள் மூலம் கற்பித்தல் நடைபெறும் நிலையில் மனைவரைபடம் எதற்கு? படங்களே சிறந்த மனவரைபடங்கள் தானே?

» சமூக அறிவியல் பாடத்தில் பயன்படுத்தப்படும் காலக்கோடுகள், நிலப்படங்கள், போன்றவை மனை வரைபடங்கள் தானே? இவற்றிற்கு இன்னொரு மனவரைபடம் தேவையா?

» மாணவர் தான் படித்தவற்றை மனவரைபடமாக வரைந்து, பின்னர் அதனைத் தொகுத்து, மீண்டும் வினாக்களுக்கு விடையாக குறிப் பேட்டில் எழுதுதல் என்பது அளவுக்கு அதிகமான சுமையாக இராதா?


» பாட அறிமுகம், விளக்கம் இவற்றிற்கு குறைவான கால அளவே(10-20 மணித்துளிகள்) ஆசிரியருக்கு வழங்கப்படுவதால் பாடம் தொடர்புடைய பிற கருத்துகளை மாணவர்கள் அறிந்து கொள்ள இயலாத நிலை இருப்பது இம்முறைக்கு பின்னடைவுதானே?

இறுதியாக, அரை வேக்காட்டுத்தனமான இத்தகைய புதிய முயற்சிகளினால் எவ்வித பயனும் விளைந்து விடப் போவதில்லை. இப்புதிய கற்றல் கற்பித்தல் முறையினால் அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை வெகுவாக குறைந்து விடும். இம்முயற்சிகள் அனைத்தும் ஆங்கில வழிப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை. கல்வி என்பது கடைச் சரக்கு தானோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# கிராமப்புற சிறார்களின் அடிப்படைக்கல்வியும் சிறுவர் உரிமையும்

ச. ஆனந்தன்




இலங்கை மண்ணில் கண்டி நகர் பெற்றிருக்கின்ற சிறப்பைப்போல (தியவதனநிலமே) வன்னி மண்ணிற்கும் அடங்காப்பற்று என்ற ஒரு சிறப்புண்டு அது மேலைத் தேயத்தவர் ஆட்சிக்கு வன்னி மன்னர்கள் அடிபணியாது செய்த கிளர்ச்சிகளின் கதையாக அமைகின்றது. சம காலத்தில் வவுனியா தெற்கு கல்விவலயம் 2008 ஆண்டில் கல்விச் சாதனையில் தீவின் கல்வி வலயங்களின் தரவரிசையில் தமிழ் கல்வி வலயங்களில் முதல் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 7 வது இடத்தையும் பெற்றிருந்தமையை யாரும் எளிதில் மறந்து விட முடியாது. இத்துணை சிறப்புகளை கொண்ட கல்விச் சமூகத்தில் கிராமப்புற சிறார்களின் கல்வியில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் 21 நூற்றாண்டில் நாட்டில் சிறுவர்கள் தொடர்பில் ஐ.நாவும் இலங்கை அரசும் மேலைத்தேய தொண்டு நிறுவனங்களும் காட்டிவரும் கரிசனைகளையும் தாண்டி கல்வியை சரிவரப் பெறமுடியாத பிள்ளைகளின் கண்ணீர் கதைகளை ஒரு கிராமத்தின் கதையூடே ஆராய விளைகின்றேன்.

வவுனியா நகரக் கோட்டத்தின் கிழக்கெல்லையில் கொக்கெலிய(தமிழில் கொக்கு வெளி) மடுகந்த சிங்களக் கிராமங்களுக்கு அருகாக கரும்பனிச்சங்குளம் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் பெருமளவில் மலையகத் தமிழ் மக்கள் வசித்து வருகின்றனர் அத்துடன் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவின் வடக்கின் அன்றைய யுத்த சூனியப்பிரதேசத்தில் அலலலுற்று இடம் பெயர்ந்தோரும் வசித்து வருகின்றனர். பெரும்பாலான மக்கள் ஏழை விவசாயிகளாகவும் கூலித்தொழிலாளிகளாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் அன்றாட வாழ்வாதார தேவைகளுக்காகவே தம் உழைப்பை செலவிடுபவர்களாகவும் பெரிதும் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இக் கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையில்லான வகுப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் பாடசாலை மாணவர் தொகை சொற்பமானதாகவே காணப்படுகின்றது. மாணவர் வரவு ஒழுங்கின்மை, இடை விலகல், சுயசுத்தமின்மை, கற்றலில் நாட்டமின்மை, ஞாபகக் குளறுபடிகள், பாடசாலை விதிகளை கைக்கொள்ளாமை, ஒழுக்கவிழுமியங்களில் நாட்டமின்மை, அடிக்கடி நோய்வாய்ப்படல் போன்ற விடயங்கள் எனது அவதானத்தின் போது கண்டறியப்பட்டது.

ஆசிரியர்களுடன் கலந்துரையாடிய போது நகர்புற பாடசாலைகளில் கல்வி கற்பது தமக்கு கௌரவமாக கருதும் பெருமளவிலான பெற்றொர் பல்வேறு தந்திரங்களைக் கைக் கொண்டு தம் பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளில் கற்பிக்கின்றனர். இங்கு கல்வியில் ஆர்வம் குன்றிய பெற்றோரது பிள்ளைகளே பெரிதும் சேர்க்கப்படுவதாகவும் அவர்களுடன் பிள்ளைகளின் கல்வி தொடர்பான கலந்துரையாடுவதற்கு அவர்கள் பாட சாலைக்கு சமூகமளிப்பது குறைவு என்றும் தெரிவித்தனர் இப்பிரதேசத்தில் குடும்ப வன்முறைகள் இயல்பான ஒன்றாக காணப்படுகின்றது பெற்றோரின் பலதார திருமணம் மத்திய கிழக்கிற்கு தாய்மார் பணிப் பெண்ணாக செல்லுதல் குடும்பத்தலைவர்கள் குடிபோதையில் திளைத்தல், சமூக வன்முறை செயற்பாடுகளில் ஈடுபடல், குடும்ப வன்முறையில் ஈடுபடல் , போன்றவை இயல்பு வாழ்க்கையாக பிள்ளைகள் அனுபவித்துவருகின்றமை கண்கூடாகும். (சட்டவிரோத மது உற்பத்தி (கசிப்பு), காட்டு மரங்களை அரிந்து விற்பனையில் ஈடுபடல், பிள்ளைகளை வீட்டில் சிறுபிள்ளைகளை பராமரிக்க கல்வியிலிருந்து நிறுத்துதல், ஆண் பிள்ளைகளை இரும்பு போன்ற உலோகப் பொருள் திருட்டு வியாபாரிகளுடன் தொழில்புரிய அனுப்புதல், 10,11 வயது சிறுவர்கள் கல்வியிலிருந்து இடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுத்தப்பட்டு சிறுவர் தொழிலாளிகளாக பயன்படுத்தப்படல், கணவன் மனைவி தாம்பத்திய நடைமுறைகள் பிள்ளைகள் காணும்படி நடத்தல்) போன்றவை சில எடுத்துக் காட்டுகளாக கொள்ளமுடியும். இவ் விடயங்கள் தீவின் பிற பகுதிகளிலும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் ஆய்வுக் குறிப்பொன்றை பார்ப்போம். அத்தடன் இதற்கான பரிகார நடவடிக்கைகளையும் ஆராய்வோமெனில்....

இலங்கையில் பாடசாலை செல்லும் 5 முதல் 17 வயதுக்குட்பட்டவர்களில் 6 வீதத்தினர் பாடசாலை செல்வதில்லையெனவும் இந்த வீதத்தில் உள்ளவர்களில் 20 வீதத்தினர் ஒரு நாளேனும் பாடசாலைக்குச் செல்லவில்லை எனவும் புள்ளிவிபரத்திணைக்கள அண்மைய ஆய்வொன்று தெரிவிக்கின்றது. இந்த வீதத்தில் உள்ளவர்களில் 80 வீதத்தினர் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளதாகவும் ஆரம்பப் பாடசாலைக்கு செல்லுகின்ற 5 தொடக்கம் 11 வயதுக்குட்பட்டோரில் அதிகமானோர் பாடசாலைக் கல்வியைத் தொடரவில்லை. எனவும் இந்த ஆய்வு குறிப்பிடுகின்றது. இவர்களில் 18வீதத்தினர் உடல் சுகாதாரக்கேடு மற்றும் உடலில் குறைபாடு காரணமாக பாடசாலைக் கல்வியில் அக்கறை காட்டவில்லை எனவும் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது கல்வித்துறையை பொறுத்தமட்டில் அரசாங்க முக்கியத்துவத்தை வழங்கி செயற்படுவதாக கூறப்பட்டு வருகின்றது ஒவ்வொரு வருடமும் கல்வித்துறைக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுவதுண்டு. அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படும் கூற்றுக்கள் எவ்வாறெனினும் கல்வித்துறையைப் பொறுத்த வரையில் தற்போதைய காலகட்டத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் ஆழமாக சிந்தித்துச் செயற்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

நாடு ஒன்றின் சமூக பொருளாதார கலாசார மனித வள அபிவிருத்தி,மற்றும் அரசியல் விடயங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு சரியான பாதையில் முன்னெடுத்து செல்லப்படுவதற்கு அந்நாட்டின் கல்வித்துறை உரியமுறையில் இயக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். நாட்டின் கல்விவளமானது அனைவருக்கும் சமமான முறையில் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து மாணவர்களைச் சென்றடைய வேண்டும். கல்வித் துறையின் வளர்ச்சியிலேயே நாட்டின் ஏனைய துறைகளின் வளர்ச்சிகளும் முன்நகர்வுகளும் தீர்மானிக்கப்படுகின்றன என்று கூறலாம் அதனால் தான் கல்விக்கட்டமைப்பானது அனைவரையும் உள்ளடக்கும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்படுகின்றது.

எனவே வறுமை மற்றும் ஏனைய சமூக காரணிகளால் நாட்டின் கல்வி வளமானது சமூகத்தினருக்கு சமநிலையற்ற வகையில் வழங்கப்பட்டுவிடக்கூடாது என்று வலியுறுத்தப்படுகின்றது. கல்வி வளமானது சமமற்ற முறையில் பகிரப்படுமானாலோ அல்லது உரியவகையில் சமூகத்தை சென்றடையா விட்டாலோ அவை நாட்டில் எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதனை மறந்து விடக்கூடாது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு கல்வித்துறை பாரிய பங்களிப்பை வழங்குகின்றது என்பதனையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். பொருளாதாரம் சரியான முறையில் இயக்கப்படுவதற்கு கல்வித்துறை உரியமுறையில் சீரான பாதையில் பயணிக்க வேண்டும். அதாவது நாடு ஒன்றின் பொருளாதார சமூக காரணிகளுக்கு ஏற்ப கல்வித்துறையில் மாற்றங்கள் தேவையாகும். இது இவ்வாறிருக்க பாடசாலை செல்லும் 5 வயது முதல் 17 வயதுக்குட்பட்டவரில் 6 வீதத்தினர் பாடசாலைக்கு செல்வதில்லை என்ற ஆய்வுத் தகவலானது அனைவரையும் சிந்திக்க வைக்கும் விடயமாக அமைந்துள்ளது. நாட்டில் அனைத்து சிறுவர்களுக்கும் பாடசாலைக்கு செல்வது கட்டாயம் என்று கூறப்பட்டு வருகையில் ஏன் இவ்வாறானதொரு நிலமை ஏற்பட்டுள்ளது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது வெறுமனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விட்டுவிடக் கூடியவிடயமல்ல இது தொடர்பில் சமூகமட்ட சிந்தனைகள் அவசியமாகும் இது குறித்து உரிய முறையில் விழிப்புணர்வுடன் செயற்படாவிடின் நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கு இதனால் தாக்கங்கள் ஏற்படலாம். இந்த இடத்தில் நாம் முக்கியமாக பார்க்க வேண்டியது மேற் குறிப்பிட்ட வீதத்தில் உள்ளவர்களில் 20 வீதத்தினர் ஒரு நாளேனும் பாடசாலைக்குச் செல்லவில்லை என்பதாகும். இது மிகவும் பாரதூரமான விடயமாகும் தற்போதைய நவீனசெயன்முறைகள் நிறைந்து போயுள்ள கல்விமுறையில் நாட்டில் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் பாடசாலைக்கு ஒரு நாளைக்கேனும் செல்லவில்லை என்பது அதிர்ச்சி தரக் கூடிய விடயமாகவே காணப்படுகின்றது. இது மிகவும் அவசரமாக அவதானம் செலுத்தப்பட வேண்டியவிடயமாகும்.

முக்கியமாக மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாமல் இருப்பதற்கான காரணங்கள் என்னவென்று நாம் சற்று ஆராய்வோமானால் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பே முதலில் எமது எண்ணத்தில் தோன்றும் விடயமாக உள்ளது. பாடசாலைக் கல்வி எனும் போது அதனுடன் இணைந்த வகையிலான பல்வேறு பொருளாதாரக் காரணிகள் ஒட்டிக்கொள்கின்றன. இவை தவிர்க்க முடியாத அம்சங்களாவும் மாறிவிடுகின்றன. இதனால் ஒவ்வொரு நாட்காலையும் திண்டாட்டங்களை சந்திக்கின்ற குடும்பங்கள் ஏராளமாக காணப்படுகின்றன. வறிய குடும்பங்களின் பொருளாதார நிலமைகளே பிள்ளைகள் பாடசாலை செல்வதைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளதைக் குறிப்பிட முடியும் அதாவது பாடசாலை செல்லும் மாணவர் ஒருவரின் தேவைகளை குடும்பத் தலைவனினால் நிறைவேற்ற முடியாத பல சந்தர்ப்பங்கள் வந்து போவதுண்டு. மாணவன் ஒருவனைப் பொறுத்தவரை ஒரு நாளைக்கு பாடசாலைக்குச் செல்வதற்காக பல்வேறு பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும். மாணவனின் நிலமை இவ்வாறிருக்க சில குடும்பங்களில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள மாணவர்களே வீட்டின் பொருளாதாரத்தை இயக்குபவர்களாக இருப்பதும் உண்டு, என்கின்ற கருத்தானது எமக்கு எதனை உணர்த்துகின்றது. தனது வீட்டின் பொருளாதாரச் சுமையை மாணவப் பருவத்தில் உள்ள ஒருவன் சுமக்க வேண்டுமானால் அந்த மாணவனின் எதிர்காலக் கல்வி தொடர்பில் யார் திட்டமிடுவது என்ற கேள்வி இங்கு எழுகின்றது. எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும் அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக் கல்வியைப் பெறவேண்டும். என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். கொள்கைகளை வகுப்பது மட்டுமன்றி அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் ஆழமாக சிந்திக்க வேண்டும் என்னதான் எமது நாட்டில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக கல்விவரை இலவசக்கல்வி முறைமை அமுலில் இருப்பதாக கூறப்பட்டாலும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான



அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வதற்கான இதர பொருளாதாரக் காரணிகளும் இருக்கவே செய்கின்றன என்ற விடயம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் பொருளாதாரத் தேவைக்கான காரணிகளை அடுக்கிக் கொண்டு போகலாம் ஆனால் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக எமது தரப்பில் சில அர்ப்பணிப்புக்களை செய்தாக வேண்டும் என்ற நிலையும் காணப்படுகின்றது. அடுத்ததாக கல்வி மீதான மாணவர்களின் அக்கறையின்மையாலும் பாடசாலையிலிருந்து மாணவர்கள் இடைவிலகும் நிலமை ஏற்படுவதை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகும். மாணவர்கள் கல்வியில் ஆர்வமில்லாது இருப்பதற்கு பல காரணங்களைக் கூறலாம் ஆனால், இவ் விடயத்தில் ஆசிரியர்களின் பொறுப்பு குறித்து பொதுவாக வலியுறுத்தப்படுகின்றது. அதாவது மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை செலுத்தும் வகையில் ஆசிரியர்கள் பாடவிதானங்களை கொண்டு நடத்த வேண்டும் என்பதுடன், கற்பித்தலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈடுபட வேண்டும், என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அதாவது மாணவர் நேயப் பாடசாலைகளாகவும் மாணவர் மையக் கல்வியைக் கொண்ட பாடசாலைகளாகவும் இருக்க வேண்டியது அவசியம் என கல்வியியலாளர் குறிப்பிடுகின்றனர். அதாவது பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை வளாகமானது அவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும் என கூறப்படுகிறது. குறிப்பாக பாலர் வகுப்பு மாணவர்கள் பொதுவாகவே பொம்மைகளை விரும்புகின்றனர் என்று வைத்துக் கொண்டால் இந்நிலையில் அவ்வாறான மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது ஆசிரியர்கள் அவர்களை பொம்மைகளுடன் வர வேற்க வேண்டும். இது மாணவர்க்கு கல்வியில் அதிக அக்கறையைத் தோற்றுவிக்க உதவும் அதாவது ஆசிரியர்களின் கையிலுள்ள பொம்மையினூடாக குறித்த பிள்ளை கற்பது ஏராளம் என கூறப்படுகின்றது.

மேலும் மாணவர் பாடசாலை செல்வதில் அக்கறை யில்லாமல் இருப்பதற்கு பெற்றோரின் கவலையீனமும் முக்கிய காரணமாக காணப்படுகின்றது. இது மிக முக்கியமாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும் ஏதோவொரு காரணத்தினால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதை தவிர்க்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர் அந்த விடயத்திற்கு துணை போகின்றவர்களாக இருக்கக்கூடாது. மாறாக பிள்ளை ஏன் பாடசாலை செல்வதற்கு ஆர்வமில்லாது இருக்கின்றது என்பது குறித்து ஆராய வேண்டும். பிள்ளைகளின் முதலாவது ஆசிரியர் பெற்றோரே என்று கூறுவர் அதற்கமைய பெற்றொர் தமது பிள்ளைகளின் ஆசிரியர்களாக நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெற்றோர் பாடசாலை பிள்ளை செல்லாதிருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பது பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் செலுத்துவதற்கு உந்து சக்தியாக அமையும் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு பெற்றோர் ஊக்குவிக்கும் வகையில் செயற்படுவது அவசியமாகும் மாறாக பிள்ளைகள் பாடசாலையைவிட்டு இடைவிலகு வதற்கு காரணமாக பெற்றோர் இருந்துவிடக்கூடாது

இன்றைய நவீன உலகில் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் பலர் மத்தியில் அதிகரித்துள்ளது இதன் காரணமாக பலரும் பல்வேறு துறைகளில் கல்வியை கற்று முன்னேறி வருகின்றனர் இதனால் உலகின் பல்வேறு வறிய நாடுகளிலும் கல்வியற்றோர் தொகை குறைந்து வருகின்றது. இலங்கையை பொறுத்த மட்டில் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எழுத்தறிவு வீதமானது சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமையை தக்கவைத்துக் கொள்வதுடன் அதனை மேலும் உயர்த்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் பாடசாலை செல்ல வேண்டிய வயதினரான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர் என்ற தரவு குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய வகையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இது கவனத்திற் கொள்ளாமல் செல்லும் விடயமல்ல ஆழமாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். முக்கியமாக அரசாங்க நிறுவனங்கள் பொது அமைப்புக்கள் சமூக நிறுவனங்கள் தொண்டர் அமைப்புக்கள் என்பன இந்நிலைமையை போக்குவது தொடர்பில் தேவையான வகையில் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் அத்துடன் கல்வித் துறையின் பாரிய மாற்றத்தினையும் மறு சீரமைப்பையும் மேற்கொள்ளப்போவதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனா தெரிவித்து வருகின்றார்.

இது தொடர்பில் நாட்டில் அனைத்து தரப்பினர் மத்தியிலும் யோசனைகளும் பரிந்துரைகளும் பெறப்பட்டு வருகின்றன. எனவே கல்வித் துறையில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை முன்னெடுக்கும் கல்வியமைச்சு மாணவர்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகுகின்ற நிலமையைப் போக்கவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவரின் பண்புசார் விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகளும் நிலைபேறான மாற்றத்தை தோற்றுவிக்க அனைவருக்கும் விடப்படும் அறைகூவலும்

சங்கரப்பிள்ளை ஆனந்தநடராஜன்
முதன்மை உளவளத்துணையாள்

இன்றைய காலகட்டத்தில் வீட்டுச்சூழல்,பாடசாலைச்சூழல், சமுதாயச்சூழல், அரசியல்,பொருளாதாரம் என்பவை ஒரு பிள்ளையின் வளர்ச்சி, விருத்தி,முதிர்ச்சியில் முக்கிய பங்காளிகளாகத் தொழிற்படுகின்றன. இவை ஒவ்வொன்றினதும் ஆரோக்கிய நன்நிலை உறுதிப்படுமிடத்து பண்புள்ள பிள்ளைகளைத் தோற்றுவிப்பதென்பது எளிதான ஒன்றாக அமையும்.

தனி மனித ஆரோக்கியத்தின் மேம்பாடானது ஒரு மனிதனின் உடல்ஆரோக்கியம், உளஆரோக்கியம், சமூகஆரோக்கியம்,ஆன்மீகஆரோக்கியத்தின் மேம்பட்ட தன்மையினால் நிர்ணயிக்கப்படுவதாக உலக சுகாதாரஸ்தாபனம் வரையறுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பிள்ளைகளின் முதலாவது கற்றல் சந்தர்ப்பம் வீட்டு சூழலிலும் இரண்டாவது கற்றல் சந்தர்ப்பம் பாடசாலைகளிலும் அதனது சமூகத்திலும் இடம்பெறுகின்றது என்பதை சமூகவியலாளர்கள் விளக்குகின்றனர். வீடு, பாடசாலை ,சமூகம் என்கின்ற முக்கோணத்தின் உள்ளேயே ஒவ்வொரு குழந்தையின் கற்றல் அனுபவங்களும் முறைசார்ந்தும், முறைசாராமலும் நேராகவும், மறையாகவும் கற்றல்களாக நிகழ்கின்றது. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பர். இளவயதில் பெறும் அனுபவங்கள் பசுமரத்து ஆணிபோல் பிள்ளைகளின் மனதிலே பதிந்து விடுகின்றன. இன்றைய குழந்தைகள் பெரியவர்களிலும் அறிவிற் சிறந்த நிலையில் இருப்பதை நேரடி அனுபவங்கள் மூலம் விளங்கிக் கொள்ள முடிகிறது. இருப்பினும் ' தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்பது போல் பிள்ளைகள் மறையான அனுபவங்களை கசப்பாக மனத்தில் சேமித்துக் கொள்ள(Post Traumatic Embitterment Disorder) பெரியவர்கள் இடமளிக்காதிருப்பதற்கான வேண்டுகோளாகவே இக் கட்டுரை அமைகிறது. குழந்தைகளின் தன்நம்பிக்கையை கட்டியெழுப்புவது சமூகநலனிற்காக ஆற்றும் பணி எனலாம். குழந்தைகள் உங்களுடையதோ அன்றி எவருடையதோ அவை இந்நாட்டின் சொத்துக்கள் என்பதை அனைவரும் மனங் கொள்ள வேண்டும். தினை விதைக்க முடியாத பெரியவர்கள் வினை விதைக்காமலிருப்பது மேலானதல்லவா?

ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்களால் திட்டமிடப்பட்ட நிலையில் பிறக்கும் போது வேண்டப்பட்ட குழந்தைகளாகவும் (Wanted child) அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில் பிறக்கும் போது குடும்பத்தால் வேண்டப்படாத குழந்தைகளாக(Unwanted child) கொள்ளப்படுகின்றனர். இதனால் குழந்தைகள் வீட்டுச்சூழலிலேயே மனஅழுத்தங்களுக்கு ஆளாகின்ற சந்தர்ப்பங்கள் உருவாகின்றது. இவ் அழுத்தங்களை வெளிப்படுத்த ஆரோக்கியமான முறைகளை அறிமுகப்படுத்த சமூகம் தயார்நிலையில் இல்லாத தன்மையையே சமூக பிரச்சினைகள் உருவாவதற்கு கால்கோளிடுகின்றன. ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறு தாக்கம் உண்டு. என்கின்ற நியூட்டனின் விதியை நிராகரிப்பதே நிகழ்கால முகாமைத்துவங்களாக உள்ளது.

அண்மைக் காலத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே வெவ்வேறு பாடசாலைகளில் கற்றல், பரீட்சை, ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் வேண்டத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்தேறி வருவதை பத்திரிக்கை, வானொலி மூலமும் நேரடி அனுபவங்களாகவும் அறிய முடிகிறது. இப்போக்குகள் தொடர்வது கல்வி நிறுவனங்கள் சார்ந்த அவநம்பிக்கையை சமூகமட்டத்தில் உருவாகுவதற்கு துணையாகின்றமை வருத்தத்திற்குரியதாகும். இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோளமயமாதல் சார்பாக மக்கள் நலனோன்பு நிறுவனங்கள் வலுவிழந்து போவதற்கான களத்தை தோற்றுவிப்பதுடன் பல்தேசியக்கம்பனிகளிடம் மண்டியிட சமூகத்தை நிர்ப்பந்திக்கிறது. இது ஒரு அரச இயந்திரத்தின் நிறைவேற்றுத்துறை, நிர்வாகத்துறையினரின் மீதான அவநம்பிக்கையையை சமூகமட்டத்தில் வலுப்படுத்துவதாக அமைகின்றது.

தமிழ்ச் சமூகத்தில் இழப்புக்களின் வரலாற்றில் நீண்டு செல்லும் பட்டியலினை தடுத்து நிறுத்தும் பொருட்டு அனைவரது கவனத்தையும் ஒருமுகப்படுத்தி எதிர்கால சமூகத்தை தூக்கி நிறுத்துவதற்கான முயற்சியில், அனைத்து தரப்பினரும் ஒன்று பட்டுழைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது.

இன்றைய தலைமுறையினர் தம் எதிர்கால சந்ததியினராகவுள்ள இளையதலைமுறையினர் தொடர்பில் ஆழமான கரிசனையை கொண்டு தொழிற்படுவதற்கான நேரமிதுவாகும். அனைத்தையும் இழந்தும் நாம் இழக்கக் கூடாத அரிய செல்வம் கல்வியாகும்.

காலங்கடந்த ஞானம் பெறுவதால் யார்க்கும் எதுவும் ஆகப்போவதில்லை. இன்றைய சூழலில் இறந்தகாலத்தின் நிழல்களை ஆராய்வதிலே கூடிய பங்கெடுப்பதிலும் இனி வரப்போகின்ற வரப்பிரசாதங்களை கையேற்க எமது குழந்தைகளை தயார்ப்படுத்த வேண்டியமை அனைவரதும் தார்மீக கடமையாகும். எமது குழந்தைகளின் ஆரோக்கியமான நிலையே எதிர்காலத்தில் அவர்களை சாதனையாளராவும் பெறுமதிமிக்க நிலையையும் அடைய உதவப் போகின்றது.

சமகாலத்தில் சமூக அவலங்களின் பிறிதொரு காட்டியாக சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் பிறழ்வு நடத்தைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை கண்கூடான வெளிப்பாடாகும். இது சமூகபிரக்ஞை உடைய அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சமாகும். வடக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெப்பொழுதும் இல்லாதளவு பிள்ளைகள் நெறி பிறழ்வதற்கான சந்தர்ப்பங்கள் காட்டாறு என அதிகரித்துள்ளன. இது விடயத்தில் குழந்தைகளை தம் எதிர்காலத்தின் அடையாளங்களாக கருத வேண்டிய பெற்றார் மற்றும் ஆசிரியர்கள் விழிப்புணர்வு ஊட்ட வேண்டியவர்களாகவும் கண்காணிப்பு செயலில் ஆர்வம் காட்ட வேண்டியவர்களாகவும் உள்ளனர். ஏனெனில் 'சுவர் இருந்தாலே சித்திரம் வரைய முடியும்' பெற்றோர், ஆசிரியர்கள் எதிர்காலம் தொடர்பாக உங்களின் நல் அடையாளமாக வரையப் போகின்ற சித்திரத்திற்கான சுவர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு எனில் அது அவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துதல் ஆகும். பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பில் எத்துணை தூரம் கரிசனைப்படுகிறோம் என்பது ஒவ்வொருவரதும் சிந்தனைக்கும் உரியது. இதன் முதற் படியாக நாம் எந்தக் குழந்தையினதும் தனித்துவங்களை பேணவும் உரிமைகளை மதிக்கவும் முன் வருவோம். 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பர். எம்மனமாற்றம் என்பது சமூகமாற்றத்தில் சிறு துளி ஆயினும் அது நாளடைவில் கங்கையாக பெருகி குழந்தைகளை வளப்படுத்தட்டும்.

யுத்தம்,சுனாமி போன்ற பேரிடர்களில் மூழ்கி தப்பிப்பிழைத்தவொரு சமூகத்தில் பிறழ்வுகள் இயல்பானவை எனினும் இது விடயத்தின் நிகழ்தகவை இழிவளவாக்குதலில் ஒவ்வொரு தனி மனிதனதும் தன் வகிபாகங்கள் தொடர்பில் மறு பரிசீலனை செய்ய வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகும். ஏனெனில் விரும்பியோ விரும்பாமலோ இச் சமூகத்திலேயே நாமும் எம் சந்ததியினரும் வாழவேண்டிய தேவை இருப்பதினால், சமூகத்தின் பிறழ்வு நிலை ஏதோஒரு வடிவத்தில் எம்மையும் எம் குழந்தைகளையும் தன் தாக்கத்திற்குள் உள்ளீர்க்கும் அபாயம் உள்ளது. இது விடயத்தில் நிகழ்காலத்தில் பொறுப்பு கூறவேண்டியவர்கள் அனைவரும் தன்நிலை விளக்கத்தை நியாயப்படுத்தும் விதமாக மூடிமறைக்கின்ற தந்திரோபாயங்களை பெருமளவில் கையாளமுற்படுவது நாளடைவில் எதிர்கால சந்ததியினரை ஆழமான சிக்கல்கள் நிறைந்த பிரச்சினைக்குள் மூழ்கடிக்கும் என்பதனால், ஆரோக்கியமான வழிமுறைகளில் நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்ட வேண்டிய கட்டாயமுள்ளது.

பிரச்சினைகளை கையாள முற்படுபவர்கள் அதற்காக தம்மைத் தயார் செய்து கொள்ளவதென்பது மிக பிரதானமானது. இது பின்வரும் படிநிலைகளில் அமைய வேண்டும்.

1. தன்னை விஞ்ஞான பூர்வமான மாற்றத்திற்காக மனதளவில் தயார்ப்படுத்த வேண்டும். தலையீடுகள் தொடர்பில் திட்டம் ஒன்றை வரைந்து கொள்ளுதல் நலம்.
2. தனது உடல் ரீதியிலான செயற்படுதிறனை மேம்படுத்த வேண்டும்.
3. சமூக ஆதரவு நல்கக்கூடியவர்களை ஒருங்கிணைத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

4. பொது நோக்கம் தொடர்பில் ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டும்.

5. நடைமுறை சாத்தியமான திட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் கண்காணித்தலும்

6. சிக்கலான நிலைமைகள் தொடர்பில் விசேட கவனம் எடுத்தல் வேண்டும்.

பொது நோக்கில் உடன்பாடு, தொடர் கண்காணிப்புக்கள் என்கின்ற விடயங்கள் மிகமுக்கியமானவை. அது நடக்கவில்லையெனில்'உள்ளதும் போச்சுதடா நொள்ளைக் கண்ணா' என்ற முடிவுகளே அமையும் எனவே விமர்சனங்களை மட்டுமே செய்கின்ற ஒருவனாக வாழாமல் சமூக அக்கறையை பங்கெடுக்கின்ற மனோநிலை வேண்டப்படுகின்றது. இன்று கல்வி சமூகத்திலே எத்தனையோ செயலமர்வுகள், பயிற்சிகள், பட்டறைகள் நிகழ்த்தப்படுகின்ற போதிலும் அதன் தொடர்கண்காணிப்புகள் இடம் பெறாமலும், இடர்பாட்டை இனம்காணுவதற்கான தேடலுக்கான அவகாசத்திற்கு நேரம் ஒதுக்கப்படாமை என்பன பிரச்சினைகளிலிருந்து நழுவிச் செல்லும் நிலைக்கு துணையாகின்றது. இது இருட்டினில் தொலைத்த ஒரு பொருளை அந்த இடம் இருளாக இருப்பதை காரணம் சொல்லி பிறிதொரு வெளிச்சம் உள்ள இடத்தில் தேடுவதற்கு ஒப்பானது. இப்போக்குகள் சமூகம் கல்வியுலகின் மீது நம்பிக்கை இழக்க தூண்டுமே தவிர பயனுள்ள மாற்றங்களைத் தராது.

**வீட்டுச்சூழல்**

குடும்பம் என்பது சமூகத்தின் மிகச்சிறிய அலகு என்பர் மனிதனை சமூகப்பிராணி எனவும் சமூகத்துடன் சேர்ந்து வாழவே விரும்புபவன் எனவும் உளவியல் விளக்குகின்றது. தனிமனிதன் குடும்பமாவதற்கெனவும் குடும்பமான பின் தன் எதிர்கால சந்ததியினரை உற்பத்தி செய்வதற்கான தயார்படுத்தல்களையும் செய்ய வேண்டிய தேவையின் அவசியத்தை உளவியலாளர் ஆய்வுகள் மூலம் நிறுவியுள்ளனர்.

'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானேவளரும்' என்பார்கள். ஊரவனுடைய பிள்ளையே இன்று ஒருவனுடைய மனைவியாகிறாள். எனவே அவளுடை மகிழ்ச்சியுடனான புரிதலே அவள் வயிற்றில் வளரும் உன் குழந்தையின் ஆரோக்கியத்தை தீர்மானிக்கப்போகின்றது எனப் பொருள் கூறுவர். குடும்பமொன்றின் அத்திவாரமாக

இணையப்போகின்ற கணவன் மனைவி, என்கின்ற அந்த ஆணும் பெண்ணும் தத்தமது எதிர்கால அபிலாசைகள் தொடர்பில் தெளிவான ஒரு பார்வையைத் தோற்றுவிக்க மனம் திறந்து பேசுவது (openness) என்பது அவசியமானது. திருமணத்தின் முன்னான உளவளத்துணை என்பது இன்றைய காலத்தில் அனைவருக்கும் உகந்த ஒன்றாகும். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட காலங்கள் மாறி ரொக்கத்தில் திருமணங்கள் நிச்சயிக்கப்படுவதால் மனந்திறந்து பேச மணமக்களுக்கு அவகாசமில்லை. மேலும் சீதனக் கொடுமையால் முதிர்கன்னிகைகளை சுமந்திருக்கும் தமிழ் சமூகம் அது சார்ந்தெழும் பிரச்சினைகளுக்கு அடக்கல் ஒன்றையே மாற்றீடாக முன் வைக்கின்றது. ஒருவரது பிள்ளைப் பராயத்தில் சமூகத்தால் விதைக்கப்பட்ட அடக்குமுறைகளின் அறுவடையே பிறழ்வு நடத்தைகளாகின்றன. தமக்குள் சேமிக்கப்பட்டிருக்கும் அழுத்தங்களை போதையிலோ, சமூகமுரண்பாட்டிலேயோ தீர்வு காணவே பலர் முயல்வதே சமூக அவலமாக உள்ளது.

'உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவுகலவாமை வேண்டும்'

என ஔவையார் அன்றே பாடியது காலத்தின் தேவையுணர்தே எனினும், இன்றும் பல போலியான முகக்குறிகளை தமக்காக கொண்டுள்ள சமூகத்திலேயே நாம் வாழுகின்ற துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. போலித்தனங்களை சமூகத் தந்திரோபாயங்களென புகழ் மாலை சூட்டும் முகமூடி மனிதர்கள் நிறைந்து விட்ட இன்றைய சமூகத்திலே ஒருவரை ஒருவர் விளங்கிக்கொள்ள அவகாசமின்றி திருமணபந்தத்தில் இணையும் தம்பதியர் பலர் வெகு சீக்கிரத்திலேயே தன் துணையின் பிறழ்வான நடத்தைகளின் நிஜத்தை மற்றவர் கண்டுணரும்போது, அதை ஜீரணிக்க இயலாத சந்தர்ப்பம் உருவாக்குகின்றது. உதாரணமாக மதுப்பழக்கத்தைக் கொள்ளலாம். இது தொடர்பில் மனைவியின் மனஅழுத்தமானது தன் துணையை ஏற்றுக்கொள்ள இயலாத மனோபாவத்தை தோற்றுவிக்கின்றது. சமூக விழுமிய வேலிகள் போலி கௌரவங்களாய் மனப்புழுக்கத்தை இங்கு அதிகரிக்கும் அம்சங்களாகவே காணப்படுகின்றன. ஒரு கட்டத்தில் குடும்ப விரிசல் நிகழ்கின்றது. நாளடைவில் இது தொடர்பில் உறவுகளாலும் சமூக அக்கறையுள்ளவர்களாலும் சமரசம் புரிய மேற்கொள்ளப்படும் தலையீடுகள் அர்த்தமற்றதாயின் குடும்பபிரிவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகுவதுடன் அக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக்குரியதாக மாறுகின்றமை கண்கூடாகும். அங்கு பெற்றார் தம் கோபத்தை பிள்ளைகள் மீது வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களை காண முடிகின்றது. இனி பெற்றோர்களின் சாயல்கள் பிள்ளைகளில் தெரியும் போது அச்சாயல்களை குடும்ப ஒற்றுமையின் போது இரசித்தவர்களுக்கு, பிரிவின் போது அது எரிச்சலூட்டுவதாக அமைகின்றது. இதனால் பிள்ளைகள் பெற்றாரிடம் அல்லது குடும்ப உறுப்பினரிடம் வசைமொழிகளை கேட்கவேண்டியுள்ளது. இது பிள்ளைகளிலும் பெற்றொர் தொடர்பான கசப்பான அனுபவத்தை வழங்குவதாய் அமைகின்றது. இது விடயமாக தமது அபிப்பராயங்களை பிள்ளைகள் கலந்துரையாட பெரியவர்கள் அனுமதிப்பதில்லை. எனவே பிள்ளைகள் தமக்கு சாதகமான இடங்களிலேயே இதைவெளிப்படுத்துகின்றனர். அவை விளையாட்டாகவோ, பொருத்தமற்ற செயல்களாகவோ (குளப்படி) அமைகின்றன. இந் நடத்தைகள் வெளிப்படுமிடங்கள் வீடாகவோ அல்லது வெளியிடமாகவோ அமையலாம். பிள்ளைகளின் சிக்கலான நடத்தைகளுக்கு பெரும்பாலும் குடும்ப கட்டமைப்பின் தன்மைகளே ஏதுவாகின்றன என்பதை பெரியவர்கள் உணரவேண்டும். இன்று விடுமுறை நாட்களில் பெற்றார் தம் பிள்ளைகளை சுயாதீனமாக பொழுதைக் கழிப்பதற்காக வெளியில் அனுப்புகின்றனர். அப்பிள்ளைகள் தம் கண்முன்னே செய்கின்ற குளப்படிகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுகின்ற தந்திரோபாயமாக இதை கையாளுகின்றனர். இது பிள்ளைகளை தம் மனம்போலத் தொழிற்பட்டு நாளடைவில் பாரிய தவறான வழிகளுக்கு இட்டுச்செல்லும் என்பதை பெற்றார் உணர்வதில்லை. பிள்ளைகளுடன் நேரத்தை நட்புடன் செலவிடுவதால் அவர்களின் உட்கிடக்கைகளை அறிந்து உதவ முடியுமல்லவா?

இன்றைய காலகட்டத்தில் பல குடும்பங்கள் ஒற்றைப் பெற்றாரைக் கொண்டதாகவும் (Single parent), உருக்குலைந்த குடும்பங்களாவும் காணப்படுகின்றன. கைதுகளின் பின் காணாமல் போனோர் கொண்ட குடும்பங்கள் மேலும் பொருளாதார மேம்பாட்டினை ஒரே நோக்காகக் கொண்டு வெளிநாட்டு வேலைக்காக தாய் அல்லது தந்தை வெளிநாட்டில் நீண்ட காலமாக பணிபுரியும் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களும் மேலும் யுத்தத்தின் எச்சங்களாய் பெற்றோரைப் பறிகொடுத்து குழந்தைகள் இல்லங்களிலும் உறவினர் பாதுகாவலர்களிடமும் தஞ்சமடைந்த குழந்தைகள் எம் சமூகத்திலே காணப்படுகின்றனர். இங்கு ஒற்றைப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்கள் என்ற வகுதிக்குள் விதவைகள், தபுதாரர்கள், விவாகரத்துப் பெற்றவர்கள், கணவன் கைதாகி காணாமல் போன நிலைமை, சட்டப்படி அன்றியும் சமூக அங்கீகாரமற்றும் குழந்தை பெற்றவர்களும் அடங்குகின்றனர். வேண்டாத கர்ப்பத்தால் பிரசவித்த குழந்தைகள் பல வழிகளிலும் சமூகத்தால் ஒதுக்கப்படுவதாலும் தம் சுய அடையாளக் குளப்பத்தாலும் சமூகத்துடன் முரண்படும் சந்தர்ப்பங்கள் அல்லது முழுமையாக ஒதுங்கிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றது. குழந்தைகள் காப்பகங்களில் உள்ள பிள்ளைகளில் பெருமளவினரின் நிலையும் இதுவே. பிறிதொரு ஆய்வு புள்ளி விபரங்களினடிப்படையில் யுத்தத்தின் பின் வடக்கு கிழக்கில் எண்பத்தொன்பதினாயிரத்திற்கு மேற்பட்ட விதவைகள் உள்ளதாகவும் இவர்களில் பெருமளவு எண்ணிக்கையினர் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்கிறது.

இனி உருக்குலைந்த குடும்பங்கள் எனும் போது குடும்ப முரண்பாடுகள் காரணமாக கணவன் மனைவி தொடர்பாடலின்மை, குடும்பப் பிரிவுகள் கணவன் அல்லது மனைவி குடும்பத்திலிருந்து ஒதுங்கியிருத்தல், அல்லது மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகள், திட்டமிடலின்மை,பலதார மணங்கள், பிறழ்வு நடத்தைகள்,குடிப்பழக்கம், பொருளாதார நலிவு நிலைகள், அர்த்தமற்ற சந்தேகங்கள் காணப்படுகின்றன. இக் குடும்ப சூழல்களின் தாற்பரியங்களை விளங்கிக் கொள்ள மறுப்பவர்கள் அல்லது இக் குடும்பங்களை இனங்கண்டு புறக்கணிப்பவர்கள் பாடசாலைச் சூழலில் பெருமளவில் வலுவுள்ளவர்களாக காணப்படுகின்றமையும் பிரச்சினைகள் புரையோடிப் போவதற்கான அடித்தளமாகின்றன. இது விடயத்தை பாடசாலை சூழலின் செல்வாக்கு என்ற பகுதியில் விரிவாக ஆராய்வோம்.

வீடு என்பது பல பிள்ளைகளது ஆளுமையின் அத்திவாரமாக அமைகின்றது. இன்று அனேக வீடுகளின் அகநிலை அமைதி நிறைந்ததாக இல்லை. வீடுகளில் பெற்றோர் அவர்களது வகிபாகம் தொடர்பில் மீள் பரிசீலனை இன்றி தொழிற்படுகின்றமை பிள்ளைகளின் பிறழ்வு நிலைகள் பிரசவிக்கப்படுவதற்கான களங்களைத் தோற்றுவிக்கின்றன. முதலில் பெற்றோர்கள் தங்கள் கடமை தொடர்பில் சாதகமான நடைமுறைகளை பின்பற்ற முன்வரவேண்டும். பிள்ளைகளுக்கு பெற்றோர் உரையாற்றாமல் அவர்களுடனான தொடர்பாடல் உரையாடுதலாக அமைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

வேண்டும். இவ் உரையாடலானது, பெற்றார் பிள்ளைகளைக் கற்றுக்கொண்டு அவர்கள் உடனிருந்து வழிகாட்ட (Attending behavior) உகந்ததாக அமைய வேண்டும். இந் நிலை தோன்ற பெற்றார் தம் உளமுதிர்ச்சியை வளர்த்துக் கொள்ளல் அவசியமானது. இது பெரியவர்களது மனவெழுச்சி முகாமையை மேம்படுத்த உதவும். பிள்ளைகளுக்கும் நல்லதொரு முன்மாதிரியாய் அமையும். பல சந்தர்ப்பங்களில் தம் பிரச்சினைகளுக்கான வடிகாலாகவே பிள்ளைகளை கண்டித்தலை பெற்றோர் மேற்கொள்ளுகின்றனர். இம்முறை எத்துணை தூ ரம் நீண்டகாலத்தில் நல்லதொருமாற்றத்தை உருவாக்குகிறது என்பதை ஆராய பெற்றோர் முன் வரவேண்டும். இன்றைய பெற்றோர்களை பல்வேறு குணாம்சங்களின் அடிப்படையாகக் கொண்டு நாம் மூன்றாக வகுக்கலாம்.

1. பிள்ளைகள் மீது முரட்டுத்தனமாக அன்பு செலுத்துகின்ற பெற்றார்
2. பிள்ளைகள் மீது மென்னையான அன்பு செலுத்துகின்ற பெற்றார்
3. பிள்ளைகளை உணர்ந்து செயற்படஉறுதியான வெளிப்பாடு காட்டும் பெற்றார்

இன்றைய தேவை மூன்றாவது வகைப் பெற்றோரே பிள்ளைகளைப் புரிந்துகொண்டு பக்குவமாக வழிநடத்தக் கூடிய ஆளுமை நிறைந்த பெற்றோரே ஆகும். பிள்ளையின் சாதகமான பாதகமான வெளிப்பாடுகளுக்கமைய முள்ளாகவும் மலராகவும் பிள்ளைக்கு உணர்த்த உறுதியான வெளிப்பாடு கொண்ட பெற்றோரே காலத்தின் தேவையாக உள்ளது.

வீட்டின் அன்றாட ஒழுங்கு நடைமுறையை அனைத்து வீட்டு உறுப்பினர்களுடைய சம்மதத்ததுடனும், கால அட்டவணையாக நடைமுறைக்கிடவேண்டியது வீட்டுத் தலைமையின் பொறுப்பாகும். இங்கு செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் தரமறிந்து சிறுவர்களை பராயமடைந்தோர் அவர்களது வேலைகளை முடிப்பதற்கு வசதிப்படுத்தல்களைச் (Facilitation for work) செய்ய முடியும். வேலைப் பங்கீடு அனைவருக்கும் சமனானதாகவும் ஏற்றநிலையிலும் வழங்கப்படவேண்டும். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் செயற்பாடுகளுக்கு ஏனையவர் முன்னுரிமையளிக்க வேண்டும். உதாரணமாக பிள்ளைகள் படிக்கும் வேளையில் பெரியவர்களும் ஏதாவது வாசிக்கலாம். அந் நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்ப்பது அவர்களின் கற்றலை மதிப்பதாக அமையும். இதுவும் ஓர் ஊக்கல் தந்திரோபாயம் என கொள்ள வேண்டும். தொடர்பாடல் என்பது கூட பெரியவர்களால் சிறுவர்க்கு முன் மாதிரியாக நிகழ்த்தப்படல் நன்மை பயக்கும். இது பிள்ளைகளுக்கு பிறரை மதிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் மற்றவர் கருத்துக்களை செவிமடுக்கவும் கற்பதாக அமையும்.

வீட்டு வன்முறைகள் என்பது, எமது சமூகத்தில் அண்மைக்காலமாக பெருக்கமடைந்து வருகின்ற உளசமூக பிரச்சினையாக காணப்படுகின்றது. தமிழர் சமூகத்தில் மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த யுத்தத்தின் பாதகமான விளைவுகளின் பல்வேறு காட்டிகளில் ஒன்றாக வீட்டு வன்முறைகளை கொள்ள முடியும். ஒரு குடும்பம் என்கின்ற நிறுவனத்தின் இயல்பான செயற்பாடுகளுக்குப் பாதிப்பை விளைவிப்பதாக இது அமைகின்றது. வன்ம உணர்வுடைய தனி நபர் அல்லது குடும்ப அங்கத்தவர்கள் தன் குடும்ப உறுப்பினர்கள் மீதும் உறவினர் அயலவர்கள் மீதும் வார்த்தைகள் மூலமாகவோ, செயல்கள் மூலமாகவோ ஏற்படுத்துகின்ற ஆக்ரோசமான செயற்பாடுகளாக வீட்டு வன்முறைகள் காணப்படுகின்றன. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் போன்ற பலவீனமான நிலையிலுள்ளோரே பெரும்பாலும் இது விடயத்தில் பாதிக்கப்படுபவர்களாக காணப்படுகின்றனர். அரசு சார்ந்த, அரசுசாராத அமைப்புக்கள் பல சட்டநடைமுறைகளினூடாகவும் இன்னும் சமூக விழிப்புணர்வூட்டலில் எண்ணிறைந்த பணிகளை ஆற்றிவருகின்ற போதிலும் இதன் தீவிரம் குறைவதாக தெரியவில்லை.

பெரியவர்களின் மனவரட்சியான போக்குகளின் பின்னே இவர்களது கடந்தகால வாழ்க்கையின் இழப்புக்கள் (Grief) பகிரப்படாது இருக்கின்ற கசப்பான நிலையும் (Post Traumatic Embitterment Disorder) நிகழ்கால பிறழ்வு நடத்தைகளுக்கு ஒரு காரணமாகலாம்.

பொதுவாகவே குழந்தைகள் இறந்தகாலம், எதிர்காலம் என்பவற்றைவிடவும் நிகழ்காலத்தில் வாழவிரும்புபவர்கள். அதனால் நடைமுறை உலகவிடயங்களில் அவர்களின் தலையீடென்பது தவிர்க்க முடியாததொன்றாகும். குழந்தைகளினை இயல்பான உலகத்திற்குள் பெரியவர்களின் கனவுகள்,இலட்சியங்கள் உட்புகுத்தப்படும் போது விடயங்களின் தன்மையாலும், தலையீட்டு முறைகளாலும் பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்குமிடையே மனதளவில் இடைவெளி உருவாகின்றது. இவ் இடைவெளிகளை பெரியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சீர்செய்ய முற்படாமையாலும், பெரியவர்களின் தனித்துவம் தொடர்பான பிடிவாதங்களும், பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்குமிடையேயான இடைவெளியை நிரந்தரமாக்குகின்றது. தலைமுறை இடைவெளியின் நீளமும் சமகால விஞ்ஞான வரவுகளால் ஒரு சில வருட வயதுகளின் இடைவெளிக்குள்ளேயே பாரிய தலைமுறை இடைவெளியாக காணப்படுகின்றது.

கடந்த பல தசாப்தங்களின் முன் கீழைத்தேய நாடுகளில் பெரியவர்கள் தம் பிள்ளைகளை தம்மில் தங்கி வாழ்வதைக் கொண்டிருந்ததால் அனைத்து முடிவுகளிலும் பெரியவர்களின் வழிகாட்டல்கள் நிரம்பியிருந்தது. கூட்டுக் குடும்பவாழ்க்கை முறை சிதைவடையாதவரையில் இது வெற்றியளித்தது. கைத்தொழிற்புரட்சியின் பின் தனிமனித முனைப்பு மேம்பட்டு, கூட்டுக்குடும்பவாழ்க்கை நலிவுற்று தனிமனித முனைப்பு மேலோங்கியது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை கருக்குடும்பங்களாக மாறியது. பொருளாதார நிலையில் வளர்ந்த நாடுகள் மேலும் வளர்ச்சியுற, வளரும் நாடுகள் பல இன்றும் வளரும் நாடுகளாகவேயுள்ளமையும் இவற்றின் வளர்ச்சியில் யுத்தம், வறுமை, பாகுபாடுகள் என்பன பின்னோக்கிய நிலைக்கு வழிசமைப்பதாய் உள்ளன. இது ஒவ்வொரு குடும்பங்களிலும் வளரச்சி விருத்தியை தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளதுடன், பெற்றோரின் கையறு நிலைக்கும் (Helpless) பிள்ளைகளை பிறழ்வான நிலைக்குள் சமூகத்தில் உலவவிட ஏதுவாகின்றது.

யுத்தத்தின் போதான பௌதீக, மனித அழிவுகளை கணக்கெடுத்துப் பார்ப்பது போல சமூக நியமங்கள் தொலைந்து போவதை நவீனத்துவ சிந்தனையாளர்கள் சீர்தூக்கிப் பார்க்கத் தவறுகின்ற சந்தர்ப்பங்களில் ஒன்றாகவும் இது கொள்ளப்பட வேண்டும். ஒரு சமயம் இது விடயம் அவர்களின் குவி சிந்தனையின் எல்லைகளுக்கப்பால் அமைந்திருக்கலாம். எது எவ்வாறாயினும் சமூக இருப்பை ஆரோக்கியப்படுத்துவதற்கு அனைவரும் அணிதிரள வேண்டிய தேவையை இந் நிலைமைகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. குடும்பங்களின் வலுவூட்டமென்பது சமூக ஆரோக்கியத்தின் நிலைப்பிற்கு அடிநாதமாக விளங்குகின்றது. பொதுவாகவே அனர்த்தங்கள் சமூக இருப்பை சீர்குலைத்து மக்களின் உள ஆரோக்கியத்தின் புள்ளியை இழிவளவாக்குவது உண்மையாகும். அதை மீளக்கட்டியெழுப்புவதன் தார்மீக பொறுப்பு அச்சமூக ஆர்வலர்கள் அனைவரதும் கடமையாகும்.

**பாடசாலைச் சூழல்**

வீட்டுச் சூழலில் பொருத்தமற்ற அனுபவங்களை பெற்றுக் கொண்ட குழந்தைகளுக்கு கூட பாடசாலைகள் ஆறுதல் அளிக்கும் ஆலமரங்களாக திகழவேண்டும்.

'ஆசிரியப்பணி அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி' என்பர். இன்றை ஆசிரியப்பணியில் ஈடுபடுவோரில் 50 வீதமானவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நிலையில் கடமைபுரிந்து வருகின்றனர். சமூகத்திற்கான முன்மாதிரிகளாகவும் திகழ்கின்றனர். நாற்பது ஆசிரியர்கள் பணிபுரிகின்ற பாடசாலையிலே 20 பேர் எப்பொழுதும் கருமமே கண்ணாக உழைத்து வருகின்றனர். மிகுதி 20 பேரில் 45 பங்கினர் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவிதமாக தொழில் புரிகின்றனர். எஞ்சிய 15 பங்கினரான நான்கு பேரே பாடசாலையை சிக்கலான வழிக்கு இட்டு செல்கின்றனர். இப் பாகுபாடுகளை சமூகம் இனம்கண்டு கொள்ளாமல் பெருமையோ சிறுமையோ ஒட்டுமொத்தமானவரையும் விழிப்பது பொருத்தமல்ல. இந்த நான்கு பேரை இனங்காண்டு கொள்வது எம் குழந்தைகள் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பாகும்.

'பெண்பெருமை பேசிப்பேசி
காலம் கழிப்பார் தம்பெருமை
குலையுமென்றால் பெண்ணை அழிப்பார்'

என கண்ணதாசன் எழுதியது போல இவர்கள் தம் தேவைகளை ஈடுசெய்ய பிள்ளைகளை எத்தகைய ஆபத்தில் சிக்கச் செய்யவோ அல்லது அவர்களது எதிர்காலத்தையே இருளில் அமிழ்த்தவோ அல்லது அவர்களை உயிர்பலியிடவோ தயங்காதவர்கள். இவர்களை சரியாக இனம் கண்டு கொள்வது சமூக அவலத்தைக் குறைப்பதற்கான ஒரு வழிஎனலாம். இவர்களை பாடசாலையில் அதிபராகவோஇ பிரதிஅதிபராகவோ, வகுதித்தலைவராகவோ, வகுப்பாசிரியராகவோ, பாடஆசிரியராகவோ பாவனை செய்யக் காணலாம். 'ஒரு குடம் பாலில் ஒரு துளி விடம்' போன்ற இவர்களை சமூகம் இனங்கண்டு தங்குழந்தைகளை காத்துக் கொள்ளவேண்டும்.

குழந்கைள் பெரியவர்களுடனான உறவாடலுக்கு குடும்பக் கட்டமைப்பின் சாதக, பாதக நிலைமையின் செல்வாக்கைப் போன்றே பாடசாலை சூழல் ஒரு குழந்தையின் தனித்துவத்தில் சாதக பாதக நிலைகளை தோற்றுவிக்கின்றது இலவசக் கல்வி, இலவச பாடநூல், இலவச சீருடை, இலவச மதியஉணவு, பால். முட்டை வழங்குதல் போன்ற பல விடயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நடைமுறைப்படினும் இலவசக் கல்வியை பெற்றுக் கொள்வதில் பல பிள்ளைகள் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலையிலிருப்பதை காணமுடிகிறது. கல்வி என்பது சில குழந்தைகளுக்கு வரமாகவும் பல குழந்தைகளுக்கு சாபமாகவும் நாட்டில் உள்ளதை கடந்தகால புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்துகின்றன. அதிலும் உயர்கல்வி என்பது பெரும் சூதாட்டமெனவே நடைமுறையில் காணப்படுகின்றது. இப் பாகுபாடுகள் பல்வேறு வடிவங்களில் பால், இன, மத, பிரதேச, சாதி, பொருளாதார வேறுபாடுகளின் அடிப்படையில் விருட்சங்களாக கிளை பரப்பிநின்று தனிமனித அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிப்பதைக் காணலாம்.

ஒரு பாடசாலையின் குறித்தவொரு வகுப்பை எடுத்துக் கொண்டால் அவ் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் கற்றலுக்கு பொருத்தமற்றவர்கள் என ஒரு ஆசிரியர் கூறுவார் எனில் அவரது வகுப்பறை முகாமைத்துவத்தின் குறைபாடு என்றே கொள்ள முடியும். சில பாடசாலைகளில் கெட்டிக்கார வகுப்புக்கள் என்றும் மொக்குகளின் வகுப்புகள் (மெல்லக்கற்போர்) என்ற பாகுபாடுகள் காணப்படுகின்றது. இது பிள்ளைகளை உளரீதியாக பாதிக்கும் என்பதை நன்கறிந்தும் இரகசிய நடைமுறைகள் காணப்படவே செய்கின்றன. சில சமயங்களில் இதற்கு நியாயப்படுத்தல்களாக மீத்திறன் குன்றிய மாணவருக்கு விடயங்களை எளிமைப்படுத்தி கற்பிக்கவும் மேலதிக வகுப்புக்களை மேற்கொள்ளவுமே செய்யப்படுகிறது என்று கூறப்படினும் நடைமுறையில் உண்மை யாதெனில் பாடசாலைக்கு வந்த புதிய ஆசிரியர்களுக்கு கற்குந்தரம் குன்றிய மாணவர்களை கொண்ட வகுப்புக்களையும் பாடசாலையில் தனிப்பட்ட அதிகாரமுடைய ஆசிரியர்களுக்கு மீத்திறன் மாணவர்களையுடைய வகுப்புக்கள் வழங்கப்படுவதால் கல்வி அதிகாரிகளின் கண்காணிப்பில் மீத்திறன் மாணவரின் வகுப்பாசிரியர் நல் அடைவுகளைகொடுத்திருப்பதாக பாராட்டுக்கும்இ இதர வகுப்பாசிரியர் நச்சரிப்புக்கும் ஆளாகிறார். இந் நச்சரிப்புக்களின் மன அழுத்தமானது இடம்மாறிய கோபங்களாக (Anger displacement) ஆசிரியரால் பிள்ளைகள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. அத்துடன் இவ்வகுப்பு பிரிப்புகளின் பின்புலத்தில் வகுப்புக்களின் பிரிவுத் தலைவர்களின் (Sectional heads) சித்து விளையாட்டே பாடசாலைகளிலே காணப்படுகின்றது. இதனால் மெல்லக்கற்கும் வகுப்பைப் பெறும் ஆசிரியர் அம் மாணவர்களை நச்சரிக்கவும் தண்டனை (corporal punishment) வழங்கவும் அல்லது இவர்களுக்கு ஒன்றும் விளங்காது என முழுமையாக கைவிடுகின்ற நிலையும் காணப்படுகின்றது. அது போலவே மீத் திறன் மாணவர்களின் பெற்றார் பிள்ளைகளுக்கு பிரத்தியேக வகுப்புகளை ஏற்பாடு செய்து கற்பிப்பதால் பாடசாலையில் இவ் வகுப்புக்களை நடாத்தும் பல ஆசிரியர்கள் அவர்களுக்கு எல்லாந் தெரியும் என்கின்ற நினைவில் எதுவும் வகுப்பில் கற்பிப்பதில்லை. மொத்தத்தில் பிரபல பாடசாலைகளின் கற்றல் அடைவுகளை தனியார் பிரத்தியேக வகுப்புக்களே ஈடுசெய்கின்றன. மேலும் தனியார் கல்வி நிலையங்களின் பிரபல ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடசாலை மாணவர் தம் பிரத்தியேக வகுப்பிற்கே சமூகமளிக்க வேண்டுமென நிரப்பந்திப்பதாக மாணவர்கள் முறையிடுகின்றனர். அத்துடன் தாம் வகுப்பறையில் கேட்கும் சந்தேகங்களுக்கும் எனது ரியூசனுக்குவா சொல்லித்தருகிறேன் என்கின்றனர். ஒரே ஆசிரியர் பாடசாலையில் ஏனோதானோ எனும் நிலையிலும் ரியூசனில் மிகத்திறமையாகவும் கற்பிக்கின்ற போக்கை கல்வியதிகாரிகள் கண்டுகொள்ளாததை எண்ணி மாணவர் விசனப்படுகின்றனர். இப் போக்குகள் மாணவர்க்கும் பாடசாலைக்குமிடையேயான பிளவுகளாக வெளித் தெரிகின்றன. இங்கும் மாணவர்களே கல்விச் சமூகத்தின் அடக்குமுறைக்கு பலியிடப்படுகின்றனர். ஒரு சமயம் பல பாடசாலைகளில் குறித்த வகுப்புகளுக்கு மாணவர்கள் சமூகமளிக்கவில்லை. இதன் பின்னணியில் பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புக்கள் இடம்பெற்றமை கண்டறியப்பட்டு மாணவர்களுக்கு பாடசாலைகளால் தண்டனை வழங்கப்பட்டது. மாறாக பிரத்தியேக வகுப்பில் கற்பித்த பிரபல ஆசிரியர்களுக்கு எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் கல்விப் புலத்தால் எடுபட்டதாக தெரியவில்லை. பரீட்சை வினாக்களுக்கு கூட தாம் கற்றுக்கொடுத்த விடயங்களையே சப்பித்தின்று அட்சரம் பிசகாமல் வாந்தி எடுக்க வேண்டும். என எதிர்பார்க்கும் ஆசிரியர்களும் அவ்வாறே ஆசிரியர்களிடையான போட்டியில் எதிராளியின் பெயரை (தன் பாடத்தை கற்பிக்கும் சகஆசிரியர்) பிள்ளை மேற்கோள் காட்டியெழுதியிருந்ததற்காக வினாக்களின் விடைகளுக்கு புள்ளியிடாத ஆசிரியர்களும் உள்ளனர்.

'மாதா பிதா குரு தெய்வம்' எனவும் 'தாரமும் குருவும் தலைவிதிப் படியே' எனவும் வாழ்வில் பட்டு நொந்தவர்கள் சொன்ன பழமொழிகளை கொண்டு விளங்கிக் கொள்ளலாம். இன்றைய பாடசாலைகள் பலவற்றில் பிள்ளை மையக்கல்வி, பிள்ளை நேயக்கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பற்றிய சிந்தனைகள் தெளிவாக இல்லை. பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகளை ஆசிரியர்கள் புரிந்து கொள்வதில்லை. மாறாக ஆசிரியர்கள் தம் தனியாள் வேறுபாடுகளை பிள்ளைகள் புரிந்து கொண்டு அதற்கு இயைய செயற்பட வேண்டும். என்பதற்கான அடாவடி, அத்துமீறல்கள், அடக்குமுறைகள், மன்றாட்டங்கள் நிறைந்தவொரு அணுகுமுறையையே இன்றைய பாடசாலை சமூகத்தில் காண முடிகிறது. இது பிள்ளைகள், ஆசிரியர்கள் மத்தியில் மாற்றங்கள் விளையாத போக்கை கோடிகாட்டுவதாய் அமைகிறது. ஆசிரியர்கள்,அதிகாரிகளின் கற்றல் பெறுபேற்றுத் தந்திரோபாயங்களுக்காக பலியிடப்படுகின்ற குழந்தைகளின் குரல்கள் வெளித்தெரியாமல் நசுக்கப்படுகின்றது. பரீட்சை மையக் கல்வியே நோக்காகக் கொண்டு அதற்காக பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொண்டு பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகளை நிராகரித்து அவர்களை பந்தயக் குதிரையாக்கி கல்வி மீது வெறுப்பேற்றுகின்றவொரு போக்கே இதன் விளைவாக பெறப்படுகின்றது. இதனால் கல்விக்கான அஞ்சலோட்டமாக வீடு, பாடசாலை, பிரத்தியேக வகுப்புக்கள் என்பவற்றில் ஏட்டுக்கல்வியை மட்டும் முன் நிறுத்தி செயற்படுவதைக் காண முடிகிறது. இந்த அக்கினிப் பரீட்ஷையில் வெற்றிபெற்று உயர் கல்வியின் பின் பெரும் பதவிகளில் உள்ளவர்களும் மேலும் சிலர் வெளிநாடுகளில் உயர்ந்த சம்பளத்தில் பணிபுரிபவர்களதும் சமூகப் பார்வையானது குன்றியதாகவே காணப்படுகின்றமை இவர்களின் பிள்ளைப்பராயத்தில் பன்மைத்துவ ஆற்றல் வளர்க்கப்படாமையின் வெளிப்பாடு எனவே கொள்ள முடியும். பரீட்சைப் பெறுபேறுகளை முக்கியப் படுத்தி அதுவே தமது வெளியீடாக பெருமை கொள்ளுகின்ற கல்வியியலாளர்கள் இக் கல்விமுறைமையின் மட்டுப்பாடுகள் தொடர்பில் அக்கறை அற்றவர்களாக காணப்படும் வரையில் பிள்ளைகளின் பண்புசார் விருத்தி மேம்பாடுகள் கேள்விக்குறியாகவே அமையும்.

பிள்ளைகளது தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப தம்மை மனவெழுச்சி ரீதியாக முகாமை செய்து கொள்ள இணைப்பாட செயற்பாடுகள் உதவமுடியும். இவை பாகுபாடின்றி அனைத்து மாணவர்களும் ஏதோ ஒரு துறையில் தம்மை ஈடுபடுத்த வாய்ப்பளிக்க வேண்டும். இதை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் பாடசாலை நிர்வாகமும் கருத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். இது நன்முறையில் பிள்ளைகளைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்படுமாயின் பாடசாலையில் மாணவரது பண்புசார் விருத்தி மேம்பாடடைய வாய்ப்புண்டாகும். நடைமுறையில் பாடசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுக்கள், அழகியல் செயற்பாடுகள், ஆற்றுகைகள், ஆலோசனை வழிகாட்டல் யாவும் பிள்ளைகளின் பன்மைத்துவ விருத்திக்கு பங்காற்றுவதிலும் பாடசாலைக்கான முதன்மை இடங்களே முக்கியத்துவப்படுத்தப்படுவதால் இனம் காணப்பட்ட பந்தயக் குதிரைகளே இங்கும் பயன்படுத்தப்படுகின்றன. அண்மையில் சில மாணவர்கள் க.பொ.த உயர்தர அனுமதிக்காக என்னோடு கலந்துரையாடினர். பாடசாலைக் காலங்களில் அப் பிள்ளைகளின் குழு விளையாட்டுக்களுக்கா மேலதிக வகுப்புக்களை கூடநிராகரித்து போட்டிகளில் ஈடுபடுத்தி பாடசாலைக்கு கிண்ணங்களைப் பெற்றுக்கொண்ட அதே பாடசாலை நிர்வாகம் உயர்வகுப்பு அனுமதியில் தன் பாடசாலையிலேயே தரம் ஒன்று முதல் கல்வி பயின்ற இம் மாணவர்களின் பெறுபேறுகளில், திருப்தியீனத்தை காட்டி வெளித்தள்ளியுள்ளது. இது பிள்ளைகளின் நலம் பேணும் தன்மை என்பதற்கு அப்பால் பாடசாலைகளில் நூறு வீத சித்தியை எட்டுகின்ற முகாமைத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு. அந்நூறு வீத பெறுபேற்றுச்சித்தியின் வரலாற்றை ஆராயாது பாராட்டுகின்ற மேலதிகாரிகளின் கவனத்திற்கும் உரியதாகுக. பத்தாம் தர வகுப்பிலேயே பல பாடசாலைகளில் பரீட்சைக்கு தோற்றமுடியாதவர்கள் என முத்திரை குத்தப்பட்டு இடைமறிக்கப்படும் பிள்ளைகள் மேலதிக கற்றல் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமலே பொருத்தமற்ற நடத்தையுடையவரென பாடசாலையால் துரத்தப்படுகின்றனர். அல்லது ஆசிரியர்களின் வசைமாரிகளின் மன உளைச்சலாலும் (mentally tortures), சரீர தண்டனைகளாலும் (corporal punishment) திட்டமிட்டே நிறுத்தப்படுகின்றனர். இது பரீட்சையில் மாணவர் தோற்றுவதை மட்டுப்பாடில் வைத்திருந்து கெட்டித்தனமான மாணவர்கள் மட்டும் தோற்ற அனுமதிப்பதால் நூறு வீத சித்தியை எட்டியதாக காட்டிக்கொள்ளும் தந்திரோபாயத்திற்கு உதவுகிறது.

இதன் பின் இடைவிலகல் (Drop outs) மாணவரை இணைப்பதற்கென்ற தோரணையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வேடிக்கையானவையாகும். அவை தொண்டு நிறுவனங்கள் வீசும் காசென்ற எலும்புத்துண்டுக்காகவா என்பதே வினாவாகும்? மாணவியின் தாயின் மறுமணத்தைக் காரணம் காட்டியே தரம் 11 பரீட்சைக்கு அனுமதி மறுத்த வகுதித் தலைவர், தாயின் ஒழுக்கசீர்கேட்டுக்காக மாணவனை இடைநிறுத்திய பிரதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், முறையற்ற விதத்தில் பிறந்த குழந்தைக்கு முதலாந்தர அனுமதி மறுத்த முதல்வர், குழு மோதலில் ஈடுபட்டமைக்காக ஸ்கூலிலிருந்து விடுகைப் பத்திரம் வழங்கிய அதிபர், காதலித்த மாணவர் பெயர்ப் பட்டியலை சுற்று நிருபமாக பாடசாலையின் அனைத்துப் பெற்றார்க்கும் பொதுக் கூட்டத்தில் வெளியிட்ட அதிபர், அதிபரால் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் வகுதித்தலைவரால் வகுப்பிலிருந்து விரட்டப்பட்ட மாணவன் என்பன சிறுவர் உரிமைகள், அடிப்படை உரிமை மீறல்கள் என்பன பாடசாலைகளில் நிகழ்காலத்தில் சர்வசாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கான சில எடுத்துக்காட்டுக்கள். இது பாடசாலை ஆசிரியர்களுக்கு உளவியற் கல்வி போதிக்கப்படுவதில் அர்த்தமிருக்கிறதா? என்பதுடன் கற்றல் என்பது நடத்தையில் நிலைத்திருக்கின்ற மாற்றம் என்ற உளவியல் கருத்தை சவால் செய்வதாகவும் அமைகின்றது. இது 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்' என்கிற நிலையையே தோற்றுவித்திருப்பது கள யதார்த்தமாகும்.

### சமுதாயச்சூழல்

மேலைத்தேய வாழ்க்கையின் இரு பெரும் பிரிவுகளான வலது, இடது சாரி சிந்தனைகளை உள்வாங்கிய நம் புத்திஜீவிகள் அதை நம்நாட்டிற்கேற்ப இயைபுபடுத்தாமல் மாற்றமின்றி திணிக்கின்ற அரைவேக்காட்டு சிந்தனையாளர்களால் வளரும் நாட்டின் இயல்பு திரிபுற்று, காகம் அன்னநடை பயிலச் சென்று தன்நடையும் மறந்த கதையாய் நிலை தொடர்கின்றது. இதனால் இந்நாடு வலதுசாரி நாட்டின் அபிவிருத்தி நிலைமையையோ இடதுசாரி நாட்டின் தன்மையையோ அடையாததோடு தேசியம் சார்ந்த முழுமையை கூட அடையவில்லை.

அண்மையில் பெரிய பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவருடன் கலந்துரையாடிய போது அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் சமூகமாற்றத்திற்காக நீண்டதூரம் பயணிக்க வேண்டிய தேவையை நிறுவுவதாய் அமைந்தது. அவர் தன்பாடசாலையின் ஒழுங்கான மாணவர் வரவை ஏற்படுத்துவதற்கு உடல் ரீதியான தண்டனைகளே நூறு வீதம் வெற்றியளிப்பதாகவும் கற்றலுக்கு ஊக்கப்படுத்துவதற்கு பிள்ளைகளை பெற்றோரதும் ஆசிரியர்களதும் கண்டிப்பான நச்சரிப்புக்களே வெற்றியளிக்கும் என நம்புகின்றார். மனிதன் என்பவன் சிந்திக்கும் பிராணி என்கின்ற அரிஸ்ரோட்டலின் வார்த்தைகளை இவர் முழுமையாக நிராகரிப்பதால் இவர் தற்காலத்தில் வாழ்ந்தாலும் இவரின் உண்மையான வாழ்க்கைக்காலம் அரிஸ்ரோட்டலுக்கு முந்தியது என்பதை மட்டுமே என்னால் புரிய முடிந்தது. அத்துடன் இத்தகையோரே கல்விச் சமூகத்தின் உயர் நிலையில் உள்ளோரால் நல்லதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் கருதப்படுகின்றமை வருந்தத்தக்கது. ஒரு சமூகத்தை வழிநடத்த முன்மாதிரியாக தொழிற்பட வேண்டிய முதல்வரின் நிலையே இதுவானால் சாதாரண பாமர மக்கள் விழிப்படைவதில் உள்ள சவால்களை விளங்கிக் கொள்ள வேண்டும். கடந்த முப்பது வருடகால யுத்தகாலத்தில் எந்த இரவிலும் ஒரு கன்னிப்பெண் தன்னந்தனியே சுதந்திரமாக நடமாடக்கூடிய சுதந்திரம் போராளிகள் பகுதிகளில் இருந்தது. ஆனால் இன்று மீள் குடியமர்வுப்பகுதிகளில் பிறழ்வு நடத்தைகளுக்கு பஞ்சமில்லை எனில் முப்பது வருடகாலத்தில் சமூகசீர்திருத்தங்களின் பெயரில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் சமூகத்தால் திணிப்புக்களாகவே புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். அதை அச்சமூகம் ஆக்கபூர்வமான நேரான விடயமாக கருதியிருந்தால், இன்று உலகத்திலேயே நல்லொழுக்கத்திற்கு உதாரணமாக சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக அச்சமூகம் இருந்திருக்கும். ஜப்பானில் இறுதியாக பாரிய சுனாமி தாக்கிய பின்னும் புக்குஷிமா அணுஉலையின் கதிர்வீச்சின் அனர்த்தவேளையின் பின்னும் மக்கள் உணவுக்காகவோ வேறு அடிப்படை தேவைகளுக்காகவோ அத்துமீறல்களில் ஈடுபடவில்லை. இது பண்புகள் நிறைந்தவொரு சமூகத்திறகான எடுத்துக்காட்டு மட்டுமல்ல பண்பென்ற விடயம் அச் சமூகத்திலே ஆரோக்கியமான விதமாக போதிக்கப்பட்டிருப்பதை விளங்கிக் கொள்வதற்கான நல்லதொரு எடுத்துக்காட்டு. தத்துவங்கள் உயர்ந்தவை எனினும் போதிக்கப்படும் விதத்திலேயே அதன் வெற்றி தோல்வி தங்கியுள்ளதை உணரமுடியும். உனக்கு ஒரு கன்னத்தில் ஒருவன் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு என்பதை போதிப்பதற்கு ஒருவனது இருகன்னத்திலும் அறைவதாக கற்பித்தல் செயற்பாடு அமையுமெனில் தத்துவத்தின் அர்த்தம் திரிபடைவதற்கு வாய்ப்பாகின்றது. வெறுமனே அழுத்தங்கள் தண்டனைகள் மட்டுமே ஒரு பண்பான சமூகத்தை உருவாக்கி விடாது. இவ் அதிகாரப்போக்கு துப்பாக்கிகளுக்குள் தோட்டா இருக்கும் வரைக்குமே சாத்தியமாகும். இங்கு தம்மீதான அழுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்கான நடிப்பே வெளிப்பாடாகும். எனவே உண்மையாகாது. உண்மையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

பண்பு பிறக்கவேண்டுமெனில் ஒருவன் தன்னை உணர வாய்ப்பளிக்க வேண்டும்.

அண்மையில் ரியூட்டரில் கொட்டில் ஒன்றில் பிளேட்டோவை பற்றிய கற்பித்தல் நடைபெற்ற போது 'கல்வியை காசுக்கு விற்பவர்கள் அறிவுப் பரத்தையர்கள்' என பிளோட்டோ குறிப்பிட்டார் என்று ஆசிரியர் கற்பித்தார். அந்நேரத்தில் இவ்விடயம் ஆசியரிடத்திலோ மாணவர் மத்தியிலோ எந்த சலனத்தையும் உண்டு பண்ணியதாக தெரியவில்லை. இன்றைய கல்விமுறை சமூகத்தை சிந்திக்க செய்யவில்லை. மாறாக மனனம் செய்து மீளப்பரீட்ஷையில் ஒப்புவிப்பதால் பெறுபேற்றுச் சான்றிதழை பெற்றுக் கொண்டு ஒரு வேலையில் சேர்ந்து வாழக்கையை ஓட்டுவதை குறியாக கொண்டுள்ள சமூகபிரகிருதிகளையே உருவாக்குகின்றது. இது கண்கள் கட்டப்பட்டு ஓட்டப்படுகின்ற ஐக்காவண்டிக் குதிரைகளாகவே பிள்ளைகளை உருவாக்குகின்றது. துரதிஸ்ட வசமாக இவ்வாறானவர்கள் சமூகத்தினை கொண்டு செலுத்தும் பதவிகளில் இருந்து சமூகப்பிரச்சினைகளில் தமக்கான ஆதாயத்தை திரட்டமுடியுமே அன்றி சமூகத்திற்காக நன்மைகள் எதனையும் செய்ய மாட்டார்கள்.

இச் சமூக களைகளிலிருந்து விடுபட்டு எம் குழந்தைகளின் எதிர் காலம் சுபீட்சமடைய ஒவ்வொரு தனிமனிதனது மனமாற்றமும் அவசியமாகின்றது. கண்காணிப்பு வலைப்பின்னல் தம் குழந்தைகள் தொடர்பில் பெற்றோரிடத்திலும் அவ்வாறே வீடுகளிடையேயும் பாடசாலைகளிடையேயும் சமூகநிறுவனங்களிடையேயும் கொடியெனப் பற்றிப்படர வேண்டும். இது விடயத்தில் எமது கைகளை எம் குழந்தைகளின் நல்லெதிர்காலத்திற்காக பிணைத்துக்கொள்ளுவோம். இது சமூகத் தின் அடிமட்டத்திலிருந்து கீழிருந்து மேலாக அனைவரிடமும் மாற்றமாக மலரட்டும்.

**நல்லாசிரியருக்குரிய குணநலன்கள்!**

நல்லாசிரியர் என்று யாரைக் குறிக்கிறோம்? சமூகத்தில் இயல்பாகவே ஆசிரியர்களுக்கு தனி மதிப்பு உண்டு. ஆசிரியர் நல்லாசிரியர் ஆகும் போது சிறப்புமதிப்பு வழங்கப்படுகிறது. முதலில் வழங்குபவர்கள் மாணாக்கர்களே மாணவர்களின் வழிபெற்றோர்களுக்கும் தெரிய வரும்போது நல்லாசிரியர்களின் நன்மதிப்பு சமூக அங்கீகாரம்பெற்று விடுகின்றது.

**சரி, நல்லாசிரியருக்குறிய குணநலன்கள் எப்படி இருக்க வேண்டும் ?**

முதலில், அவர் மாணவர் நலனுக்காகப் பாடுபடுபவராயிருத்தல் வேண்டும். வகுப்பறையின் உள்ளேயும் வெளியேயும் மாணவர்களுக்கு எவை நன்மை பயக்கும் விசயங்கள் என்று தீர்மானித்து அதற்காகப் போராடுபவரே நல்லாசிரியர் தகுதிக்கு உரியவவர் ஆவார். ஆசிரியரின் எந்த முடிவும் மாணவர்களிடன் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை விழிப்புணர்ந்து மிகச் சரியான, மாணவர்களின் உயர்வுக்குச் சாதகமான முடிவுகள் எடுக்கும் தீர்க்கச் சிந்தனை படைத்தவராயிருத்தல் வேண்டும். நல்லாசிரியர் இயல்பாகவே தன்னலமற்றவராவார். அவர்எப்போதுமே மாணவர்களுக்குத் தான் முன்னுரிமை வழங்குவார்.

இரண்டாவது, நல்லாசிரியர் என்பவர் மற்றவரை மதிக்கும் நற்பண்பு உடையவர். அவர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களை மதிக்கிறார்கள்

வகுப்பறையில் மாணவர்களின் செயலூக்கங்களையும் நிர்வாகத்தையும் மதிக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் பெற்றோர்களையும், சமூக அங்கத்தினரையும் மதிக்கிறார்கள். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கு உரிய தரத்தை சுயமதிப்பிட்டு தங்கள் துறையில் நிபுணத்துவம் பெறுகிறார்கள்.

மூன்றாவது யாதெனில், நல்லாசிரியர் தொடர்ந்து கற்கிறார். பொதுவாக தம்மைச் சுற்றி நடைபெறும் அனைத்துத் துறைகளிலும் ஓரளவு விசயஞானம் பெற்றவராயிருக்கிறார். அவர் தொடர்ந்து தம் துறையைச் சார்ந்த நூலகளை வாசித்து காலத்துக்கேற்பத் தயார்நிலையில் இருக்கிறார். அறிவுசார்ந்த விசயங்களில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டுகிறார்.

நான்காவது, நல்லாசிரியர் ஒரு நல்ல உரையாளராகவும் திகழ்கிறார். ஒரு கருத்தை சபையறிந்து நன்கு விளக்கும்ஆற்றல் மிக்கவராவார். அதே சமயத்தில், அவர் மற்றவர்களின் கருத்துக்களையும் நன்கு கேட்கிறார். மாணவராகட்டும் பெற்றோராகட்டும் அவர்கள் சொல்வதை நன்கு உள்வாங்கிக் கொள்கிறார். பிறகு சமயோசித உத்தியில் பிரச்னைகளுக்கு வழி காண்கிறார்.

இறுதியாக, கற்றல் தொடர்ந்து நிகழ மாணவர்களே பொறுப்பேற்க வேண்டும் எந்தனை வலியுறுத்துகிறார்.நல்லாசிரியர், மாணவர்களின் 'கற்றல் நோக்கங்கள் ' அடைவதற்கு அவர்களுடன் இணைந்தே செயல் திட்டங்கள் வகுக்கிறார். அவற்றை விவேகமான முறையில் செயல்படுத்தி 'கற்றல் இலக்கு' அடைவதற்கு மாணவர்களுக்கு எப்போதும் உதவுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!






உலகத்தில் அமைதியும் ஆன்மீக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.
* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.
* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**Easwaran Book Depot**
No. 126/1, Colombo Street, Kandy
Tel.: 081-2220820

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**விழுது - மட்டக்களப்பு**
இல 22, கலைமகள் வீதி,
நெச்சிமுனை, மட்டக்களப்பு
தொ.பே.இல - 065 - 2222500

**விழுது - திருகோணமலை**
81யு, ராஜவரோதயம் வீதி,
திருகோணமலை
தொ.பே.இல - 026 2224941

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**அறிவுநதி புத்தகசாலை**
இல 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
தொ.பே.இல.: 077 6737535

**Zeen Baby Care**
121B, Arm Mill Road,
Addalaichenai -01
Tel.: 077 3651138

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**பரணி புத்தகக் கூடம்**
நெல்லியடி ம.ம வீதி, நெல்லியடி
தொ.பே.இல - 077 5991949

**விழுது - புத்தளம்**
இல 24801 கொழும்பு வீதி,
தில்லையடி, புத்தளம்
தொ.பே.இல - 032 - 5740094

**விழுது - யாழ் மாவட்டம்**
இல 23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல - 021 2229866


Printed by
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo-06
kumbhlk@gmail.com

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under QD/49/News/2015


Digitized by Noolaham Foundation.